புதிய சமுதாயம்

KDN 10657

ஆசிரியர்: முருகு சுப்பிரமணியன்



ஏற்குமென் நெஞ்சம்

கல்லாடன்
சிங்கை

நித்தமு மாயிரம் நினைவுகள் நெஞ்சினில்
நின்றே உயிர்ப்பத னாலே
பித்தனைப் போலுமே பிதற்றினும், செந்தமிழ்ப்
பிறப்பென வந்தத னாலே
முத்தென ஒளிர்ந்திடும் முனைப்புட னென்வினை
முற்று மிருப்பத னாலே
வித்திட வேண்டிய வினைமிகு தொண்டினை
வேண்டியே ஏற்றதென் நெஞ்சம்!

வித்திய விதைகளின் விளைவினை நோக்கிடும்
வேட்கையைக் கொண்டஎன் வாழ்வில்
எத்தனை ஆயிரம் எதிர்ப்புகள் தோன்றினும்
எடுத்தவோர் முடிவினை விட்டு
நித்தமும் சாய்க்கடை நீந்தியே வாழ்ந்திடும்
நினைவிலை நெஞ்சினில்; அஃதில்
செத்துநான் மடிவதே சிறப்பென எண்ணியே
சேர்ந்தனன் கொள்கையைத் தொட்டு!

இத்தரை வாழ்ந்திடும் என்னினத் தார்க்கொளி
ஏற்றுதல் என்னுயிர்க் கொள்கை!
பித்தனைப் போலுமே பேசினும், கொள்கையைப்
பேணுவேன் என்னரும் மூச்சாய்!
நத்திப் பிழைப்பது நாயதன் வாழ்வென
நாணியே, என்னுயிர்க் கொள்கை
முத்திரை யோடுகண் மூடுமோர் சாவினை
முனைப்புடன் ஏற்குமென் நெஞ்சம்!

அட்டைப்படம்: மாயன்

எங்கள் அலுவலகம்:
131, ஜாலான் துவாங்கு
அப்துல் ரஹ்மான், [2-ஆவது மாடி]
கோலாலம்பூர் 01-08.
அஞ்சல் பெட்டி எண்: 2066,
தொலைபேசி: 80839.

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வ — குறள்

புதிய சமுதாயம்

மாதமிருமுறை மலரும் குடும்ப இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2008 மார்கழி 10
கம்பம் 1 ∴ (25-12-1977) ∴ குடும்பம் 19

சிறுகதைக் கருத்தரங்கு

மலாயா பல்கலைக் கழகத்தின் இந்தியப் பகுதி அடுத்த ஆண்டு ஏப்ரல் 8, 9 தேதிகளில் நடத்த இருக்கின்ற மலேசியத் தமிழ்ச் சிறுகதைக் கருத்தரங்கு நம் நாட்டுத் தமிழ் இலக்கியப் படைப்புக்களின் முறையான வளர்ச்சிக்குக் கைகொடுக்கும் சிறந்த பயனுள்ள முயற்சியாக அமையுமென்று எதிர்பார்க்கிறோம். பலஆண்டுகளுக்கு முன்பு மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கமும் மலாயா பல்கலைக் கழக இந்தியப் பகுதியும் இணைந்து, பேராசிரியர் கல்கி பற்றிய கருத்தரங்கு ஒன்றினை மிகவும் சிறப்பாக நடத்தியது நம் நினைவில் இன்றும் பசுமையாக இருக்கிறது. அக்கருத்தரங்கில் படிக்கப்பட்ட கட்டுரைகள் தனி நூலாக வெளிவந்து, கல்கியின் எழுத்துப்பணி பற்றிய ஒரு நல்ல திறனாய்வு முயற்சியாகவும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. அத்தகைய சிறப்பான பலனை இந்தச் சிறுகதைக் கருத்தரங்கமும் ஈட்டித் தருமென்று நம்புகிறோம்.

மலேசியத் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்களில் சிறுகதையும், கவிதையும் சிறப்பான வளர்ச்சியைக் கண்டுவருவது வெளிப்படை. இவ்வகையில் சிறுகதைத் துறையின் வளர்ச்சியையும் அமைப்பையும் முறையாகத் திறனாய்வு செய்கின்ற ஓர் அரிய வாய்ப்பை இக்கருத்தரங்கு ஏற்படுத்தித் தரவிருக்கிறது. இக்கருத்தரங்கு தன் குறிக்கோளில் வெற்றியடைய வேண்டுமானால் எழுத்தாளர்கள் அனைவரும் தங்கள் படைப்புக்கள் பற்றிய தகவல்களைக் கட்டுரை சமர்ப்பிக்கும் திறனாய்வாளர்களுக்கு எட்டும்படிச் செய்வது மிக முக்கியமாகும். புத்தக வடிவில் வராத எழுத்துப்படிகளைக் கட்டுரையாளர்கள் திரட்டுவதற்கும் எழுத்தாளர்கள் துணை புரிவது இன்றியமையாதது. அதுமட்டுமன்றி, கருத்தரங்கில் எழுத்தாளர்கள் பெருவாரியாகக் கலந்துகொண்டு கருத்துப் பரிமாற்றம் சிறப்பாக நடைபெறவும் ஆதரவு நல்க வேண்டும். ஏனோ தானோ என்று ஒதுங்கி இருந்துவிட்டுப் பிறகு குறை சொல்வதில் பயனில்லை. அதனால்தான் இந்த வாய்ப்பை எழுத்தாளர்கள் முறையாக, முனைப்பாக பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

மலேசியத் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்களைப் பற்றித் தேசிய மொழி எழுத்தாளர்களிடையே

நிலவிவருகிற தப்பெண்ணங்களைப் போக்குவதற்கும் இக்கருத்தரங்கு தீர்க்கமானமுறையில் துணைபுரிகின்ற வாய்ப்பு இருப்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். அண்மையில் நடைபெற்ற ஆசியான் எழுத்தாளர் கருத்தரங்கில் கபேனாவின் தலைவர் பேராசிரியர் டாக்டர் இஸ்மாயில் ஹூசேன் ஆற்றிய உரையில், மலேசியத் தமிழ்ப் படைப்பிலக்கியம் பற்றித் தவறான கருத்துக்களைக் கூறியிருப்பது, தேசிய மொழி எழுத்தாளரிடையே இன்னும் போதிய அளவுநமது எழுத்தாளர்களைப் பற்றி முறையாகவும் சரியாகவும் எடுத்துரைக்கப்படவில்லை என்பதையே காட்டுகிறது.

இக்கருத்தரங்கின் ஒரு பகுதி தேசிய மொழியில் நடைபெறவிருப்பதால் அப்பகுதியில் படிக்கப்படுகின்ற கட்டுரைகளும், கருத்துப்பரிமாற்றமும் தமிழ்ச் சிறுகதைகள் பற்றிய உண்மையான படப்பிடிப்பைத் தேசிய மொழி எழுத்தாளர்களுக்கு உணர்த்துவதில் வெற்றியடையுமென்று எதிர்பார்க்கலாம். ஆகவே இக்கருத்தரங்கின் வெற்றிக்குத் தமிழ் எழுத்தாளர்கள் அனைவரும் தங்களின் மனங்கனிந்த ஆதரவை நல்க முன்வரவேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறோம்.

மரண விபத்து

பினாங்கிலிருந்து கோலாலம்பூருக்கு வந்துகொண்டிருந்த மாஸ் 737 போயிங் விமானம் கடத்தல் பேர்வழிகளின் மிரட்டலுக்கு இலக்காகி ஜோகூர்பாருக்கருகே தஞ்சோங் குபாங்கில் விபத்துக்குள்ளாகி அதில் பிரயாணம் செய்த விவசாயத்துறை அமைச்சர் டத்தோ அலி ஹாஜி அகமது உட்பட 100 பிரயாணிகளும் கூண்டோடு உருத்தெரியாமல், அடையாளம் காணமுடியாமல் பலியாகி இருப்பது மலேசியாவின் விமானச் சேவை வரலாற்றில் நீங்காத சோக முத்திரையைப் பதித்துவிட்டது. விமான விபத்துக்களில் ஒருவர் இருவர் கூட உயிர் தப்பிப்பிழைக்காத இத்தகைய

படுமோசமான பயங்கர விபத்தை மலேசிய மண்ணில் காண நேர்ந்ததும், இவ்விபத்தில் மலேசியாவின் அரும் புதல்வர்களும் புதல்விகளும் ஒருங்கே மாண்டிருக்கும் பரிதாபமும் நமது நெஞ்சங்களை நெடுங்காலத்திற்கு வேதனையால் உலுக்கிக் கொண்டிருக்கும்.

எப்படி இந்த விபத்து நேர்ந்தது என்பதைக் கண்டறிவதற்கு அரசாங்கம் நடத்துகிற விசாரணைகள் துணைபுரியுமென்று எதிர்பார்க்கலாம். எதிர்காலத்தில் இத்தகைய விபத்துக்கள் நேரிடாதபடி விமான நிலையங்களில் முழுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படுமென்று தொடர்புத்துறை அமைச்சர் டான்ஸ்ரீ மாணிக்கவாசகம் உறுதியளித்திருப்பது வரவேற்கத்தக்கது. விமானப் பயணங்கள் அதிகரித்து வருகிற இவ்வேளையில் பயணிகளின் நம்பிக்கை பாதிப்பு அடையாதபடி எச்சரிக்கையாக அரசாங்கமும் மாஸ் நிறுவனமும் பாதுகாப்புக்குறித்துத் தீவிர கவனமும் செலுத்திச் செயலில் இறங்குவது இன்றியமையாதது.

இந்த விமான விபத்தில் உருத்தெரியாமல்– முகந்தெரியாமல் மரித்துவிட்ட எல்லா நல்லுயிர்களின் சடலங்களையும் பொதுவான கல்லறையில் அடக்கம் செய்து அங்கு எல்லாச் சமய சம்பிரதாயங்களும் முறையாக நடைபெறுவதற்கு அரசாங்கம் செய்திருந்த ஏற்பாடு எல்லாருடைய மனத்தையும் நெகிழச் செய்துவிட்டது. அங்கு எழுப்பப்படவிருக்கும் நினைவுச்சின்னம் விமானக் கடத்தல்களையும், விமான விபத்துக்களையும் முறியடிக்கின்ற மன வலிமையை மனிதகுலத்துக்கு வழங்கிவருகின்ற நிலைக்களமாகத் திகழுமென்று நம்புகிறோம்.

அனைத்துலக ஏடுகள்


மலேசியாவைப் பற்றித் தப்பும் தவறுமாக எழுதிவருகின்ற அனைத்துலக ஏடுகளின் விநியோகத்தைத் தடைசெய்ய அரசாங்கம் தயங்காது என்று உள்துறைத் துணையமைச்சர் டத்தோ ஷரீப் அகமது எச்சரித்திருக்கிறார். அண்மையில் வெளிவந்த பிரபலமான அனைத்துலக வார இதழ் ஒன்று தேசிய முன்னணி அரசாங்கத்தில் சீன அமைச்சர் ஒருவர் மட்டுமே இருப்பதாகக் குறிப்பிட்டிருப்பதைச் சுட்டிக்காட்டி இத்தகைய உண்மைக்கு மாறான புரளிகளை, மலேசியாவைக் களங்கப்படுத்துகிற முறையில் தொடர்ந்து பரப்பி வருகிற வெளிநாட்டு ஏடு மீது அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமென்று துணையமைச்சர் குறிப்பிட்டிருப்பது நியாயமே ஆகும்.

குறிப்பாக மலேசியா போன்ற வளர்ச்சியடைந்துவரும் நாடுகளைப் பற்றிப் பிரபலமான அனைத்துலக ஏடுகள் பொறுப்பற்ற முறையில் இவ்வாறு பொய்யான தகவல்களை அவ்வப்போது பரப்பி வருவது இயல்பாகிவிட்டது. பரபரப்பான செய்திகளைக் கொடுக்க வேண்டும் என்னும் நோக்கத்தில் அரையும் குறையுமாகக் காதில் விழுகின்ற தகவல்களையெல்லாம் அவை உண்மையா என்று சோதித்துப் பார்க்காமல் எழுதுவது பத்திரிகையின் விற்பனைக்கு உதவக்கூடுமே ஒழிய அந்தப் பத்திரிகை மீது குறிப்பிட்ட நாடுகளில் இருந்துவரும் நம்பிக்கையைப் பெரிதும் குறைத்துவிடும். அத்துடன் உலகம் முழுவதும் பல லட்சம் பிரதிகள் விற்பனையாகும் இந்த ஏடுகள் பரப்புகின்ற பொய்ப் பிரச்சாரம் குறிப்பிட்ட ஒரு நாட்டின் நற்பெயரை எந்த அளவுக்குக் கெடுக்கும் என்பதையும் இந்த ஏடுகள் உணருவதற்குத் தவறி விடுகின்றன.

இத்தகைய ஏடுகள் குறித்து மலேசிய அரசாங்கம் கவனமாக இருப்பதும் உடனுக்குடன் அவற்றில் வருகின்ற பொய்த் தகவல்களுக்குத் தக்க மறுப்புக்களைக் கொடுப்பதும் முக்கியமாகும். இவ்வகையில் துணையமைச்சரின் எச்சரிக்கை இத்தகைய ஏடுகளின் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்துமென்று நம்புகிறோம்.

புதிய சமுதாயம்
த.பெ.எண்: 2066, கோலாலம்பூர். தொலைபேசி: 80839

கிறிஸ்துமஸ் பெருநாளிலே..!



சங்கை வி. ஏ. செல்லையா
போதகர்

விதவிதமான ஆடை ஆபரணங்களையும், புத்தகங்களையும், வித்தாரப் பத்திரிகைகளையும், விநோத ஓவியங்களையும், சொகுசான நாற்காலிமேசைகளையும், அடுக்கடுக்கான அலங்காரப் பாத்திரங்களையும், நவீன வாத்தியக் கருவிகளையும் வாங்கி வீட்டை நிரப்புகிறோம். அதோடு, வேதாகமத்துக்கு, வேதசம்பந்தமான புத்தகங்களுக்கு, மார்க்கப் பத்திரிகைகளுக்கு, மார்க்கப்படங்களுக்கு, வேதாகமப் பஞ்சாங்கங்களுக்கு நம்மில் இடமுண்டா? நம் வீடுகளில் கடவுளுக்கு இடமுண்டா?

லௌகீக காரியத்துக்கும், சமய தருமத்துக்கும் நமது பணத்தை எவ்விதம் செலவிடுகிறோம்? செயற்கை அழகுக்கும், உல்லாசங்களுக்கும், பானபோசனங்களுக்கும், பேர்பிரஸ்தாபங்களுக்கும் சடங்காச்சாரங்களுக்கு, கை கூசாமல் நம் பணத்தை விரயமாக்குகிறோம். ஆனால், ஆலய அபிவிருத்திக்கும், அனாதையர் வயோதிபர் பரோபகாரத்துக்கும், வித்தியாசாலை, வைத்தியசாலை கட்டிட நிதிக்கும் சொற்பப்பண உதவிக்கு வந்தால் சாக்குப்போக்குச் சொல்லுகிறோம். தர்க்கங்கள் செய்து பலப்பல கேள்விகள் போட்டு ஏளனஞ் செய்கிறோம். இழுத்தடிக்கிறோம். நம் மாதாந்திரக் கணக்குப் புத்தகங்களில் கடவுளுக்கு முதலிடம் உண்டா? அல்லது செலவு போக மிஞ்சின காசைக் கடவுகளுக்குப் பிச்சையிடுகிறோமா?

இப்பொழுதும் உலகில் அங்கும் இங்கும் ஓடி ஆடி உலகத்தையே கட்டி அழுவது போல சதா உழைக்கிறோம். வேலை வேலை, பணம் பணம் என்று தவித்து சமாதானமில்லாமல், திருப்தியில்லாமல் உலகத்தோடு போராடுகிறோம். ஆனால் தேவாலய ஆராதனைக்குப்போய்வர, தேவனை நினைக்க நேரமில்லாமல் போய்விடுகிறது. கோவிலுக்குப் போக வேண்டிய நேரத்தில்தான் தீராத நோயும், மண்டையடியும் வருகிறது. வராத விருந்தாளிகளும் வந்துவிடுகின்றனர். கனவிலும் நினையாத ஜோலிகளும் வந்துவிடுகின்றன. வேடிக்கைகள், விளையாட்டுக்கள் பார்க்க பங்கெடுக்க நேரமிருக்கிறது.

ஆலயத்துக்கு, ஆராதனைக்கு நேரமில்லை ... பார்க்க புத்தகங்களை பார்க்க நேரமில்லை. பூகம்பம், யுத்தம், வெள்ளம், பசி, பட்டினி, பயங்கர விபத்துக்கள், வியாதி, வேதனை, துன்பம், துக்கம், மரணம் முதலியவற்றிலிருந்து நம்மை விலக்கிக் காப்பாற்றி, அன்றாட ஆகாரத்தையும் சுகத்தையுங்கொடுத்து வழி நடத்திவருகிற சிருஷ்டி கர்த்தாவை நினைத்து நன்றிகூறி வணங்க நேரமுண்டா?

கடவுள் அன்பாயிருக்கிறார். கடவுளின் பிள்ளைகளும் ஒருவருக்கொருவர் அன்பாயிருக்கவேண்டும். மனிதன் கடவுளை நேசிப்பதோடு அவருடைய பிள்ளைகளையும் சமமாய் நேசிக்க வேண்டும். அதோடு மனிதன் மனிதனை மாத்திரம் நேசித்துக் கொண்டு கடவுளை மறந்துவிடக் கூடாது.

"ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது; துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள். சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்: அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள். இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள். சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர்கள் எனக் கருதப் படுவார்கள்!" என்று போதித்தது மாத்திரமல்ல, அதன்படி தன் ஜீவியத்தில் சாதித்த இயேசு கிறிஸ்துவின் போதனைகளைப்பின்பற்ற இக்கிறிஸ்மஸ் பெருநாளில் கிறிஸ்து மக்கள் அனைவரும் உறுதி பூணுவோமாக!

அன்புக்கு...

ஜெயராஜ் சூசை, கிள்ளான்



டிசம்பர் 25-ஆம் தேதி, உலகெங்கும் உள்ள கிறிஸ்தவ சமயத்தவர்களுக்கு ஒரு முக்கியமான பொன்னான நாள். ஆம்! அன்றுதான் உலக சமாதான நாயகரான, இயேசு பிரான் இப்புவியில் மானிடராய் உதித்தார்.


புனித கன்னி மரியாளுக்கு, பரிசுத்த ஆவியினால் பாலகனாய் அனுப்பப்பட்டவர் இயேசு பிரான். கடும்குளிரில் ஒரு மாட்டுத்தொழுவத்தில் பிறந்தவர்தான் ரட்சகர் இயேசு.

கிறிஸ்மஸ் பண்டிகை மலேசியாவில் உள்ள கிறிஸ்தவர்களால் உவகையுடன் கொண்டாடப்படுகிறது. கிறிஸ்மஸ் பண்டிகைக்கு ஒரு வாரத்திற்கு முன்பே வீட்டை சுத்தமாகக் கழுவி, கிறிஸ்மஸ் அலங்காரங்களைச் செய்துவிடுவார்கள் கிறிஸ்மஸ் அலங்காரங்களில் முதன்மை வகிப்பது கிறிஸ்மஸ் மரமாகும். அலங்கார விளக்குகளால் சுற்றப்படும் ஒரு கிறிஸ்மஸ் மரத்தில் மேலும் சில அலங்காரப் பொருட்களைத் தொங்க விடுவார்கள். மரத்தின் உச்சியில் பெரிய நட்சத்திரம் ஒன்று, நல்ல வேலைப்பாடுகளுடன் செய்து வைக்கப்படும். கிறிஸ்து பிறந்த தினத்தில் ஒரு பெரிய வால் நட்சத்திரம், "பெத்லேகேம்" நகரில் தோன்றி மறைந்ததைக் குறிக்கவே இப்படிச் செய்யப்படுகிறது.

கிறிஸ்மஸ் மரத்தினடியில் பரிசுப் பொருட்களும் வைக்கப்படுவது வழக்கம். வருடத்திற்கொருமுறை கொண்டாடப்படும் இந்தப் புனிதமான நாளில், குடும்பத்தினருடன் ... வெளி ... உறவினர்களுக்கும் பரிசுகள் வழங்குவார்கள். வீட்டுக்குள்ளும், வெளியிலும் அலங்கார விளக்குகள் சுற்றப்பட்டிருக்கும். கிறிஸ்மஸ் பண்டிகைக்கு முதல்நாள் இரவு எல்லாக் கிறிஸ்தவ தேவாலயங்களிலும், இயேசுவின் பிறப்பைக் குறிக்கும் வகையில் சிறப்புப் பிரார்த்தனைகள் நடத்தப்படும். எல்லா தேவாலயங்களிலும் மக்கள், கூட்டம் கூட்டமாக தங்களின் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் வகையில் பூசையில் கலந்து கொள்வார்கள்.

கிறிஸ்மஸ் தினத்தன்று தங்கள் வீட்டிற்குவரும் உறவினர்களுக்கு கிறிஸ்மஸ் வாழ்த்தை தெரிவிப்பதோடு, இந்திய, சீன, மலாய் நண்பர்களையும் தங்களின் அன்பான உபசரிப்பில் மகிழ்ச்சி படுத்துவார்கள். மலேசியாவில் "கிறிஸ்மஸ்" சமயப் பண்டிகை என்று ஒதுக்கப்படாமல் எல்லா இனத்தவராலும் ஒற்றுமையாகவே கொண்டாடப்படுகிறது. மலேசியாவில் இம்மாதிரியான பண்டிகைகள் ஒற்றுமையை நல்லெண்ணத்தை வளர்க்கப் பெரிதும் துணை புரிகின்றன. இயேசு பிரானின் பொன்மொழிகள் யாரும் எளிதில் மறக்க முடியாத ஒன்று. "தன்னைப்போலப் பிறரையும் நேசி" என்று இரட்சகர் இயேசு கூறியிருப்பதுபோல, மலேசியர்களாகிய நாமும் நல்ல புரிந்துணர்வுடன், இயேசுவின் பொன்மொழிக்கேற்ப வாழ்ந்து வருவோமானால், பொறுமையின் சின்னமான நம் இயேசுவின் அன்புக்குப் பாத்திரமானவர்களாய் நிச்சயம் இருப்போம்.

ஒரு கலைக்குழு தமிழ்நாடு செல்கிறது




எம். ஜி. பண்டிதன்.

"நான் அண்மையில் தமிழ் நாட்டுக்குச் சென்றிருந்தபோது அங்கு வானொலி, தொலைக்காட்சியில் பேட்டியளிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அப்போது, "மலேசியாவிலுள்ள தமிழர்களுக்குத் தமிழ் தெரியுமா?" என்று என்னிடம் கேட்கப்பட்டபோது நான் அதிர்ச்சி அடைந்தேன்.

"இன்னும் சிலகாலம் போனால் மலேசியாவில் தமிழர்கள் இருக்கிறார்களா?" என்னும் கேள்வி எழுந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்று அப்போது எண்ணிக் கொண்டேன்.

"தமிழகத்தில் இப்படிக் கேட்கப்படுகிறது என்றால் அதற்கு அவர்களிடம் குறையில்லை. நம்மை-நமது கலை, இலக்கிய வளர்ச்சியை அவர்களுக்கு அறிமுகப்படுத்துவதில் அவ்வளவாக முயற்சி எடுக்காத நம்மிடம்தான் குறை என்ற எண்ணம் அப்போது ஏற்பட்டது. எப்படியாவது மலேசியாவிலிருந்து தமிழ்க் கலைஞர்களைத் தமிழகத்திற்கு அழைத்துச் சென்று நமது கலை வளர்ச்சியை முடிந்த அளவுக்குக் காட்டி விடவேண்டும் என்று அன்றே முடிவுக்கு வந்தேன் அதன் முயற்சிதான் இது."

தமிழகத்திற்குக் கலைப்பயணம் மேற்கொண்டு ஜனவரி மாதம் முதல் வாரத்தில் செல்லும் 40 பேர் கொண்ட மலேசியக் கலைக் குழுவுக்குத் தலைமை தாங்கிச் செல்லும் திரு எம். ஜி. பண்டிதன், கலைப் பயணம் போவதற்கான அடிப்படைக் காரணத்தை மேற்கண்டவாறு கூறினார்.



பேரன்: தாத்தா, நாம் இறந்து போனால் எங்கே போவோம்?

தாத்தா: மேலே போவோம்.

பேரன்: விமானத்தில் இறந்து போனால்?

தாத்தா: ..... ?

இதுவரை இங்கிருந்து தமிழகத்தில் கலை நிகழ்ச்சிகள் நடத்த எந்தக் குழுவும் சென்றதில்லை. இரத்தப் பேய், கடாரம் போன்ற நாடகங்களை நடத்த முறையே முபன் புரொடக்ஷன்ஸார், மலேசியத் தமிழர் கலைமன்றத்தார் ஆகியோர் தமிழகம் சென்று வந்துள்ளனர். இவை நாடகக் குழுககளாகும். ஆனால் திரு. எம். ஜி. பண்டிதன் தலைமையில் செல்லும் மலேசியக் கலாச்சாரக் குழு, தமிழகத் திரைப்பட நட்சத்திரங்கள் இங்கு கலைநிகழ்ச்சிகளை நடத்தினார்களே, அதனைப் போன்று அங்கு நிகழ்ச்சிகளை நடத்தச் செல்லும் குழுவாகும். அந்த நிகழ்ச்சிகள் யாவும் மலேசியப் பின்னணியைக் கொண்டவையாக இருக்கும்.

இந்த விவரத்தைக் கூறிய திரு. பண்டிதனிடம் "கலைக் குழுவில் மலேசியாவில் புகழ்பெற்ற நமது கலைஞர்கள் இடம் பெற்றிருக்கிறார்களா?" என்று கேட்டேன். அதற்கு அவர் தந்த விளக்கம்:-

"செந்திலாதிபன், வி. ஐ. ஸ்டான்லி முதலான நகைச்சுவை நடிகர்கள், வி. சாரங்கபாணி, லாரன்ஸ், தனலட்சுமி, இலட்சுமி மீனாட்சி முதலிய சிறந்த பாடகர்-பாடகிகள். கண்ணகி-மணிமேகலை சகோதரிகள் முதலிய நடனமணிகள்-இப்படிப் புகழ்பெற்ற பலர் அக்குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

"குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய ஒன்று, இக்கலைக் குழுவில் தோட்டப்புறங்களைச் சேர்ந்த கலைஞர்களும் இடம் பெற்றுள்ளனர் என்பதாகும். அத்துடன் இசை மலர் இசைக் குழுவினர் தமிழகத்தில் எங்களின் நிகழ்ச்சிகளில் இன்னிசை வழங்கவிருக்கின்றனர்."

"தமிழ்நாட்டில் தங்கள் நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்பவர்கள் யார்?"

"நாடகக் காவலர் மனோகர் தான் எங்கள் நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்கிறார். சென்னை, மதுரை, திருச்சி, பெங்களூர், கோயம்புத்தூர் போன்ற நகரங்களில் நிகழ்ச்சிகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. சுமார் மூன்று வாரங்கள் அங்குத் தங்கியிருப்போம்."

"உங்களுடைய நிகழ்ச்சிகள் மூலம் கிடைக்கும் வசூலை என்ன செய்வீர்கள்?"

"நாங்கள் சம்பாதிக்க அங்குச் செல்லவில்லை. நமது தமிழ்க் கலைஞர்களைத் தமிழக மக்களுக்கு அறிமுகப்படுத்தவே செல்கிறோம். அதனால் கிடைக்கும் வசூலை புயல்-வெள்ள நிவாரண நிதிக்கு வழங்கிவிடுவோம்" என்று திரு. பண்டிதன் கூறியபோது ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கும் அவரின் திட்டத்திற்குப் பாராட்டுத் தெரிவித்தேன். அந்த நிகழ்ச்சிகள் "ஓகோ" என்று நடந்து வசூலைப் பெருக்க வேண்டும் என்றும் வாழ்த்தினேன்.

அதே வேளையில் எனக்கு ஒரு சந்தேகம். வெள்ளம்-புயல்நிவாரண நிதிக்கு இவர்கள் வழங்குவது ஒரு புறம் இருக்கட்டும். 40 பேரும் இங்கிருந்து செல்வதென்றால் செலவு என்ன கொஞ்சநஞ்சமா வரும்? அவரவர் செலவை அவரவர் கவனித்துக் கொள்வதா? குழுவே எல்லாருக்கும் செலவு செய்யுமா? பண்டிதன் அனைவருக்கும் பணம் தருவாரா? அவரிடம் விளக்கம் கேட்டேன்.

நெகரா அரங்கிலே...!

"கலைப் பயணத்திற்குச் சுமார் $45.000 செலவு வரும் என்று நம்புகிறேன். இந்தப் பணத்தைப் பெரும்பாலும் இங்குக் கலை நிகழ்ச்சிகள் நடத்தியே திரட்டி வருகிறோம். அதற்கெல்லாம் சிகரமாக ஜனவரி 4-ஆம் தேதி கோலாலம்பூர் நெகரா அரங்கில் மாபெரிய அளவில் கலை நிகழ்ச்சியை நடத்துகிறோம்.

"இந்த நிகழ்ச்சியில் சுங்கைப் பட்டாணி, ஈப்போ, பினாங்கு, தெலுக்கான்சன், சிங்கப்பூர் கலைஞருடன் மற்றும் மலேசியாவின் பிரபல கலைஞர்களும் கலந்து கொள்வார்கள். சுருக்கமாகச் சொல்லப் போனால் முதல் தடவையாக நெகரா அரங்கில் நடைபெறப்போகும் உள்ளூர் இந்தியக் கலைஞர்களின் நிகழ்ச்சி என்பதால் என்னைப் பொறுத்தவரையிலும், மலேசிய இந்தியக் கலை வரலாற்றைப் பொறுத்த மட்டிலும் "ஜனவரி 4 கலை நிகழ்ச்சி" ஒரு வரலாறு படைக்கும் என்று நம்புகிறேன். அதற்குப் பொது மக்களின் ஆதரவு பூரணமாகக் கிட்டும் என்னும் நம்பிக்கையும் எனக்கு உண்டு" என்றார் திரு. பண்டிதன்.

ஜனவரி 4 கலை நிகழ்ச்சியின் வெற்றி, தமிழகத்திற்கு நமது கலைஞர்கள் செல்வதற்குரிய வாய்ப்பைப் பிரகாசமாக்கும். தமிழகத்தில் நடைபெறப்போகும் அவர்களின் கலை நிகழ்ச்சிகளின் வெற்றி, மலேயத் தமிழ்க் கலையுலக வளர்ச்சியைத் தமிழ் நாட்டு மக்கள் தெரிந்து கொள்ளும் வாய்ப்பை அதிகமாக்கும்.

எல்லாவற்றுக்கும் மேலாக இதுகாறும் கலைஞர்களையும் கலை நிகழ்ச்சிகளையும் தமிழ் நாட்டிலிருந்து இறக்குமதி செய்துவந்த நாம், இங்கிருந்து நமது கலைஞர்களையும் கலைகளையும் ஏற்றுமதி செய்யத் துவங்கியிருக்கிறோமே, அது நம்முடைய வளர்ச்சியைக் குறிக்கும் செயலல்லவா?

பாதாசன்



பாலர் பள்ளிகள்

மு. சுப்பிரமணியம், தஜலநகர்

அட்டைப் படத்தில் செந்தூல் தம்புசாமிப்பிள்ளை தமிழ்ப்பள்ளியின் பாலர் வகுப்பு மாணவ மாணவியரில் சிலர்.

இன்று பெரிய நகரங்களிலும் கிராமங்களிலும் இளம் பாலர் வகுப்புக்கள் பரவலாக நடத்தப்படுகின்றன. நகரங்களில் நடைபெறும் பாலர் வகுப்புக்கள் தனியாரால் ஆதாயத்தைக் குறிக்கோளாகக் கொண்டு நடத்தப்படுகின்றன. ஆனால் கிராமங்களில் நடத்தப்படும் பாலர் வகுப்புக்கள், அரசாங்கத்தின் மேற்பார்வையில் நடத்தப்படுகின்றன.

சமீபகாலமாக ஒருசில தமிழ்ப் பள்ளிகளில்பள்ளி நிர்வாகத்தின்கீழ் ஆதாயம் கருதாமல் தமிழ்ப் பிள்ளைகளுக்கு உதவி செய்யும் நோக்கத்துடன் பாலர் வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன.

பள்ளிக்குச் செல்லும் அகவையை அடைந்தவுடன் முதன் முதல் பள்ளிக்குச் செல்லும் குழந்தை ஏதோ ஒரு புது உலகில் புகுவது போன்ற பிரமையை அடைகின்றது. அதனால் ஆரம்பமே, அக்குழந்தையின் கல்வி தொடக்கத்திற்கு ஒரு சுமையாக தோன்றச் செய்கிறது.

பிள்ளைகள் பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்ற உடன் உள்ளத்தில் உத்வேகமும் முகத்தில் மகிழ்ச்சியும் தோன்ற, "பள்ளிக்குப் போகிறேன்" என்று கூறிக்கொண்டு செல்லவேண்டும் என்ற ஓர் அடிப்படையை உண்டுபண்ணவேண்டும் என்ற நன்நோக்கோடுதான் இவ் வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன.

அத்துடன் பாலர் வகுப்புக்களில் பிள்ளைகள், பாடல், கதை, சித்திரம்; கைவேலை போன்ற பாடங்களையே தாங்கள் விரும்பும் வண்ணம் கற்கின்றனர்.

ஆடல், பாடல்கள்மூலம் பிள்ளைகள் மன மகிழ்ச்சியும் உற்சாகமும் கொள்வதோடு, பள்ளிக்கூடம் ஒரு சிறைக்கூடம் என்பதை மறந்து பள்ளிக்கூடம் அறிவைத் தரும் ஒரு கலைக்கூடம் என்ற எண்ணத்தை ஏற்படுத்தத் துணை புரிகின்றன. அத்துடன் நாவிற்கும் வாய் அசைவிற்கும் பயிற்சி அளிக்கின்றன.

பிள்ளைகளின் கை நரம்புகள் பண்படாத நிலையில் இருக்கும். சித்திரம், கைவேலை போன்ற பாடங்களினால் கை விரல்களிலுள்ள தசைநார்களும் நரம்புகளும் பண்பட்டு பிற்காலத்திய பள்ளி வாழ்க்கையில் எழுதுவதற்கும் வரைவதற்கும் பேருதவியாக அமைகின்றன.

மேலே கூறப்பட்ட ஒரு சில எடுத்துக்காட்டுகளின் மூலம் இளம் பாலர் வகுப்புக்களின் முக்கியத்துவம் என்ன என்பதை ஓரளவு யூகித்தறியலாம்.

அத்துடன் இளம் பாலர் வகுப்புக்களுக்குச் செல்லும் பிள்ளைகள் ஓரளவிற்கு இலக்கங்களை எண்ணவும் எழுதவும் விளையாட்டு முறையில் அறிந்துகொள்ள வாய்ப்பு வழங்கப்படுகின்றது. மேலும் பதினொரு கணக்கு எழுத்துக்களையும் புரிந்துகொள்ளவும் சந்தர்ப்பமும் வாய்ப்பும் வழங்கப்படுகின்றது.

இளம் பாலர் வகுப்பின் முக்கிய நோக்கம், பிள்ளைகளின் உள்ளத்தில் உள்ள அச்சத்தைப் போக்கி நம்பிக்கையையும் ஆர்வத்தையும் ஏற்படுத்துவதேயாகும்.

இக்காலத்தில் வசதிபடைத்த பெற்றோர்கள். தங்கள் பிள்ளைகளை இளம் பாலர் வகுப்புக்களுக்கு அனுப்பி, கல்வியின் அடிப்படை நோக்கத்தை வெற்றிபெறச் செய்கின்றனர். அதனால் வசதிபடைத்த குடும்பங்களிலிருந்து பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் கல்வியில் சிறந்துவிளங்குகின்றனர். இளம் பாலர் வகுப்பிற்குச் செல்லும் பிள்ளைகள் கல்வியில் சிறந்துவிளங்குகின்றனர்.

சிறுகதைத் திறனாய்வு

மலேசியத் தமிழ் இலக்கிய உலகில் சிறுகதை இன்று ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. உரை நடை இலக்கியத்தைப் பொறுத்த மட்டில் சிறுகதை முதல் இடத்தைப் பெற்றுள்ளது என்றே கூறலாம். எனினும் இச்சிறுகதையின் வளர்ச்சியைப் பற்றியோ அமைப்பைப் பற்றியோ முறையான திறனாய்வு இன்னும் உரிய வளர்ச்சியைப் பெறவில்லை என்றே கூறவேண்டும். இதைக் கவனத்தில் வைத்து மலாயாப் பல்கலைக் கழக இந்தியப் பகுதி எதிர்வரும் 1978-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8, 9-ஆம் நாட்களாகிய சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு நாட்களில் மலேசியத் தமிழ்ச் சிறுகதைக் கருத்தரங்கு ஒன்றை நடத்த ஏற்பாடு செய்து வருகின்றது. இக்கருத்தரங்கு மலாயாப் பல்கலைக் கழகத்திலுள்ள பல்கலைக்கழக இல்லத்தில் (Rumah Universiti) நடைபெற உள்ளது.

இக் கருத்தரங்கில் மலேசியத் தமிழ்ச் சிறுகதையின் வளர்ச்சி, அமைப்பு, சமுதாயப் பின்னணி, கருப்பொருள்கள் முதலிய முக்கியமான சில துறைகளைப் பற்றிய தமிழ்க் கட்டுரைகள் ஐந்தோடு, தேசிய மொழி— தமிழ்ச் சிறுகதை பற்றிய தேசியமொழிக் கட்டுரைகள் இரண்டும் சமர்ப்பிக்கப்பட ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

இக்கருத்தரங்கினை ஒட்டி, மலேசியத் தமிழ் இலக்கியம் பற்றிய புத்தகக் கண்காட்சி ஒன்றினை நடத்தவும் இந்தியப் பகுதி ஆவல் கொண்டு ஆவன செய்து வருகிறது.

இக்கருத்தரங்கு சிறப்பாக நடைபெற மலேசியத் தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்கள், திறனாய்வாளர்கள், வாசகர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பையும் பேராதரவையும் இந்தியப் பகுதி நாடுகிறது. இக்கருத்தரங்கிற்கான அழைப்பும், விண்ணப்பத்தாள்களும் விரைவில் அனுப்பப்பட உள்ளன. இக்கருத்தரங்கின் தொடர்பாகத் தொடர்பு கொள்ள விரும்புகின்றவர்கள்,

சு. சிங்காரவேலு,

Ketua, Jabatan pengajian
India, Universiti Malaya,
Kuala Lumpur.

என்ற முகவரிக்கு எழுதுமாறு அன்போடு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

31. 'காதல் ஓர் இனிய கனவு'

கனவுகள் பல கோடி

'மாங்கனி'

நினைவிழந்து விழுந்த வனிதா நீண்ட நேரத்திற்குப்பின் கண் விழித்தபோது தன் எதிரே அம்மாவும் லல்லியும் மட்டுமின்றி தந்தையும் டாக்டரும்கூட இருப்பதைக் கண்டு வியப்புற்றாள்.

பதறிக் கொண்டிருந்த இந்துமதிக்கு, போன உயிர் திரும்பியது போல இருந்தது. தந்தைகூட தன் மீது இவ்வளவு பாசம் வைத்திருப்பாரா என்பதை நினைக்கும்போதே வனிதாவுக்கு உடல் சிலிர்த்தது. அவர் முகத்தில் அத்தகைய வேதனையை அவள் கண்டதேயில்லை.

கலங்கிய கண்களைத் துடைத்துக் கொண்டு திரும்பிய அவரை வனிதாவின் பாசக்குரல் பிடித்திழுத்து நிறுத்தியது.

மெல்ல அருகில் வந்து தலையைக் குனிந்தபோது இரு சொட்டு நீர்த் துளிகள் அவள் நெற்றியின் மீது விழுந்து சிதறின.

துவண்டு கிடந்த கைகளால் அவர் கழுத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்ட வனிதா பேச முடியாமல் விம்மினாள்.

அவராலும் பேச முடியவில்லை.

டாக்டர் அவர் தோளில் ஆறுதலாகத் தட்டிக்கொடுத்தார்.

"ஒன்றுமில்லை! வெறும் பலவீனந்தான் அதிர்ச்சியளித்திருக்கிறது! என்னம்மா வனிதா! உன்னை டாக்டருக்குப் படிக்கவைக்க வேண்டும் என்று ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார் உன் அப்பா! நீ இவ்வளவு மோசமாக உடம்பை வைத்துக் கொண்டு எல்லாரையும் பயமுறுத்திவிட்டாயே..."

டாக்டர் சிரித்துக்கொண்டே ஆறுதல் படுத்தினார். உடம்பில் புதிய தெம்பு வந்தவளைப்போல மெல்ல எழுந்து உட்கார்ந்தாள் வனிதா.

இந்துமதி மகளின் தெளிவையும் தெம்பையுங் கண்டு அமைதியடைந்தாள். டாக்டரும் தந்தையும் வெளியேறிய பிறகு லல்லியை ஏறிட்டுப் பார்த்தாள் வனிதா.

அவள் முகத்தில் அமைதி நிலவியது போலத் தென்பட்டது. லல்லி அருகே வந்து அவள் கையைப் பற்றிக்கொண்டாள்.

"வனிதா! என்னை மன்னித்து விடு! என்னால்தான் இவ்வளவும் நேர்ந்தது! எனக்கு எப்படிச் சொல்வதென்றே புரியவில்லை..."

லல்லியின் வாயைத் தன் விரல்களால் மூடி பேசவிடாமல் தடுத்த வனிதா வலிய ஒரு புன்னகையை வரவழைத்துக்கொண்டாள்.

"லல்லி! தவறு என்னுடையது! நீ ஏன் கவலைப்படுகிறாய்...? நான் இனிமேல் இப்படி உணர்ச்சி வசப்படமாட்டேன்! வருந்தாதே!"

லல்லிக்கே வியப்பாக இருந்தது! வனிதாவா இவ்வளவு அமைதியாகப் பேசுகிறாள் என்று நம்பவே முடியவில்லை.

அவர்களை அப்படியே தனிமையில் விடுத்து இந்துமதியும் நகர்ந்து கொண்டாள்.

இப்போது லல்லியால்தான் ஒன்றும் பேசமுடியாமல் இருந்தது.

"லல்லி! கோபி இப்படிச் செய்வாரென்று நான் கனவில்கூட எண்ணவில்லை! ஏன்... இன்னுங்கூட என்னால் நம்பத்தான் முடியவில்லை! நீ சொல்வதால்தான் நம்ப வேண்டியிருக்கு..."

லல்லிக்கு இதயத்தில் வலியெடுத்தது.

"வனிதா! கோபி உன்னை வஞ்சிக்க நினைக்கவில்லை...! ஆனால் விதி அவரை அப்படி ஆட்டிப் படைத்துவிட்டது! சூழ்நிலை அவரையும் உன்னையும் இப்படிப் பிரித்து விட்டது! அவருக்காக நான் உன்னிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்..." லல்லியின் குரல் பேச முடியாமல் அடைத்தது.

"லல்லி! எனக்கும் தெரியும்! கோபியின் அன்பு எப்படிப்பட்டது என்பது என் நெஞ்சுக்குத் தெரியும்! அவர் வேண்டுமென்றே செய்திருக்க மாட்டார்! அவர் அப்படிச் செய்ய ஏதோ காரணம் இருக்க வேண்டும்!"

"வனிதா! உனக்கு அவர் மீது கோபமில்லையே...?"

"இல்லை லல்லி! நீ விஷயத்தைச் சொன்னதும் அதிர்ச்சி ஏற்பட்டது உண்மைதான்! ஆனால் இப்போது நினைக்கிறேன், அவர் என் நல்வாழ்வுக்காகத்தான் இப்படி ஒதுங்கிக் கொண்டிருப்பார் என்று! அவர் ஏற்கனவே என்னிடம் இதைப் பற்றிப் பேசியிருக்கிறார். நான் உறுதியாக இருப்பதைக் கண்டு பேசாமல் விட்டுவிட்டார். இப்போது அப்பாவின் ஆத்திரமும் ஏளனமும் கலந்த பேச்சைக் கேட்டு மீண்டும் அவர் மனத்தை மாற்றிக் கொண்டிருப்பார் என்று நினைக்கிறேன்... அதனால்தான் அவர் மீது நான் வெறுப்படையவில்லை...! ஆனால் அவர் அவசரப்பட்டுவிட்டார்..."

வனிதா இப்போது ஏனோ குலுங்கிக் குலுங்கி அழுதாள். பதறிப்போன லல்லி, அவளுக்கு ஆறுதல் சொல்ல முடியாமல் தவித்தாள்.

"லல்லி! எனக்குத்தான் அவரை அடைய முடியாமல் போய்விட்டது! அவராவது - எந்தக் குறையுமின்றி அந்தப் பெண்ணோடு மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்பதுதான் என் பிரார்த்தனை!"

"இதய பூர்வமான பிரார்த்தனைகள் வீண்போவதில்லை வனிதா!"

"ஆமாம்! அவர் மகிழ்ச்சியோடு இருந்தால் நானும் மகிழ்ச்சியடைவேன் என்று எனக்காக அவரிடம் ஒரு முறை சொல்லு லல்லி!"

சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு லல்லியே பேச்சைத் தொடர்ந்தாள்.

"வனிதா! நீ அவரிடம் தூய்மையான அன்பு கொண்டிருப்பது உண்மையானால் அவரது வேண்டுகோளையும் நிறைவேற்ற வேண்டும்"

வனிதா லல்லியை ஏறிட்டுப் பார்த்தாள்.

"நீ உனக்கேற்ற ஒருவரை மணந்து கொண்டு மகிழ்ச்சியோடு வாழ வேண்டும் என்பதுதான் அவரது ஆசை!"

வனிதா விரக்தியாகச் சிரித்தாள். லல்லி துணுக்குற்றாள்.

"அப்படியானால் உன் முடிவுதான் என்ன வனிதா ?"

"என்னுடைய இனிய கனவுகள் கோபியோடு கலைந்துவிட்டன! இனிமேல் என் பெற்றோரின் கனவுகளை நனவாக்க வேண்டியது ஒன்றுதான் எனது கடமை!"

"அப்படியானால் உன் எதிர்காலம்...?"

"என் எதிர்காலக் கனவுகள் பெற்றோரை மகிழ்விப்பது ஒன்றாக மட்டுமே இருக்கும் என்று நினைக்கிறேன்!"

"உன் முடிவு இது தானா வனிதா? அவசரப் பட்டுவிடாதே?"

"இல்லை லல்லி! நான் அவசரப்படவில்லை! ஆனால் எனது இப்போதைய முடிவையே கூறினேன்! நான் அப்பாவின் விருப்பப்படி டாக்டருக்குப் படிக்க வேண்டும் என்று தீர்மானம் செய்துவிட்டேன்! ஆறேழு ஆண்டுகளுக்குப் பிறகு தானே என் எதிர்காலத்தைப் பற்றி எண்ணப் போகிறேன்! அதற்குள் என்ன அவசர முடிவு வேண்டியிருக்கு ..?"

வனிதா நிதானமாகப் பேசினாள்! கள்ளங்கபடமற்றக் குழந்தை என்று எண்ணிக் கொண்டிருந்த இவளுக்கு இவ்வளவு மன உறுதியும், பக்குவமும் எப்படி ஏற்பட்டன என்று வியந்து நின்றாள் லல்லி!

தோல்வியும், அதிர்ச்சியும், ஏமாற்றமும் வாழ்க்கையில் பலவித அனுபவங்களை ஏற்படுத்தக் கூடியவை! அந்த அனுபவங்களே மனப் பக்குவம் பெற மூல காரணமாகின்றன என்பதை அனுபவமற்ற இளம் பெண் லல்லி எப்படி அறிந்திருக்க முடியும்?

அவள் வனிதாவை சின்னப் பெண் என்று எண்ணி வியந்து கொண்டு நின்றாள்.

இவ்வளவு நேரமும் அவர்கள் பேசிக் கொண்டிருந்ததை வெளியில் நின்று கேட்டுக் கொண்டிருந்த இந்துமதி நிம்மதியோடு உள்ளே நுழைந்தாள்! தட்டிலிருந்த காப்பிக் கோப்பையை இருவரும் எடுத்துக் கொண்டனர்!


32. "கலையாத இனிய கனவுகள்"

இரண்டு மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள்!

சுபாங் விமான நிலையத்தில் ஒரே கலகலப்பு!

எங்குப் பார்த்தாலும் வண்ண வண்ண உடைகளோடு விதவிதமான விநோத பாணியிலும் உடை அணிந்த இளஞ்சிட்டுகள் அலைந்து கொண்டிருந்தன.

மேல் படிப்புக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் மாணவர்கள்! சுற்றுப் பயணத்திற்காகச் செல்லும் உல்லாசிகளின் கூட்டம்! வழியனுப்ப



வந்த உறவினர்கள் நண்பர்களின் கூட்டம்!

குதூகலத்தோடு அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்த கூட்டத்தினரிடையே அமைதியே உருவாக அமர்ந்திருந்தாள் வனிதா! இந்துமதி, மகளின் அருகில் இருந்து வருவோர் போவோரின் பல்வேறு விசாரணைகளுக்கு உற்சாகமாகப் பதில் கூறிக் கொண்டிருந்தாள்.

வனிதாவின் படிப்பு முடியும் வரை இந்துமதி தானும் கூடவே தங்கியிருக்கப் போவதாகப் பிடிவாதம் செய்து சம்மதம் பெற்றுக் கொண்டிருந்தாள்.

ஒருமுறை மகளைப் பிரிந்திருந்ததால் ஏற்பட்ட விபரீத விளைவுகளின் வடுகூட இன்னும் மாறவில்லையே? அதற்குள் மறுபடியும் ஒரு பிரிவா என்ற வேதனை அவளை வாட்டியெடுத்து விட்டது!

இந்த முறை தனது எண்ணப் படியே நடந்து கொள்ள வேண்டும் என்பதில் அவள் உறுதியாக நின்று வெற்றி பெற்றுவிட்டாள்.

எனவே அவர்கள் இருவரும் வசதியாகத் தங்கிக் கொள்ள ஏற்பாடுகள் யாவும் தானே நேரடியாக இருந்து செய்துவிட்டு வரவேண்டும் என்ற முடிவோடு வனிதாவின் தந்தையும் அவர்களோடு சேர்ந்து கொண்டார்!

ஆகக்கூடி ஒருவரையொருவர் தொட்டுத் தொடர்ந்து மூவருமே இளம்பிவிட்டனர்.

படிப்பு ஆரம்பிக்குமுன் இடையிலுள்ள நாட்களில் பல இடங்களைச் சுற்றிப் பார்ப்பதன் மூலம் மகளின் உடலும் உள்ளமும் புதிய மாற்றத்தைப் பெறவும் இழந்த உற்சாகத்தை மீண்டும் பெறவும் வழியேற்படும் என்று அவர்கள் பெரிதும் நம்பினர்.

எவ்வித சலனமுமின்றி அமைதியாகக் காணப்பட்ட வனிதாவின் கண்கள் மட்டும் ஆவலோடு யார் வரவுக்காகவோ காத்துக் கிடந்தன. அந்த நீல நயனங்களில் திடீரென்று மலர்ச்சி தென்பட்டது.

ஆம்! தூரத்தில் லல்லி! ஓட்டமும் நடையுமாக அவளை நோக்கிப் பரபரப்போடு வந்து கொண்டிருந்தாள்.

"எங்கே வராமல் இருந்துவிடுவாயோ என்று பயந்து விட்டேன்! வனிதாவின் முகத்தில் இப்போதுதான் மகிழ்ச்சியைக் காண முடிகிறது பார்த்தாயா ? நல்ல வேளை!"

இந்துமதிதான் உற்சாகமாக அவளை வரவேற்றாள். "வழியில் கார் தொந்தரவு கொடுத்துவிட்டது! எனக்கும் எங்கே நேரமாகிவிடுமோ என்ற திகில்தான்! ஒருவழியாக வந்து சேர்ந்துவிட்டோம்!"

நிம்மதியாகப் பெருமூச்சு விட்டாள் லல்லி.

"இன்னும் யார் லல்லி உன்னோடு வந்தது...?" லல்லி தன் தவற்றை உணர்ந்து உதட்டைக் கடித்துக் கொண்டாள். பின் மெல்லச் சமாளித்துக் கொண்டு சிரித்தாள்.

"சொன்னால் நீ அதிர்ச்சி அடைந்து விடுவாய்! உன் அனுமதிக்காக அவர் காத்திருக்கிறார்!"

யார் என்பது போல் வியப்போடு அவளை நோக்கினாள்.

"வேறு யாருமில்லை! என் அத்தான் நவீன்தான்! உன்னிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள விரும்பியே வந்திருக்கிறார்! ஆச்சரியப் படாதே! அவர் முற்றிலும் மாறி விட்டார்!"

லல்லி கலீரெனச் சிரித்துவிட்டு வனிதாவை அழைத்தாள். வனிதா முன்போல் பயந்து மிரளவில்லை.

"அப்படியா! சரி வா. போய்க் கூப்பிடலாம்!" என்று லல்லியோடு கூடவே நடந்து வந்தாள்.

பள்ளத்தில் கார்கள் வரிசை வரிசையாக நிறுத்தப்பட்டிருந்தன. இறங்கும் படிகளின் மேல் நின்றபடி 'நவீன்' என்று குரல் கொடுத்தாள். காரில் சாய்ந்தபடி நின்று கொண்டிருந்த நவீன் காருக்குள் குனிந்து என்னவோ சொல்லிவிட்டு அவர்கள் நின்ற பக்கமாகக் கையைக் காட்டினான். காருக்கு உள்ளே அமர்ந்திருந்த யாரோ ஒருவர் கண்ணாடி வழியே பார்ப்பது போலிருந்தது.

ஆனால் அது யாரென்று தெளிவாகத் தெரியவில்லை! "யாரோ உள்ளே இருக்கிறார்கள் போலிருக்கே " என்றாள் வனிதா. "ஆமாம்! அவருணடய நண்பர் ஒருவர்! உடல் நலமில்லாதவர்!" லல்லி நவீனை அருகில் வரும்படி கை அசைத்தாள்.

அருகில் வந்த நவீன் மிகவும் அடக்கமாகத் தலையைச் சரித்துக் கொண்டு நின்றான். பின் வனிதாவை மெல்ல ஏறிட்டுப் பார்த்தான்.

"என்னை மன்னித்துக் கொள் வனிதா! உனக்கு நான் தொந்தரவு கொடுத்துவிட்டதற்காக வருந்துகிறேன்...!"

வனிதாவுக்கு உள்ளம் நெகிழ்ந்தது.

"நான் அதையெல்லாம் மறந்து விட்டேன்! நீங்கள் திருந்தியதை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன்!" என்றாள் பரிவோடு.

"எல்லாம் லல்லியால் ஏற்பட்டதுதான்! நீ படிப்பை முடித்துக் கொண்டு நல்லபடியாகத் திரும்பிவர வேண்டும் என்று வாழ்த்துகிறேன்!"

"நன்றி! நான் போய் வருகிறேன் நவீன்!" வனிதா முதன்முறையாக அவன் பெயரை உச்சரித்தாள் பயமின்றி. நவீன் திரும்பி நடந்தான். வனிதாவும் லல்லியும் மீண்டும் தங்கள் இடத்தை நோக்கி நடந்தனர்.

லல்லி தன் கையிலிருந்த கடிதம் ஒன்றை வனிதாவிடம் கொடுத்தாள். அதை ஆவலோடு பிரித்தாள் வனிதா.

அன்பே உருவான வனிதா!

உன் இதயத்தினுள் இன்பக் கனவுகளைத் தொடக்கிவிட்டுப் பின் துன்பக் கனவுகளாக முடித்துவிட்ட என்னை மன்னித்துவிடு! நம் வாழ்நாளில் எத்தனையெத்தனைக் கனவுகளோ காண்கிறோம். கனவுகள் பல கோடிகள் காணமுடியும்! ஆனால் அவை யாவுமே நிறைவேறி விடுவதில்லை! நம் காதலையும் ஒரு கனவாக எண்ணி மறந்துவிடு! இனி மேலாவது உன் இதயங்காணும் கனவுகள் யாவும் இறைவன் அருளால் நிறைவேறும் என்று நம்புகிறேன்!

நீ படித்துப் பட்டம் பெற்று டாக்டராக இங்கு வரும்போது உன்னிடம் சிகிச்சை பெறும் பாக்கியத்தையாவது இறைவன் எனக்கு அருளவேண்டும் என்று தினமும் வேண்டுகிறேன்!


உன் அன்பு இதயத்தை வேதனைப்படுத்திவிட்ட என்னை மன்னித்துவிடு! நீ என்றும் நலமுடன் வாழவேண்டும் என்று விரும்பும்-
கோபி.

கடிதத்தைப் படித்துவிட்டுத் தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள் வனிதா! அவள் கண்களிலிருந்து சிதறிய நீர்த்துளிகள் கடிதத்தை ஈரமாக்கின.

"கோபி! நீங்கள் என் இதயத்தில் மீட்டி விட்ட அந்த இனிய கனவுகளை யாராலும் அழிக்க முடியாது! அவை என்றுமே நிரந்தரமானவை! இனி யாராலும் அதைத் தொடரவும் முடியாது!" அவளது இதயத் துடிப்புகள் மானசீகமாக் கூறின!

காருக்குள் நோயாளியாக சாய்ந்துகிடந்த கோபியின் இதயத்திற்கு அது கேட்டிருக்குமா...?

(முற்றும்)



ஆசிரியர்: முதுகு எலும்பைப்பற்றி விரிவாகச் சொல்லு! அது ஒரே எலும்பா? பல எலும்புகளின் சேர்க்கையா?

பையன்: நீங்கள் என்னை அடிப்பதற்கு முன்வரை அது ஒரே எலும்பாகத்தான் இருந்தது பிறகுதான் பல எலும்புகளின் சேர்க்கையானது.

-பசுமலை எல். எஸ். மனோகரன்

பொருளைச் செய்வோம்! பொலிவோடு வாழ்வோம்!

முருகு சுப்பிரமணியன்

இன்று நாம் எடுத்துக் கொள்கிற குறள் பொருட்பாலில் "பொருள் செயல்வகை" என்னும் அதிகாரத்தின் கீழ் இடம் பெற்றிருக்கும் 759-வது குறளாகும்.

செய்க பொருளைச் செறுநர்
செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரியது இல் (759)

இந்தக் குறளுக்கு டாக்டர் மு. வ. எழுதியிருக்கும் தெளிவுரை வருமாறு:-

"ஒருவன் பொருளை ஈட்ட வேண்டும்; அவனுடைய பகைவரின் செருக்கைக் கெடுக்கவல்ல வாள் அதைவிடக் கூர்மையானது வேறு இல்லை."

பொருளாதார ரீதியில் உயரவேண்டும் என்னும் எண்ணம் சமுதாயத்தில் வலுவடைந்து வருகிற இவ்வேளையில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வள்ளுவர் எழுதி வைத்திருக்கும் இந்தக் குறளைப் பற்றிச் சிந்திப்பது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

வியாபாரம் செய்வது, தொழில்களை நடத்துவது, பணம் சம்பாதிப்பது ஆகியவை பற்றி நம்மிடையே குறிப்பாக லட்சியவாதிகளான இளைஞர்களிடமும் தொண்டர்களிடமும் பரவலாகத் தவறான கருத்தொன்று ஆழமாகப் பதிந்திருக்கிறது. வர்த்தகர்கள் ஏதாவது உதவிகளைச் செய்தாலும் பொதுப்பணிக்குத் தாமே முன்வந்து நன்கொடைகள் வழங்கினாலும் அதனைப் பெருமனத்தோடு, நன்னோக்கோடு ஏற்றுக் கொள்ளாமல் "எல்லாம் பிஸினஸ்", "சோழியன் குடுமி சும்மா ஆடாது" என்று கிண்டலாக இடித்துப் பேசுகின்ற பழக்கம் நம்மிடையே நம்மை அறியாமலேயே வேரூன்றி விட்டது.

வர்த்தகர்களும், தொழிலதிபர்களும் எதைச் செய்தாலும் அவர்கள் மீது சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதும், அவர்களின் செயல்களுக்கெல்லாம் வர்த்தக நோக்கமே அடிப்படை என்று அர்த்தம் காண நினைப்பதும் இயல்பாகிவிட்டது. வர்த்தகம் செய்வதும் பணம் சம்பாதிப்பதும் ஏதோ செய்யத் தகாத பாவமான காரியங்கள் என்பது போன்ற தவறான மனப்பான்மையையும் நாம் வளர்த்துக் கொண்டிருக்கிறோம்.

இத்தகைய தவறான எண்ணங்கள் அழுத்தமாக நம்மிடையே பதிந்து விட்ட காரணத்தால் தானோ என்னவோ, வர்த்தகம் செய்யும் மனப்பான்மையும் தொழில்களை நடத்தும் பழக்கமும், பணம் திரட்டுகின்ற முயற்சிகளும் நம்மிடையே அருகிவிட்டன போலும்! யாராவது வர்த்தகம் செய்வார்கள்; கடைகளை நடத்துவார்கள்; தொழிற்சாலைகளை அமைப்பார்கள்; நமக்கு வேலை கொடுப்பார்கள் என்று நாளும் எதிர்பார்த்துத் தொண்ணூந்து கிடக்கிற சமூகமாக நாம் உருக்குலைந்து நிற்பதற்கு வர்த்தகத்தைப் பற்றியும் தொழில் துறைகள் பற்றியும் நம்மிடையே ஊடுருவி விட்ட, இப்படிப்பட்ட தவறாக கருத்துக்களும் காரணம் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நமது சமுதாயத்தைச் சொத்துள்ள ரயமாக, வர்த்தக சமுதாயமாக, தொழில் அதிபர்களைப் பெருவாரியாக உள்ளடக்கிய சமுதாயச் சீரமைப்புச் செய்ய வேண்டுமானால் வர்த்தகம், தொழில் துறை பற்றி நம்மிடையே தெளிவும், விவேகமும் பிறக்கவேண்டும். வர்த்தகம் என்பது நாட்டுக்கும் மக்களுக்கும் இன்றியமையாத ஒன்று என்பதையும் அது முறையாகச் செய்யப்படுமானால் மக்களுக்கு ஆற்றுகிற ஒரு சீரிய சேவை என்பதையும் நாம் மனதில் கொள்ளவேண்டும்.

பயனுள்ள சேவை

கம்பத்திலோ, தோட்டத்திலோ மூலைமுடுக்குகளில் ஒரு பல சரக்குக் கடை வைத்திருப்பவர், அவருடைய வாழ்க்கைக்காக ஆதாய நோக்கில் அதனை நடத்தினாலும் அங்கே வாழ்கிற மக்களுக்குத் தேவைப்படும் பொருட்களை அந்த இடத்தில் விற்பதன் மூலம் தேவைப்படுகிற ஒரு நல்ல சேவையை ஆற்றுவதாகவே கருத வேண்டும்.

அப்படி அந்தக் கடை அங்கு இல்லாவிட்டால் கம்பத்து மக்களும் தோட்டத்து மக்களும் தங்களுக்குத் தேவைப்படும் பொருட்களை வாங்குவதற்கு எவ்வளவு தூரம் செல்லவேண்டும் என்பதையும் அதற்குப் போக்குவரத்து வசதியும் போதிய அவகாசமும் வேண்டுமென்பதையும் சிந்தித்துப் பார்த்தால் அந்த வர்த்தகர் செய்கின்ற சேவையின் அருமையை நாம் நன்கு உணர முடியும். அது போலத்தான் தொழில்களை நடத்துகிறவர்களும் மற்றும் விவசாயத் துறையில் ஈடுபட்டு, தோட்டம் முதலியவற்றை நிர்வகிப்பவர்களும் தங்களுக்கு ஆதாயம் தேடுகிற அதே வேளையில் சமூகத்துக்கும் பயனுள்ள சேவையைப் புரிந்து வருகிறார்கள்.

பேராசை கொண்ட திமிங்கிலங்கள்

வர்த்தகமும், தொழில் துறையும் மக்களுக்கு மறைமுகமான சேவையை வழங்கி வருவதோடு நாட்டின் உற்பத்தி பெருகுவதற்கும் அந்நிய நாணயம் ஈட்டுவதற்கும் உதவி வருகின்றன. இதற்கெல்லாம் மேலாக மக்களுக்கு வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் இவை நிலைக்களன்களாகத் திகழ்கின்றன. இந்த உண்மைகளை நன்கு புரிந்து கொண்டால் வர்த்தகர்களையும், தொழிலதிபர்களையும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்ற மோசமான பழக்கம் நம்மைவிட்டு அகன்று விடும். வர்த்தகர்களிடையே பேராசை கொண்ட திமிங்கிலங்கள் ஒருசிலர் இருப்பதை நாம் மறுப்பதற்கில்லை.

பொருட்களைப் பதுக்கி வைப்பது, கொள்ளை லாபம் அடிப்பது, அரிசியில் கல்லைக் கலந்து கலப்படம் செய்வது போன்ற முறைகேடான வர்த்தக நடைமுறைகளை நாம் ஆதரிக்க முடியாது. அத்தகைய ஈவிரக்கமற்ற, பழிபாவத்திற்கஞ்சாத வர்த்தகர்கள் கண்டிக்கப்படவேண்டியவர்கள், தண்டிக்கப்படவேண்டியவர்கள் என்பதில் கருத்து வேறுபாடு யாருக்கும் இராது.

எனினும் இப்படிப் பசுத்தோல் போர்த்த புலிகளாக, வர்த்தகர்களிடையே ஒரு சிலர் நடமாடுவதைக் காரணமாகக் கொண்டு வர்த்தகச் சமூகத்தின் மீதே கறைபூச நாம் முற்பட்டுவிடக் கூடாது என்பதே எனது விண்ணப்பமாகும்.

பணவெறி

நமக்கு நேர்மையான வர்த்தகர்கள் நிறையத் தேவை. முறையாகத் தொழில்களை நடத்துகின்ற முதலாளிமார்கள் நிறையத் தேவை.

பணத்தை அல்லும் பகலும் பாடுபட்டுத் தேடுகின்ற கருத்துள்ள கூட்டம் நம்மிடையே பெரும்பான்மையாக உருவாக வேண்டுமென்பதே நமது இன்றையக் குறிக்கோளாகும். அப்படி ஒரு கூட்டத்தை உருவாக்க வேண்டுமானால் வர்த்தகத்தையும் தொழிலையும் பணத்தையும் வெறுக்கின்ற மனப்பான்மை நம்மைவிட்டு அறவே அகல வேண்டும். இன்னும் ஒருபடி அதிகமாகச் சொல்ல வேண்டுமானால் பணம் சேர்ப்பதில் ஒருவகையான "வெறி" நமது மக்களுக்கு ஏற்படவேண்டும் என்றும் சொல்வேன். குடிவெறி, சினிமா வெறி போன்ற பணத்தை விரயமாக்கும் வெறிகளிலிருந்தும் விடுபட்டு ஒருதலைமுறை, இரண்டு தலைமுறைக்குப் பணவெறியை நமது மூளையில் ஏற்றிக் கொண்டால்கூட நல்லது.

வள்ளுவர் இவ்வகையில் நமக்கு மிகவும் தீர்க்கமாக வழிகாட்டுகிறார். "பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்பதையும், உலகம் பொருட்படுத்த வேண்டுமானால் ஒருவன் பொருள் உள்ளவனாக வாழ வேண்டும் என்பதையும் ஐயத்திற்கு இடமின்றி வள்ளுவர் தெளிவாகச் சொல்லுகிறார். நான் இக்கட்டுரையில் எடுத்துக் கொண்டிருக்கிற குறள் நமது சமுதாயத்திற்கு ஒரு கட்டளைபோல அமைந்திருக்கிறது.

"பணத்தை ஈட்டு" என்பதுதான் அந்த மணியான கட்டளை "அப்பனே! உன் எதிரிகளின் கொட்டத்தை அடக்க வேண்டுமானால் அவர்களின், வாலை ஒட்ட நறுக்கவேண்டுமானால் அதற்கு வாள், ஈட்டி முதலான படைக்கலங்கள் தேவையில்லை. அந்த ஆயுதங்களையெல்லாம்விட கூர்மையான ஆயுதம் ஒன்றிருக்கிறது. அது தான் பணம்! ஆகவே அந்தப் பணத்தை ஈட்டு" என்று வள்ளுவர் ரத்தினச் சுருக்கமாகப் பணத்தின் தேவையையும் அதற்கு உள்ள இணையற்ற வலிமையையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

"ஈட்டி எட்டியவரை பாயும், பணம் பாதாளம் வரையில் பாயும்" என்பார்கள். பாதாளம் வரையில் பாயக்கூடிய கூரிய ஆயுதம் பணம் என்பதையே இந்தப் பழமொழி புலப்படுத்துகிறது. உண்மையில் மனிதனுக்கு உயிராக நடைமுறையில் திகழ்வது பணமே ஆகும். "பணம் இல்லாதவன் பிணம்" என்னும் பழமொழி வாழ்க்கைக்குப் பணம் உயிர்நாடி என்பதையே அறிவுறுத்துகிறது.

அண்மையில் பத்தாங் பெர்ஜாங்தையில் ஒரு புகைப்பட நிலையம் நடத்திய தீபாவளி நல்லெண்ண விருந்திலும், பரிசளிப்பு நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளுகின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. "நெல்லை அண்ணாச்சி" என்று அன்போடு அவ்வட்டார மக்களால் அழைக்கப்படுகிற ஒரு பெரியவர் அந்தப் புகைப்பட நிலையத்தை நெடுங்காலமாக நடத்தி வருகிறார். அந்த விருந்துக்கும் பரிசளிப்புக்கும் பெரும் பணத்தை அவர் செலவிட்டு எல்லாச் சமூக மக்களையும் அழைத்து மிகச் சிறப்பாக அந்த நிகழ்ச்சியை அவர் நடத்தியது குறிப்பிடத்தக்கது. வெறும் வாயளப்பாக முடிந்துவிடுகிற கூட்டங்களில் கலந்து கொள்வதைக் காட்டிலும் இத்தகைய வர்த்தக நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வது எனக்கு அதிகம் மகிழ்ச்சியைத் தருகிறது. கடைத் திறப்பு விழா, தொழிற்சாலைகளின் தொடக்க விழா போன்றவை நமது சமூகத்தில் நாளும் பெருக வேண்டும்.

புகைப்பட நிலையம் நடத்தும் இந்தியர்கள் விரல் விட்டு எண்ணத்தக்க ஒருசிலரே இருப்பர். அதுபோல "ஃபர்னிச்சர்" கடைகளை நடத்தும் நம்மவர்களும் மிகக் குறைவு அண்மையில் "மெய்யாத்தாள்" என்னும் பெயரில் ஒரு "ஃபர்னிச்சர்" கடையை நமது சமூகத்தைச் சார்ந்த நண்பர்கள் ஆரம்பித்து இருப்பது நமக்கு மன நிறைவை அளிப்பதாகும்.

நம்முடைய மனப்போக்கில் முழுமையான மாற்றம் தேவை. வர்த்தகத்தில் ஏற்கனவே நிலை பெற்றிருப்பவர்களையும் புதிதாக அடியெடுத்து வைக்கிறவர்களையும் வாழ்த்திப் போற்றுகின்ற நல்ல மனத்தை நாம் பெற வேண்டும். பணம் சேர்த்துக் கண்ணுக்குக் குளிர்ச்சியாகச் சொத்து சுகங்களோடு வாழ்கிறவர்களைப் பார்த்துப் பொறாமைப் படுகிற வயிற்றெரிச்சல் போக்குக்கு முற்றுப்புள்ளி வைத்து அவர்களைப் போற்றுகிற புதுமனத்தை நாம் பெறவேண்டும். "அவர்களின் வழியில் நாமும் பணத்தை ஈட்டுவோம், சொத்து சுகங்களைச் சேர்ப்போம்" என்னும் மனத்தெம்பை நாம் வளர்த்துக் கொள்ளவேண்டும். "செய்க பொருளை" என்று வள்ளுவர் இடுகிற கட்டளையின் பொருள் இது தான்.

வள்ளுவர் இடுகிற கட்டளை தனி மனிதருக்கும் பொருந்தும்; சமுதாயத்திற்கும் பொருந்தும்; நாடுகளுக்கும் பொருந்தும். எதிரிகள் பார்த்து அஞ்சக்கூடிய வலிமை மிக்க நிலையை எய்துவதற்குத் தனிமனிதர்களுக்கும் சரி, சமுதாயத்திற்கும் சரி, நாட்டுக்கும் சரி, பணமே மூல பலமாக விளங்கி வருவதை நடைமுறையில் கண்டு வருகிறோம்.

ஏறத்தாழ நூற்றைம்பது நாடுகளைக் கொண்ட இந்தப் பூவுலகத்தை, வேறு நாடுகள் என்று சொல்லப்படும் பத்துப் பணக்கார நாடுகளே ஆட்டிப்படைத்து வருகின்றன. ஆகவே அந்தஸ்தோடு, ஊரும் உலகமும் மதிக்கத்தக்க நிலையில் எதிரிகளும் அஞ்சி நடுங்குகிற மாதிரி வாழவேண்டுமானால் பணத்தை இடையறுமல் ஈட்டுவதும், அதனைக் கண்ணும் கருத்துமாகப் பெருக்குவதும், சேமிப்பதும்தான் தக்க மார்க்கங்களாகும்.

மீண்டும் மீண்டும் இந்தக் குறளைப் பயில்வோம், பொருளைச் செய்வோம், பொலிவாக வாழ்வோம்!

செய்க பொருளைச்
செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரியது இல். (759)

புதிய கண்டு பிடிப்புக்கள்

இன்னும் 20 ஆண்டுகளில் ஒளியின் வேகத்தை விட இன்னும் பன்மடங்கு அதிவேகத்தோடு செல்லக்கூடிய விமானங்கள் வர உள்ளன. இது திரவவாயுவாலும், நீரக வாயுவாலும் இயங்கக் கூடியது. நீரகவாயு பயன் படுத்துவதால் சுற்றுப் புறத்தையும் இதன் மூலம் தூய்மையாக வைத்திருக்க முடியும். இது சாதாரண விமானத்தை விட $2\frac{1}{2}$ மடங்கு அதிக சக்தியுடையது, ஆனால் இதன் சத்தம் அதிகமா இருப்பதால்பூமியில்கேட்காவண்ணம் சுமார் 36,000மீட்டர் உயரத்தில் பறக்கவிட உத்தேசிக்கப் பட்டுள்ளது. மணிக்கு 4000மைல் வேகத்தில் செல்லக் கூடிய இவ் விமானத்தில் சுமார் 200 பயணிகள் அமர்ந்து செல்லலாம்.

சுவிடன் நாட்டு விஞ்ஞானிகள் முழங்கை 'இழந்தவர்களுக்கென ஒரு புதுவித மின்னியல் கை ஒன்றைக் கண்டுப்பிடித்துள்ளனர். சுமார் ஒரு வருட ஆராய்ச்சிக்குப் பின் இது கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது. இக்கையின் உதவியால் ஆறு வித அசைவுகளை நினைத்த மாத்திரத்திலேயே செய்யலாம். இக்கை தற்பொழுது நால்வருக்குப் பொருத்தப்பட்டுள்ளது. இவ்வகையான மின்னியல் கை இன்னும் விற்பனைக்கு வரவில்லை.

பிளாஸ்டிக்கால் செய்யப்பட்ட நீர்மூழ்கி கப்பல் இப்போது தயாரிக்சப்பட்டுள்ளது. இக்கப்பல் 18 மாத ஆய்வுக்குப் பின்னரே தற்போது வெளிவந்துள்ளது. இக்கப்பலில் மூன்று பேர்களே பயணம் செய்யமுடியும். இக்கப்பல் சுமார் 15.000 ஆழ அழுத்தத்தில் பயணம் செய்ய முடியும். இம்மாத வாக்கில் இதைப் போன்ற மற்றொரு கப்பல் தயாரிக்கப்பட்டு எண்ணெய் கொண்டு செல்வதற்காகப் பயன்படுத்தப்பட உள்ளது. இவ்வகையான நீர் மூழ்கிக்கப்பல் துருப்பிடிக்காமல் சுமார் 15 ஆண்டுகள் வரை உறுதியாக உழைக்கக் கூடியதாகும்.

தொகுப்பு: செல்வராஜு குமரன். கிள்ளான்.



மீறல்கள்

எம்.ஏ. இளஞ்செல்வன்

கமலாவோடு மணவறையிலிருந்து விரல் கோத்து வலம் வந்தபோது மொட்டாய் ஆடி அசைந்தவள்.

மொட்டிலேயே மலரின் கவர்ச்சியைத் தேக்கிக் காட்டிக்கொண்டிருந்த முகம்; கனவில் மிதக்கும் கண்ணின் பாவைகள்; தேனில் நனைந்த மாவடுவாய் ஈரம் படர்ந்திருந்து இதயத்தைச் சுண்டும் இதழ் விரிசல்; காதோரம் அனாயாசமாய்க் காற்றில் தவழும் சுருள் கேசங்கள்.

கமலா ரமணனைத் தாய் வீட்டில் ஈன்றபோது, மதுரா மலர்ந்து மணம் பரப்பிக்கொண்டிருந்தாள். மோகனின் மனப் பார்வையில் அக்காளைக் காட்டிலும் தங்கையே அதிகம் பட்டுக்கொண்டிருந்தாள். மோகனின் அழைப்புக்கெல்லாம் முகம் சுளிக்காமல் முன்வந்து நின்ருள். ஆனுலும் முன்பிருந்த துள்ளல் நடை; துடுக்குப் பேச்சு குறைந்து, ஒருவித ஒதுக்கமும் தலைத்தாழ்வும் தென்பட்டன. அவை கூட அவளது அழகை அதிகப்படுத்தித்தான் காட்டின.

கமலா இரண்டாவது முறையாக "உண்டாகி" இருந்த நிலையில் வாயில் ஊற்றிய பச்சைத் தண்ணி கூட வாந்தியாய் வெளிப்பட்டு விட்டபோது எழுந்து நடமாட முடி

தண்ணீர் கிளாசை நீட்டும் போது ஏற்படும் விரல் அணைவுகள்; சமையற்கட்டில் -அடுப்பில் - இரும்புச் சட்டியில் வதங்கும் இறைச்சியை ருசி பார்க்கும் சாக்கில் நிகழும் உடல் உரசல்; சோறு பரிமாறும் வேலையில் போதும் என்று தடுக்கும்போதும் ஏற்படும் கை இடிப்பு- யாவும் அவளுக்கு மோகனின் மனக்குகை மர்மங்களை ஓரளவு புரிய வைத்திருக்கவேண்டும். இவை யாவும் தற்செயலாக ஏற்பட்டுவிடும் நிகழ்வுகள் என்று அவளது மனம் ஒதுக்கிவிட்டாலும் ரமணனைத் தூக்கிக்கொள்ளும்போது நீண்டுவிடும் கரங்களின் செயல்களை அவளால் அவ்வளவு சுலபத்தில் தற்செயலாய் ஏற்படுபவை என ஒதுக்கிவிட முடியவில்லை.

அக்காவின் குரல் கேட்டு அவளறையில் நுழைந்தபோது மதுராவின் மனம் கனத்துக்கொண்டு வந்தது. அவளது காலைக் கட்டிக்கொண்டு "என்னை வீட்டிற்கு அனுப்பி விடு அக்கா!" என ஓவென்று கதறவேண்டும் போலிருந்தது அவளுக்கு.

படுக்கையிலே நனைத்துப் பிழிந்த துணியாய்க் கிடந்த கமலாவைப் பார்த்தபோது அவளது நெஞ்சின் பிறல்கள் அமுங்கிக் கொண்டன.

மேனியில் நெருப்புக்கொள்ளி பட்டுவிட்ட துடிப்பில் முகம் கறுத்து ஒதுங்கி நின்றுகொண்டாள் மதுரா. அவள் கண்களில் ஈரம் படர்ந்தது.

குழந்தையை வாங்கிக்கொண்ட மோகன் மதுராவின் தாழ்ந்துவிட்ட தலையழகில் கண் பதித்தவாறு குழந்தையின் கன்னத்தில் தன் இதழ் பதித்தான். சற்றுமுன் மதுராவின் நெஞ்சின் மென்மையான மேற்பரப்பில் வேண்டுமென்றே குழந்தையை வாங்கும் பாவனையில் தாராளமாய் நீண்ட கரத்தில் அழுந்தப் பதித்துக்கொண்ட சுகம் அவனது கையில் ஊறலெடுத்தது.

அவனுடைய இதழ்களில் படிந்திருந்த குழந்தையின் கன்னம் மதுராவினுடையதுதான்...!

"மதுரா" அவனது மனம் பாழ்வெளியில் மதுராவின் நினைவிலொன்றி சலனப்பட்டுக்கொண்டிருந்தது.

மதுரா... காற்றும் வருடாத கவின் மலர். நேற்றிரவுப் பனிப்பெய்யலில் உடல் நனைந்து, சிலிர்த்து இதழ் விரித்துக்கொண்டிருக்கும் எழில் ரோஜா!

யாத பலஹீனத்தில் ரமணனைப் பார்த்துக்கொள்ளவும் சமையல் வேலைகளைக் கவனிக்கவும் மதுராவை அனுப்பி வைத்தனர் அவளது பெற்ரோர்.

குழந்தை ரமணன் இப்போது மதுராவை நோக்கித் தாவித் தன் பிஞ்சுக் கரங்களை நீட்டினுன்.

"மதுரா!" மோகன் தாழ்ந்த குரலில் அழைத்தான்.

முகம் கறுத்து, தலை தாழ்ந்திருந்த மதுரா வெறுமையுடன் அவனைப் பார்த்தாள்.

"நீதான் வேணுமாம்..." என்று நெஞ்சின் வக்கரிப்பு வார்த்தையாகக் குழைய குழந்தையின் கன்னத்தில் உதடுகளைப் பதித்து அவளிடம் நீட்டினுன்.

அவள் ரமணனை மெதுவாகவும் தன் கைகள் மோகனின் கைகளில் உரசிவிடாத ஜாக்கிரதை உணர்வுடனும் வாங்கிக்கொண்டாள்.

மதுரா தன் அக்காளுக்கு உதவியாக இங்கே வந்ததிலிருந்து மோகனின் ஏங்கும் பார்வையையும் உதடு இனிக்கும் பேச்சையும் புரிந்துகொண்டு ஒதுங்கியேதான் வந்திருக்கிருள்.

ரமணனைப் படுக்கையில் கமலாவிடம் விட்டுவிட்டு பானையிலிருந்த கஞ்சியை ஊற்றிக்கொண்டு வந்து கமலாவிடம் நீட்டியபோது மோகன் அறையினுள் நுழைந்தான். "எப்படிக் கமலா இருக்குது? கொஞ்சங் கொஞ்சமா சாப்பிடப் பாரு. வாந்தி வருதுன்னு எதையுமே சாப்பிடாம இருந்தா... அப்புறம் வயித்திலேயிருந்து பையன் புரட்சி செய்ய ஆரம்பிச்சிடுவான்" என்று கூறியவாறே கட்டிலின் ஓரத்தில் அமர்ந்தவன், பெரிய ஹாஸ்யத்தை உதிர்த்துவிட்ட பெருமையில் தானே சிரித்துக் கொண்டு மதுராவைப் பார்த்தான்.

மதுரா முகத்தில் எந்தச் சலனத்தையும் காட்டிக் கொள்ளாமல் ரமணனைத் தூக்கிக் கொண்டு அறையைவிட்டு வெளியே வந்தாள்.

வாசலில் வந்து நின்ற காரிலிருந்து இறங்கியவர்களைக் கண்ட மதுரா, சற்றுமுன் ஏற்பட்ட நெஞ்சக் கனலை மறந்து மனம் லேசாகி அறையினுள் எட்டிப் பார்த்தவாறு, "அக்கா...! பெரியக்காவும் மாமாவும் வராங்க..." என்று குரல் கொடுத்தாள்.

"என்ன மதுரா...! அக்காவுக்கு எப்படியிருக்கு?" - என்றவாறே ரமணனைத் தூக்கிக் கொண்ட பெரியக்கா, மதுரா முன் செல்ல பின் தொடர்ந்தாள்.

மாமா ஹாலிலேயே நின்றுவிட்டார்.

கமலா ஆயாசம் மேலிடப் படுத்திருந்தவள், பலப் பிரயோகத்தால் படுக்கையில் எழுந்து உட்கார்ந்து மெதுவாகத் தரையில் கால்களை ஊன்றி இரண்டடி எடுத்து வைத்து அறைக் கதவைத் தாங்கலாகப் பிடித்துக்கொண்டு முகம் மலர, "வாங்க மாமா...! உட்காருங்க...!" என்று ஹாலில் மாட்டியிருந்த படங்களில் கண் பதித்து நின்றுகொண்டிருந்த மாமாவுக்கு வரவேற்புக் கூறினுள்.

படுத்த படுக்கையாய்க் கிடந்தவள் மாமாவைக் கண்டதும் எழுந்து நின்று வரவேற்புக் கூறுவதைக் கண்டு மோகனின் மனத்தில் கரிப்புகை படர்ந்தது.

ஒப்புக்கு, "வாங்க!" என்று கூறிவிட்டு நின்றிருந்தான் அவன்.

நேரங்கெட்ட நேரத்தில் அவளது மாமாவும் அக்காவும் வீட்டிற்கு வந்துவிட்டாலும், ஓடு ஓடென்று விரட்டி கோழி வாங்கி வரச் செய்து மிகக் கரிசனத்துடன் சமைத்துப் போட்டனுப்பும்போது ஏற்படும் சுருக்கென்ற எறும்புக்கடி; "மாமா, சிங்கப்பூருக்குப் போயிருந்தப்ப இந்தச் சேலை உனக்கு "மேட்சா" இருக்கும்னு வாங்கிட்டு வந்தாராம். இந்தா கமலா..." என்று அவள் அக்கா

நீட்டும்போது உயிர்சிலிர்ப்பு கண்களில் ஆவலாய்ப் பரிணமிக்க அதை ஏற்றுப் பிரித்து தோளில் குறுக்கு வாட்டமாகப் போர்த்திக் கண்ணாடி முன் நிற்கும் போதும், "மாமா சிங்கப்பூரிலிருந்து வாங்கிட்டு வந்தாராம்" என்று பெருமிதம் பிடிபடாத சொற்களில் அவனிடம் காட்டும் போது ஏற்பட்ட ஊசிக்குத்தல்கள யாவற்றையும் அவ்வப்போது அழுத்தித் தேய்த்துத் துடைத்துக் கொண்ட போதிலும் அசையாமல் படுத்துக் கிடந்தவள் ஆவலாய் அடியெடுத்து வைத்து வரவேற்புக் கூறுவதைக் கண்டதும் நெஞ்சில் ஈட்டி பாய நின்றிருந்தான்.

"மாமான்னு உனக்கு ரொம்ப ஆசையில்ல...?" வந்திருந்தவர்கள் விடைபெற்றுப் போய்விட்டபோது படுக்கையில் சாய்ந்திருந்த கமலாவின் கண்களை ஊடுருவியவாறு பொருள் பொதிந்த தொனியில் ஏளனமாய்க் கேட்டான்.

கமலா... அவனையே உற்றுப் பார்த்தாள். அவளது பார்வையில் நொடிக்கு நொடி உக்கிரம் ஏறிக் கொண்டிருந்தது.

அவனது முகத்தை விழித்துப் பார்த்தவாறு நிதானமாகக் கூறினாள்.


"ஆசைமட்டுமில்ல... காதலுங் கூட...!"

அவன் திகைத்து விட்டான். தான் எறிந்த ஈட்டி தன் நெஞ்சிலேயே பாய்ந்துவிட்ட வேதனையில் அவன் மனம் தளர்ந்துவிட்டது.

அவள் கூறியதை மீண்டும் நினைத்த போது நெஞ்சில் இறுக்கமேற்பட்டது.

"அப்படின்னு உங்க மாமாவையே கட்டிக்கிறதுதானே..." என்று கேட்டுவிட மனம் துடித்தது. "கட்டிக்கத்தானே நினைச்சேன். நீங்கத்தான் ஒரே பிடிவாதமா என்னையே சுத்தினீங்களே...!" என்று கேட்டுவிட்டாளேயானால்... மனம் தனக்குத் தானே தேடிக் கொண்ட பதிலில் கட்டுப்பட்டு வாயிலிருந்து வார்த்தைகளே வெளிப்படாதவாறு நாக்கு உள்ளுக் கிழுத்துக்கொண்டது.

அவள் அவனது கரங்களைப் பற்றிப் படுக்கையில் உட்காரச் செய்தாள். அவன் திசைதவறிய மனத்தோடு அவளுக்கு மறுப்புச் சொல்லாமல் அமர்ந்தான்.



"என்மேல சந்தேகப் படுறீங்களா?" அவள் திருப்பியிருந்த அவனது முகத்தைத் தன்னகத்தே திருப்பிப் பிடித்தவாறு மிக மெதுவான குரலில் வினவினாள்.

அவன் அசடு வழிய மௌனித்திருந்தான்.

"தோ... பாருங்க... நான் அவரு மேல வச்சிருக்கிறது ஆசை இல்ல... பாசம்... ஒரு மகள் தன் தகப்பன் மேல வச்சிருக்கிற பாசம்.... மரியாதை அவ்வளவுதான்"

அவன் அவளது முகத்தை வெறித்தான்.

"நீங்க நம்பமாட்டீங்க... அவரு மேல எனக்கு ஏன் அவ்வளவு மரியாதை, பாசம்னு சொன்னா... உங்களால நம்ப முடியாதுதான். ஆனால் அதுதான் உண்மை.

"எங்கக்கா கர்ப்பமா இருந்தப்ப, நான் உதவிக்குப் போயிருந்தேன். அன்னைக்கு அவங்களுக்கு பிரசவ வலி எடுத்து அவங்களை மருத்துவ மனையில் சேர்த்துட்டு மாமா வந்தப்போ... நான் சரியான தலை வலியோட படுக்கையில சாய்ஞ்சிருந்தவ அப்படியே கண்ணயர்ந்திட்டிருக்கேன்.

"என்மேல என்னமோ ஊர்றதை உணர்ந்து திடுக்கிட்டுக் கண் விழிச்சிப் பார்த்தப்ப என் இடுப்பு வரைக்கும் போர்வையைப் போர்த்திவிட்டுட்டு மாமா போய்க்கிட்டிருந்தது தெரிந்தது. அப்பத்தான் எனக்குத் தெரிந்தது நான் தலைவலியில படுக்கையில சாய்ந்தப்ப அலங்கோலமா கிடந்திருக்கிறேன்னு. அன்னைக்கு மட்டும் மாமா நினைச்சிருந்தா.." அவள் சற்று நிறுத்தினாள்.

"நான் உங்களுக்குச் சுத்தமான வளா கிடைச்சிருக்க மாட்டேன். மனைவிங்க மருத்துவமனைக்குப் போய் முதல் பிள்ளையோட திரும்பி வர்றதுக்குள்ள மைத்துனிங்க வயித்தில் இரண்டாவது பிள்ளைய வளர விட்டர்ற மாமாங்க நிறைஞ்சிருக்கிற உலகத்தில இப்படியும் ஒரு மாமாவான்னு நினைச்சி அன்னைக்குப் பூரா உருகியிருக்கிறேன். அன்றைக்கு அவர்மேல ஏற்பட்ட மதிப்புத்தான் இப்ப நீங்க சந்தேகப்படற அளவுக்கு..."

அவளைப் பேசவிடாமல் அவளது வாயைப் பொத்தினான் மோகன்.

அவள் அவனை மெதுவாக இழுத்துத் தன் மேனியில் அன்புடன் சாய்த்துக்கொண்டாள்.

அவனது இதயம் விம்மிக் கொண்டிருந்தது.

"சரி நேரமாவுது... போய் ரமணனை வாங்கிக்கிட்டு மதுராவை தண்ணி விளாவச் சொல்லுங்க... குளிக்கணும் " என்றாள் கமலா.

தலை குனிந்தவாறே அறையை விட்டு வெளியேறிய மோகன், மதுராவின் தோளில் சாய்ந்திருந்த ரமணனைக் கை நீட்டிப் பெற்றுக் கொண்டான். இப்போது அவனது விரல் நுனிகள்கூட மதுராவின் மேனியில் உரசவில்லை.



"ஈ உட்கார மலை குலுங்கியது"

ஒரு சமயம் மன்னர் திருமலை ராயனின் சபையில் வீற்றிருந்த அதிமதுரக் கவிராயனின் சூளுரையை மூழ்கடிக்க, காளமேகப் புலவர் யமகண்டம் பாட இசைந்தார். கொதிக்கும் எண்ணெய்க் கொப்பரையின் மேல் தொங்கும் இரும்பு உறிமேல் அமர்ந்தார் காளமேகம். இரும்பு உறியை நாற்புறமும் நிற்கும் யானைகள் தாங்கிக் கொண்டிருக்கும். காளமேகம் பதில் கூறாமல் தோற்றால் யானைகள் பிடியை விட்டுவிடும். புலவர் கொதிக்கும் எண்ணெய்க் கொப்பரையில் விழுந்து இறக்க வேண்டியதுதான்.

புலவர்கள் வினாக்களைத் தொடுக்கலானார்கள். காளமேகப் புலவரைப் பார்த்து பொறாமைக் கொண்ட அதிமதுரக் கவிராயர் "ஈ உட்கார மலை குலுங்கியது" என்ற கருத்தமைந்த பாடல் ஒன்றைப் பாடுமாறுப் பணித்தார்.

காளமேகப் புலவர் கணீரென்று "மலையென்ன, ஈ உட்கார அண்ட சராசரமே குலுங்கியது என்ற கருத்தில் பாடுகிறேன்" என்று கூறிக் கீழ்க்காணும் பாடலைப் பாடினார்.

"வாரணங்கள் எட்டும்.
மகமேருஅம்கடலும்
தாரணியும் எல்லாம்
சலித்தனவால்- நாரணனைப்
பண்வாய் இடைச்சி பருமத்தி
னால்அடித்த
புண்வாயில் ஈமொய்த்த
போது"

திருமால் கண்ணனாக அவதரித்த போது வெண்ணெய் திருடினார். அப்போது ஆய்ச்சி ஒருத்தி அவரை மத்தினால் அடிக்க வாயில் புண் பட்டது; அந்தப் புண்ணின் மேல் ஈ உட்கார்ந்தது. கண்ணபிரான் அருவருப்பினால் உடல் நெளித்துக் குலுக்க, அவரது வயிற்றிலே எல்லா அண்டங்களும், மலைகளும், கடல்களும், குலுங்கின! என்ற பொருளில் மேறகண்டப் பாடலைப் பாடியதும், அனைவரும் காளமேகப் புலவரின் திறமையைப் புகழ்ந்தனர்.

போட்டியில் கவிகாளமேகம் வெற்றி பெற்றார். அதிமதுரக் கவிராயரும் செருக்கொழித்து அன்று முதல் காளமேகத்துடன் நட்பு கொண்டு இருந்து வரலானார்.

-வசந்தா முத்தழகன்,
சுங்கை நிபொங், பினாங்கு.

டாக்டரம்மாவின் பதில்கள்

கே: எனக்கு "விலக்கு" ஏற்படும்போது கடுமையாக வயிற்று வலி வருவதோடு, இரத்தப் பெருக்கும் அதிகமாக ஏற்படுகிறது. இதற்கு என்ன மருந்து சாப்பிட வேண்டும்?

ப: இதற்கு 10 மிளகை எடுத்துப் பொடி செய்து கொள்ளுங்கள். அதோடு சம அளவு வெள்ளைக் கற்கண்டு சேர்த்து நீர்விட்டு அடுப்பில் வைத்துக் காய்ச்சவும். நீர் நன்றாகச் சுண்டி அரைக்கால் பாகம் வந்ததும் இறக்கி ஆறவைத்துக் குடியுங்கள். வயிற்றுவலி உடனே நிற்கும்.



கே: என் முகத்தில் முகப்பருக்கள் தோன்றி அதிலிருந்து வெள்ளையாக வெளிப்படுகிறது. இதற்கு என்ன மருந்து போடலாம்?

ப: இதற்கு இலகுவான மருந்துகள் உள்ளன. பயன்படுத்துங்கள். வெங்காயத்தைப் பாதியாக நறுக்கி, அதை பரு உள்ள இடங்களில் அழுந்தத் தேயுங்கள். பரு மறையும். சாதிக்காய், மிளகு, சந்தனம் மூன்றையும் மைபோல அரைத்துப் பருவில் தடவி வந்தாலும் நல்ல குணம் கிடைக்கும். பொதுவாக இந்தப் பருக்களை நகத்தால் கிள்ளிவிடாமல் இருந்தாலே போதும். பரு தானாக உதிர்ந்துவிடும்.

கே: என் இரண்டு மாதக் குழந்தைக்குப் பால் கொடுக்க நான் மிகவும் சிரமப்படுகிறேன். காரணம் தாய்ப்பால் சுரக்கவில்லை. இதற்கு என்ன செய்வது?

ப: சாப்பாட்டில் அடிக்கடி முருங்கைக்கீரை சேர்த்துக்கொள்ளுங்கள். தாய்ப்பால் சுரக்கும்.

பச்சைப் பயிறு, மீன் போன்றவையும் தாய்ப்பால் பெருக்கும் சக்தி உள்ளவை.

கே: என் மகள் கர்ப்பமாக இருக்கிறாள். இது 4-ஆவது மாதம். அடிக்கடி வாந்தி எடுக்கிறாள். இதற்கு என்ன மருந்து கொடுக்க வேண்டும்?

ப: இதற்கு எளியமருந்து இருக்கிறது, பயன்படுத்திப் பாருங்கள். ஒரு எலுமிச்சம் பழத்தை உரித்து, அதை நாலு துண்டாக வெட்டிக்கொள்ளவும். ஒரு துண்டை எடுத்துச் சீனியில் தொட்டு வாயில் போட்டுச் சுவைத்தால், வாந்தி ஏற்படாது. இன்னொரு மருந்தும் இருக்கிறது.

புதினா கீரையோடு சிறிது புளி சேர்த்துத் துவையல் அரைத்துச் சாப்பிட்டால் உடனே வாந்தி நிற்கும். (நன்றி: ராணி)

கைக்குட்டை நறுமணம் பெற

உங்களுடைய கைக்குட்டை நறுமணத்துடன் இருக்க வேண்டுமா? செண்ட் உபயோகிக்காமலே நல்ல நறுமணத்தைப் பெற முடியும். எப்படி? இதற்குத் தேவை ஒரு சில ரோஜாப் பூக்கள் தான்.

நன்றாகச் சலவை செய்த கைக்குட்டையை எடுத்து அதில் ரோஜாப்பூவை வைத்து, அக்கைக்குட்டையினாலேயே சுற்றி, சிறிது குளிர்ந்த நீரில் நனைத்து வையுங்கள். இரவு முழுவதும் வைத்துவிட்டுக் காலையில் அக் கைக்குட்டையை எடுத்து வைத்துக் கொள்ளலாம். அந்தக் கைக்குட்டையிலிருந்து மிக அருமையான நறுமணம் வீசும்.



பூச்சியே சிறந்த உணவு

இறைச்சி வகைகளை விடப் பூச்சிகளில் அதிக அளவு புரதச்சத்து இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மாட்டின் இறைச்சியில் 21.5 சதவிதமும், மீனில் 18.9 சதவிதமும், கோழியில் 20.5 சதவிதமும் புரதச் சத்து உள்ளது. ஆனால் பூச்சிவகைகளில் 30 சதவிதமும் புரதச் சத்து உள்ளது என்று கணக்கிடப்பட்டுள்ளது.

பூச்சிகளைச் சாப்பிட்டால் உடலுக்குத் தேவையான அளவு புரதச் சத்து கிடைக்கும் என்று அமெரிக்காலவைச் சேர்ந்த காங்கோனி என்ற விஞ்ஞானி கூறியுள்ளார்.

பூச்சிகளை எப்படி மனிதனுக்கு உணவாக மாற்றுவது என்பது பற்றி அமெரிக்காவில் ஆராய்ச்சி நடத்தப்படுகிறது.

கோதுமை கேக்

தேவையான பொருட்கள்:

பிளாண்டா 6 அவுன்ஸ், கோதுமைமாவு $1\frac{1}{2}$ கப், சர்க்கரை $\frac{3}{4}$ கப், ஜேம் 1 கப், நெஸ்டம் $1\frac{1}{2}$ கப், பேக்கிங் சோடா $\frac{1}{2}$ தேக்கரண்டி, உப்பு $\frac{1}{2}$ தேக்கரண்டி.

செய்யும் முறை:

கோதுமை மாவைச் சலித்து அதனுடன் சோடா, நெஸ்டம் ஆகியவற்றையும் சேர்த்துக்கொள்ளுங்கள். பிளாண்டாவையும் சர்க்கரையையும் நன்கு அடித்துக்கொண்டு அதனுடன் கோதுமைமாவுக் கலவையை கொஞ்சங்கொஞ்சமாகச் சேர்த்துக் கிளறவும். பாத்திரத்தில் சிறிது பிளாண்டாவைத் தடவிக்கொள்ளுங்கள். செய்துவைத்த கலவையை இரு பகுதிகளாகப் பிரித்து ஒரு பகுதியை மேல் குறிப்பிட்ட பாத்திரத்தில் இட்டு சரிசமமாக்கவும். அதன் மேல் ஜேமைத் தடவி மறுபகுதிக் கலவையைக் கொட்டிச் சமப்படுத்தவும். இப்பாத்திரத்தை 'அவனி'ல் வைத்து சுமார் 25-30 நிமிடம்வரை அல்லது பொன்னிறமாகும் வரை 400 F உஷ்ணத்தில் வேகவைக்கவும். வெந்தவுடன் இப்பலகாரத்தைத் துண்டுகளாக வெட்டிக்கொள்ளவும்.

இப்பலகாரத்தைத் தேநீருடன் உண்டால் சுவையாக இருக்கும்.

காவேரி,
குருவாங்

எதுவரை சந்தேகம்?

"கன்னியாக இருக்கும் போது காதலிக்கலாமா வேண்டாமா என்ற சந்தேகம்; கல்யாணத்திற்குப் பின் கடைசி வரை தன்னை வைத்துக் காப்பாற்றுவாரோ மாட்டாரோ என்ற சந்தேகம்; தாய்மை நிலை அடைந்த பின் ஆண் பிள்ளையா பெண் குழந்தையா என்ற சந்தேகம்; குழந்தை பிறந்த பின் புருஷன் ஆபிசில் இருந்து லேட்டா வந்தா, இவர் ஆபிசுக்குத்தான் போனாரா இல்லை வேறு எங்காவது போனாரா? என்ற சந்தேகம்; வயசு காலத்திலே அவர் முந்திப் போவாரா இல்லை நாம் முந்திப் போவோமாங்கிற சந்தேகம்."

பலப்பரீட்சை நாடகத்தில் கேட்டவர்: கே. சசி

தொலைக்காட்சி

25-12-77 (ஞாயிறு) தமிழ்ப்படம் "குருதட்சணை" சிவாஜிகணேசன், பத்மினி, ஜெயலலிதா போன்ற முன்னணி நட்சத்திரங்கள் நடித்துள்ள இச்சமூகப் படத்தில் சீர்காழி கோவிந்தராஜன், பி. சுசீலா போன்றவர்கள் பாடிய பலபுகழ்பெற்ற பாடல்களும் இடம்பெற்றிருக்கின்றன.



29-12-77 வியாழன் தமிழ்ப்படம். "அவளுக்கு நிகர் அவளே" வெண்ணிற ஆடை நிர்மலா முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ள இப்படத்தை நிர்மலாவின் சகோதரர்தான் தயாரித்துள்ளார்.

முன்னோட்டம்

வானொலி

மனச்சூழல்

(ஞாயிறு தோறும் காலை 10.30க்கு ஒலிபரப்பாகிறது)

1-1-78 "தங்கச் சிலை" எழுத்து: சா. ஆ. அன்பானந்தன்.

8-1-78 "பனிபடர்ந்த மலையின் மேலே" எழுத்து: மலாக்கா முத்துக் கிருஷ்ணன்.

சிறுகதை

(ஞாயிறு தோறும் இரவு 8.45க்கு ஒலிபரப்பாகிறது)

1-1-78 "காலம் பதில் சொல்லும்" —தைப்பிங் ந. வரதராசன்.

8-1-78 "கணவனுக்காக"—செர்டாங் எல். முத்து.

நாடகம்

[சனிக்கிழமை தோறும் பிற்பகல் மணி 2க்கு ஒலிபரப்பாகிறது]

31-12-77 "சர்வ சாதாரணங்கள்" எழுத்து: எஸ். வைரக்கண்ணு

7-1-78 "ஒரு பிடி மண்" எழுத்து: பத்தாங் பெர்ஜுந்தை சுப்பிரமணியம் சக்கரவர்த்தி.

சிரிப்புச் சித்திரம்

(சனிக்கிழமைதோறும் இரவு 7.15க்கு ஒலிபரப்பாகிறது)

31-12-77 கிள்ளான் இரா. வளர்மதி எழுதிய பணமா பாவையா?

7-1-78 தலைநகர் எஸ். கிருஷ்ணம்மா எழுதிய அனுமான் அங்கப்பன்.

14-1-78 எம். சின்னத்தம்பி எழுதிய "இன்ஜினியர் மாப்பிள்ளை."

கண்ணோட்டம்

கடந்த 19-11-77 சனிக்கிழமை, மலேசியத் தொலைக்காட்சியில் இடம்பெற்ற "தும்புவான் மிங்கு" சிறப்பாக இருந்தது. அந்நிகழ்ச்சியில் சிகரெட் பிடிப்பதால் ஏற்படும் நோய்கள் எப்படி மனித இருதயத்தையும், சுவாசப்பையையும் பாதிக்கின்றன என்பதை ஆராய்ச்சியின் மூலம் கண் முன்னே எடுத்துக் காட்டியது நமது சமுதாயத்திற்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் வண்ணம் அமைந்திருந்தது. இம்மாதிரியான பேட்டிகளை வானொலியிலும், ஒலிபரப்ப முயன்றால் பயனுள்ளதாக இருக்கும்.

—இரா. முரசொலி மோகன்
கிள்ளான்

'நியூவேவ்'

"புதிய சமுதாயத்தையும்" 'நியூவேவ்' பிடித்துக் கொண்டது போலும். கடந்த 25-11-77-இல் இடம் பெற்ற "கதவிடுக்கில் சிக்கிய ஆத்மா" சிறுகதை இதைத்தான் உணர்த்துகிறது. பண்பட்ட .எழுத்தாளர்களுக்கு வேறு கரு ஏதும் கிடைக்காதா?

ஆ. சங்கப்பிள்ளை, மாடோஸ்

கண்டுபிடிப்பு

இருபதாம் ஆண்டின் மெர்தேகா குழந்தைகளைக் கண்டுபிடித்து, அவர்களோடு இரண்டு நாள் சுற்றுலாவை மேற்கொண்ட ஆசிரியர், அத்தோடு நின்றுவிடாது இதழிலும் ஆறு பக்கங்களை அவர்களுக்கென ஒதுக்கி விட்டதை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

"தஞ்சைக்கிழார்", தஞ்சோங் மாலிம்

வேறு வேலை...

புதிய சமுதாயம் நல்ல தரமான பத்திரிகை. கையில் கிடைத்தும் முழுதும் படித்து முடித்தபின்தான் வேறு வேலை செய்ய முடிகிறது. தங்களின் பத்திரிகைத் துறை அனுபவம் தங்கள் பத்திரிகையில் பளிச்சிடுகிறது!

எல். எம். நல்லையா, கிள்ளான்.

எங்கே தேடுவேன்?

தீபாவளிச் சிறப்பிதழில் இலக்கிய அரங்கத்தில் திருமதி ராஜம் கிருஷ்ணன் எழுதிய "சலனங்கள்" என்ற தலைப்பின் பகுதியைப் படித்தேன். நாவலைப் பெற விரும்பினேன். பட்டணம் சென்று தேடினேன். கிடைக்கவில்லை. ஏமாற்றத்துடன் வீடு திரும்பினேன்.
நாவலின் விலை, அதை எங்கே பெறுவது ஆகியவற்றை அறிவிப்பீர்களா?

ஜி. ராமன், ஜாசின்

பாராட்டு, நன்றி

தமிழ் நாட்டின் பத்திரிகைத் தரத்தை இங்கு நம் நாட்டில் கொண்டு வரப் பெரு முயற்சி எடுத்து வெற்றியும் கண்டுவரும் உங்களைப் போற்றுகிறேன்.
நல்ல தரமான சிறுகதைகளைக் கொண்டு வெளிவரும் புதிய சமுதாய இதழ்களைப் பெருமையுடன் வாங்கிப் படிக்க வாய்ப்பு உண்டாக்கிய உங்களுக்கு என் நன்றி.

வ. முனியாண்டி, கோலாலம்பூர்.

முன்னேற...

கடந்த சில இதழ்களாக வெளிவந்து கொண்டிருக்கும் தொழில் துறையில் முன்னேறியவர்களின் பேட்டிக் கட்டுரைகள் பிரமாதம். இவை முன்னேற நினைப்பவர்களுக்குப் பயனுள்ள கட்டுரைகளாகும்.

ச. தமிழ்ச்செல்வன், செலபா தோட்டம்

விதிகள்:

1. குறிப்புகளின் துணையோடு தக்க எழுத்துக்களைக்கொண்டு கட்டங்களை நிரப்பவேண்டும்.

2. ஒரு கட்டத்தில் ஓரெழுத்து மட்டுமே எழுதப்படவேண்டும்.

3. அழித்தல், அடித்தல், திருத்தல் கூடாது. "பால் பாயிண்ட்" பேனாவால் எழுதுவது நல்லது. பென்சிலால் எழுதுதல் கூடாது.

4. சரியான விடை எழுதியவர் வெ. 100 பரிசு பெறுவார். ஒருவருக்கு மேற்பட்டோர் வெற்றி பெறுவார்களாயின் இத்தொகை பகிர்ந்து அளிக்கப்படும்.

5. எவரும் சரியான விடையை எழுதவில்லையெனில் மிகக் குறைந்த பிழைகளையுடைய விடையை எழுதியவருக்கு வெ. 10 வழங்கப்படும். ஒரே எண்ணிக்கையிலான மிகக் குறைந்த பிழைகளுடைய விடையைப் பலர் எழுதியிருப்பின் வெ. 10 பகிர்ந்தளிக்கப்படும். எஞ்சிய வெ. 90 அடுத்த போட்டிக்கான பரிசுத்தொகையோடு சேர்க்கப்படும்.

6. ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். தனித்தாளில் எழுதப்படும் விடைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

7. கூப்பனில் எழுதப்படும் பெயர், அவரவரின் அடையாளக் கார்டில் உள்ளதன்படியே எழுதப்படவேண்டும்.

8. "புதிய சமுதாயத்தில்" பணியாற்றுபவர்களும் அவர்தம் குடும்பத்தினரும் போட்டியில் கலந்துகொள்ள இயலாது.


9. இப்போட்டி தொடர்பான அனைத்துக்கும் ஆசிரியரின் முடிவே இறுதியானது.

10. இறுதிநாள் 10-12-1973

11. கூப்பன்களை அனுப்பவேண்டிய முகவரி:-

"புதிய சமுதாயம்"
131, Jalan Tuanku
Abdul Rahman, [2nd Floor]
P.O. Box 2066 Kuala Lumpur

தமிழறிவுப் போட்டி ~ 10



'இறுதி நாள் 10~1~1978

பெயர். ______________________

அடையாள அட்டை எண். ______________________

முகவரி ______________________

____
கையொப்பம்.

இடமிருந்து வலம்:-

1. நீரில் வாழ்வது.

5. அம்பு.

7. இதைப் பறக்கவிட்டுப் பார்ப்பதில் சிறுவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள்.

8. குழந்தைகளுக்கு ஊட்டப் படுவது.

மேலிருநது கீழ்:-

2. காதலர்களிடம் அடிக்கடி தோன்றுவது. தலைகீழாகக் கிடக்கிறது.

3. எவ்வளவுக்கு எவ்வளவு நாம் அசந்து போகிறோமே, அவ்வளவுக்கு அவ்வளவு இவனுக்கு வருமானம்.

4. பெண்களில் சிலர் இதை அழகு படுத்துவதில் அதிக கவனம் செலுத்துவார்கள்.

6. சேமித்து வைக்கப் பயன்படும்.

போட்டி ~ 9 விடை



தமிழறிவுப் போட்டி 9-இல் பத்துப் பேர் சரியான விடைகளை எழுதி அனுப்பியிருந்தனர். அவர்களுக்குப் பரிசுத் தொகையான $190 பகிர்ந்தளிக்கப்படும்.

இப்போட்டிக்கு மொத்தம் 8,307 கூப்பன்கள் வந்தன.

பரிசுபெற்ற பத்துப் பேர்கள் வருமாறு:

1. ச. கருப்பையா, 77, கம்போங் பாரு, உலுதெமியாங், சிரம்பான்.

2. டி. ராமன்ஜி, 65, ஜாலான் நோர்த்தம், பினாங்கு.

3. ஆ. சுப்பிரமணியம், 323, ஓல்ட் டவுன் மார்க்கெட், ஜாலான் ஓஸ்மான், பெட்டாலிங் ஜெயா.

4. வி. பவானி, எண்: 4, டோவன்பி தோட்டம், சுங்கை சிப்புட், பேராக்.

5. திருமதி வி. மகாதேவன், டைமண்ட் ஜுப்ளி தோட்டம், ஜாசின், மலாக்கா.

6. எம். மணிமாறன், 147, ரூமா மூரா, கோலகுபுபாரு.

7. நா. சந்திரன், நைகல் கார்டினர் தோட்டம், பிரிவு 3, பத்தாங் பெர்ஜுந்தை, சிலாங்கூர்.

8. மு. முனுசாமி, 38-வது மைல், ரவாங் சாலை, பத்தாங் பெர்ஜுந்தை, சிலாங்கூர்.

9. மணியம் சுந்தரராஜ், புளுவேலி தேயிலைத் தோட்டம், தானா ராத்தா, கேமரன்மலை.

10. மு. இளங்கோ, 21, லிந்தாங் கேசோமா, கோலக்கிள்ளான்.



பால்மரக் காட்டினிலே

அகிலன்

19. முருகனின் தேனிலவு

கோலாலம்பூரிலிருந்து அதிகாலை வேளையில் புறப்பட்டு மலேசியாவின் மேற்குக் கடற்கரையை ஒட்டிய உள்நாட்டுப் பகுதியில் வடக்கு நோக்கி ஒரு கார் விரைந்து கொண்டிருந்தது. கார் புத்தம் புதிய கார்! அப்போதுதான் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கார். செம்பொன் நிறத்தில் வர்ணம் பூசப்பட்ட அதன் மேல் காலை இளம் சூரியனின் ஒளி பட்டுக் கண்ணைப் பறித்துக் கொண்டிருந்தது.

சாலையோ அகன்று பரந்த நெடுஞ்சாலை. கார்கள் போவதற்கு ஒரு புறமும் வருவதற்கு ஒருபுறமும் ஒதுக்கப் பெற்றிருந்ததால், விபத்தைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாத வேகம், அந்தச் சாலையில் ஓடிய கார்களிடம் தென்பட்டது. சாரிசாரியாகத் தலைநகரத்திலிருந்தும் தலைநகரத்தை நோக்கியும் கார்கள் பறந்த வண்ணம் இருந்தன.

வடக்கு நோக்கிச் சென்று கொண்டிருந்த கார் "ஏர் கண்டிஷன்" செய்யப் பெற்ற கார். அதற்குள்ளே பொருத்தியிருந்த "ரெகார்டரி"லிருந்து தமிழ்ச் சினிமா இசை காருக்குள் பொங்கி வழிந்தது. இடது கரத்தில் "ஸ்டியரிங்கை"ப் பற்றியபடியே காரை ஓட்டிக் கொண்டு வந்தான், பாலனின் அண்ணன் முருகன். காரின் முள் அறுபது மைலுக்கும் எழுபது மைலுக்கும் இடையில் நர்த்தனமாடிக் கொண்டிருந்தது. அவன் அருகில் "சீட்டில்" சாய்ந்தபடி வந்து கொண்டிருந்தாள் அவனுடைய இளம் மனைவி ராதா. அவளிடமிருந்து கமழ்ந்து வந்த "இன்டிமேட்" செண்டின் நறுமணம் முருகனை என்னவோ செய்துகொண்டிருந்தது.

காருக்குள் பின் இருக்கையில் இரண்டே இரண்டு பெட்டிகள் மட்டும் கிடந்தன. அவற்றில் அவர்களுக்கான மாற்றுடைகள், வாசனைத் திரவியங்கள், கைச் செலவுக்கு இரண்டாயிரம் டாலர்கள் எல்லாம் இருந்தன.

முருகன்-ராதா தம்பதியரின் தேனிலவுப் பயணம் இது.

மலேசியத் தீபகற்பத்துக்கே உரிய இயற்கையின் பேரழகு அந்த வழியெங்கும் இரு மருங்கிலும் கொள்ளை கொள்ளையாய்க் கொட்டிக் கிடந்தது. இயற்கை எழிலை ரசித்துப் பழகியவர்களுக்கென்றால் இரண்டு கண்கள் போதவே போதா. வழி நெடுகிலும் அங்கங்கே நெடிதுயர்ந்த காட்டு மரங்கள், ரப்பர் மரங்கள், தென்னைகள், வாழைகள், லாலான் புதர்கள் எல்லாம் காட்சியளித்தன.

திரும்பிய பக்கமெல்லாம் குன்றுகள், மலைகள், சிற்றாறுகள், பேராறுகள், பசுமை-பசுமை! மாதம் மூன்று மழையுள்ள நாடு என்று அதைச் சொன்னால் போதாது. ஆண்டுக்கு மூன்று மாதமே அங்கு மழை குறைவாகப் பெய்யுமாம். மற்ற மாதங்களில் நினைத்தபோதெல்லாம் மழை. ஆனால் அடை மழை இல்லை. உடனுக்குடனே வெயில். ஆனால் சுட்டெரிக்கும் வெயில் இல்லை. எப்போதும் இதமான காற்று. ஆனால் பேய்க்காற்றில்லை. இயற்கைத் தேவனும் தேவியும் தங்களது ஆனந்த மனோலயத்தின் உச்சகட்டத்தில் இருந்த வேளையில் படைக்கப்பட்ட பிரதேசம்போலும் எழிலார்ந்த அந்த மலேசியப் பிரதேசம்!

அத்தகையோர் ஆனந்த மனோலயந்தன்னில் இருக்கவேண்டியவர்கள்தாம் முருகனும் ராதாவும். முருகன்கூட அப்படித்தான் இருந்தான். அவனுடைய அன்றைய எல்லை வடகோடிக் கடற்கரையை ஒட்டியிருந்த பங்கோர் என்ற தீவு. சுற்றிலும் கடலால் சூழப்பட்ட பசுங் குன்றுகள் நிறைந்த அந்தச் சிறு தீவின் நவீன வசதிகள் நிறைந்த ஓர் ஓட்டலில், முன்பே அவன் தங்களுக்கென்று ஓர் அறையை ஒதுக்க ஏற்பாடு செய்திருந்தான். நடுப்பகல் உணவை ஈப்போ நகரத்தில் முடித்துக்கொண்டு அங்கு ஓர் ஓட்டலில் தங்கிச் சிறிது ஓய்வெடுத்துக்கொண்டு மாலைப் பொழுதுக்குள் பங்கோர்த் தீவை அடைந்துவிட வேண்டும்.

ஆனால் ராதாவின் முகபாவத்திலிருந்தோ காரில் அவள் சாய்ந்து கொண்டு வந்த விதத்திலிருந்தோ, அவளுடைய விழிகளிலிருந்தோ அவளுடைய மனநிலையை முருகனால் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒன்றுமட்டும் அவனால் ஊகிக்கமுடிந்தது. புதுமணப் பெண் ஒருத்தி தேனிலவுப் பயணத்தின் போது எவ்வளவு உற்சாகத்துடன் இருப்பாளோ அப்படி அவள் இருக்கவில்லை. நகரத்தைத் தாண்டியவுடன் தன் வலக்கரத்தால் "ஸ்டியரிங்கை"ப் பற்றியபடியே இடக்கரத்தால் அவள் கழுத்தை வளைத்துத் தன் அருகே அவளை இழுக்க முயன்றான் முருகன்.

சட்டென்று அவன் கையை உதறிவிட்டு, "ரோட்டைப் பார்த்துக் கவனமாகக் காரை ஓட்டுங்க. நடுத்தெருவிலே நம்ப ரெண்டு பேரும் செத்துக் கெடந்தா அது ரொம்ப அவமானமாப் போகும்" என்று சுருக்கென்று தைக்கும்படி கூறினாள் ராதா. தேனிலவுப் பயணத்தின்போது தன் கணவனிடம் பேசிய முதல் பேச்சு இது.

பிறகு காரின் சன்னலோரத்துக்கு விலகி வந்து தன் பார்வையை வெளியே அலைய விட்டு வந்தாள் ராதா. இயற்கை அழகில் நெஞ்சைப் பறிகொடுத்துப் பரவசம் அடையும் இயல்பு அவளிடம் இருந்துங்கூட அப்போதைக்கு ஏனோ அவளால் அப்படி இருக்க முடியவில்லை. முருகனும் அவளிடமிருந்து சவுக்கடிபட்டது போன்ற உணர்ச்சியுடன், "கல்யாணமானதிலிருந்தே என்னமோ இவளுக்கு "மூட்" சரியில்லே; பங்கோர்த் தீவிலே போய்த்தான் இவளைச் சரிப்படுத்தணும்" என்று நினைத்துக்கொண்டான்.

சிரம்பான் நகரத்துக் காப்பிக் கடை ஒன்றின் முன்னால் காரை நிறுத்திவிட்டு இருவரும் கடைக்குள் நுழைந்து காலைச் சிற்றுண்டியை முடித்துக்கொண்டு திரும்பினார்கள். கார் மீண்டும் புறப்பட்டது.

"அடுத்தாப்பிலே வர்ர எஸ்டேட்டிலே தானே உங்கப்பா கிராணியா இருக்கார்? உங்கப்பா அம்மா எல்லாரையும் எனக்குப் பார்க்கணும்போலே இருக்கு. எஸ்டேட்டுக்குள்ளே காரை விடுங்க. எட்டிப்பார்த்திட்டுக் கால்மணி நேரத்திலே திரும்பிடலாம்."

தூக்கிவாரிப் போட்டது முருகனுக்கு. பதற்றத்தோடு அவளை முறைத்துப் பார்த்தான்.

"முதல்லே காரோட வேகத்தை கொஞ்சம் குறைங்க. உங்களோட விக்டரி எஸ்டேட்டுக்கு போயிட்டுத்தான் நாம இன்னிக்கு மேலே போகப் போறோம்."

''அங்கே போனு எங்கப்பாவோ அம்மாவோ நம்மோட முகம் கொடுத்துப் பேசமாட்டாங்க. அப்புறம் நம்ம பயணத்தோட நோக்கமே கெட்டுப் போகும். நமக்கு வரவேற்பு இருக்காதுங்கறது மட்டுமில்லே. நம்மோட சந்தோஷத்தையே அவுங்க நிச்சயம் குலேச்சிடுவாங்க."

''என்னைப்பத்தி நீங்க கவலைப்பட வேண்டாம். அவங்களாலே அவமானம் எற்பட்டா அதை நான் தாங்கிக்குவேன்" என்று 'அவங்களாலே" என்ற சொல்லுக்கு அழுத்தம் கொடுத்துப் பேசினுள் ராதா.

முருகன் காரின் வேகத்தைக் குறைக்க விரும்பவில்லை. வழியில் விக்டரி எஸ்டேட் நெருங்கிக் கொண்டிருந்ததே காரணம்.

''மெதுவாப் போங்கோ! எஸ்டேட் வந்தவுடனே காரை நிறுத்துங்க. இல்லேன்னு நான் கதவைத் திறந்துக்கிட்டுக் கீழே குதிச்சிடுவேன்."

காரின் வேகம் குறைந்தது. ராதா கவனமாக எஸ்டேட் வாயில் முகப்பை உற்றுப் பார்த்துக் கொண்டு வந்தாள். முருகனுக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. முகத்தை அடிக்கடி அழுத்தித் தேய்த்துக் கொண்டான். வேறு வழியாகப் பங்கோர்த் தீவுக்குப் போகவும் முடியாது.

எஸ்டேட்டுக்குள் போய் அவன் பெற்றோரைச் சந்திப்பது என்பது அவனைப் பொறுத்த மட்டில் தற்கொலை செய்துகொள்வதற்குச் சமமானது. போகாவிட்டாலோ அவள் தற்கொலை செய்து கொள்வதாகப் பயமுறுத்துகிருள். இதற்கு என்ன செய்வது? எஸ்டேட் வாயில் நெருங்கியவுடன், சற்றுத் தொலைவிலேயே அவளுக்குக் காரில் இருந்தபடி சுட்டிக் காட்டினுன்.

வாயில் முகப்பு வழியே நடுத்தர வயதைத் தாண்டிய நாலைந்து தொழிலாளர்கள் வெளியில் வந்து கொண்டிருந்தார்கள். பரட்டைத் தலைகள்: அழுக்குப் படிந்த பனியன்கள்; கந்தலான அரைக்கால் சட்டைகள். சிலருக்குக்குக் கால்களில் செருப்பு இல்லை.

வந்தவர்களில் ஒருவன் எதிர்ச் சாரியில் நின்ற புதுக் காரை வெறித்துப் பார்த்துவிட்டு அதன் அருகே விரைந்து வரத் தலைப்பட்டான். முருகனுல் அதற்கு மேலும் அங்கே தங்க முடியவில்லை. ஏதோ நடுக்காட்டில் மத யானையைக் கண்டுவிட்டவன்போல், கைகால்கள் உதற லெடுக்கக் காரை மிக வேகமாக விரட்டினுன். எண்பது மைல் வேகத்தில் பறந்தான். தோட்டக்காட்டிலிருந்து வந்தவன் காருக்குள் முருகனைப் பார்த்துவிட்டு, ''ஏண்டாப்பா, நம்ப வீரப்பன் மகன் முருகன்தானே நீ? உங்கப்பன்கூட இப்ப மரம் வெட்டிக்கிட்டுத்தான் இருக்கும்; நீ பார்க்கலையா?" என்று கேட்டுவிட்டால் என்ன செய்வது? தான் ஒரு கிராணியின் மகன் என்றல்லவோ அவன் ராதாவிடம் சொல்லி வைத்திருக்கிறுன்?

''ஏன், இப்படி ஒரு கூலியைக் கண்டு நீங்க பயப்படறீங்க?" என்று கேட்டாள் ராதா. அதற்கு மேலும் அவள் தன் பிடிவாதத்தில் ஆர்வம் காட்டவில்லை.

"அவன் வந்து எங்கப்பா கிட்ட......எங்கப்பாகிட்ட..." என்று தடுமாறினுன் முருகன். மிகப் பெரிய கண்டத்திலிருந்து அப்போதைக்குத் தப்பிவிட்ட உணர்ச்சி அவனுக்கு.

ராதா தன் ஓரக்கண்களால் அவனைக் கவனித்துக்கொண்டு வந்தாள். வேர்த்து வேர்த்துக்கொட்டியது அவனுக்கு. வழுவழுப்பான மிருதுவான இருக்கையில் அமர்ந்தபடி அவன் கார் ஓட்டுவதாகத் தெரியவில்லை. முள் விரிப்பின்மேல் உட்கார்ந்திருப்பவன் போல் காணப்பட்டான். அவனிடம் ஓரளவு இரக்கம்கூட ஏற்பட்டது ராதாவுக்கு. இனியும் அவனிடம் ஏதும் முரட்டுத்தனமாகப் பேசினுல், அவனுல்கார் விபத்து ஏற்பட்டாலும் ஏற்பட்டு விடும். ஆகவே அவள் அமைதியாக வருபவள் போல் நடித்துக் கொண்டு வந்தாள்.



குளுமையான காற்றை அள்ளி வீசும் "ஏர் கண்டிஷன்" சாதனம்; அவர்கள் வழக்கமாக விரும்பிக் கேட்கும் இன்னிசை; வெளியில் திரும்பிய திசைகளிலெல்லாம் கொள்ளை அழகு; வேகமோ மணிக்கு அறுபது மைலுக்கும் மேல். அவர்களுக்கும் கல்யாணமாகி இன்னும் ஒரு வாரங்கூட ஆகவில்லை.

இருந்தும் கூட ஏனோ இருவரும் இரு வேறு போராட்டங்களில் அப்போது உழன்றுகொண்டிருந்தார்கள்.

ஒரு வழியாக ஊப்போ நகரம் வந்தது. மேலை நாட்டுப் பாணியில் அமைந்திருந்த பெரியதோர் ஓட்டலை நாடி அவர்கள் சென்றார்கள். முன்னதாகவே தொலைபேசியில் முருகன் சொல்லியிருந்தபடி அவர்களுக்கு அங்கே அறை தயாராக இருந்தது. எல்லா வசதிகளும் நிறைந்த முதல்தரமான அறை. இரண்டு பெரிய பெரிய கட்டில்கள், மெத்தைகள். அறைக்குள் நுழைந்தவுடன் முதல் வேலையாக அங்கிருந்த குளிர்சாதனப் பெட்டியைத் திறந்து பார்த்தான் முருகன். பலவகையான மேல் நாட்டு மதுவகைப் புட்டிகள் அதற்குள் தயாராக அடுக்கப்பட்டிருந்தன. பிராந்தி, விஸ்கி, ஜின், ஒயின், பீர்இன்னும் எத்தனையோ வகைகள்.

ராதா குளியல் அறைக்குள் புகுந்து இளஞ் சூட்டில் வெந்நீர் வரும்படி குழாயைத் திருகி விட்டுக்கொண்டு குளிக்கலானாள். குளித்து முடித்துவிட்டு அவள் வெளியில் வருவதற்குள் பிராந்திப் புட்டியில் கால் பகுதியைத் தீர்த்துவிட்டான் முருகன்.

"நீயும் வர்ரியா?" என்று அவளையும் அழைத்தான்.

"எனக்கு இப்போ ஒண்ணும் வேண்டாம். சாப்பிட்டுக் கொஞ்சம் படுத்துத் தூங்கணும் போலே இருக்கு."

"தூங்கணுமா?" வியப்போடும் வெறியோடும் ராதாவைப் பார்த்தான் முருகன்.

"ஆமா, உடம்பு ஒரே அசதியாக இருக்கு. கொஞ்ச நேரம் தூங்கிட்டு உடனே கிளம்ப வேண்டியதுதான்" என்றாள் ராதா.

சாப்பாட்டு ஹாலுக்குப் போய் இருவரும் சாப்பிட்டு விட்டுத் திரும்பினார்கள். ராதா வந்து படுக்கையில் விழுந்தாள். கூடவே வந்து அவள் கட்டிலின் விளிம்பில் உட்கார்ந்தான், முருகன் மெல்ல அவளுடைய கரத்தைப் பற்றுவதற்கு முயற்சி செய்தான். தேளால் கொட்டப்பட்டதுபோல் வெடுக்கென்று தன் கரத்தை உதறிக்கொண்டாள் ராதா. முன்பின் தெரியாத அந்நியனைப் பார்ப்பதுபோல் அவனை வெறித்துப் பார்த்தாள்.

"ராதா!"

"பேசாமல் உங்களோட கட்டில்லே போய்ப் படுத்துத் தூங்குங்க."

உரிமையுடன் அவள் அருகே மேலும் நெருங்கினான் முருகன்.

"நான் சொன்னது புரியுதா உங்களுக்கு? எழுந்திரிங்க! இப்போ எனக்கு உடம்பும் சரியில்லை. மனசும் சரியில்லே."

"நான் சொல்றதைக் கேள். ராதா!"

"போங்க. மரியாதையாச் சொன்னா, சொன்னதைக் கேட்டுக்குங்க"

இதற்குமேல் அவளருகில் நெருங்கவோ அவளைத் தீண்டவோ முருகனுக்குத் தெம்பு இல்லை. அளவுக்கு மீறிய முரட்டுச் சுபாவமுள்ளவள் அவள். அவளுடையே அப்பாவின் செல்லப் பெண். "மரியாதை" என்ற ஒரு சொல்லை அவள் பயன்படுத்திய பிறகும் அவளிடம் உரிமை கொண்டாடினால், அந்த மரியாதை கெட்டுவிடும் என்பது அவனுக்குத் தெரியாததல்ல.

இருந்தாலும் அவனால் இந்த அவமானத்தைத் தாங்கிக்கொள்வது சிரமமாக இருந்தது. "கல்யாணத்துக்கப்புறம் தேனிலவுக்குன்னு வந்திட்டு ஒருத்தி இப்படியா நடந்துக்குவா?"

வசதிகள் நிறைந்த அந்த அறையின் தனிமை, அங்கே விரிக்கப் பெற்றிருந்த படுக்கைகள், அறையில் மாட்டப் பெற்றிருந்த படங்கள், சற்று முன்பு அவனுக்குள்ளே சென்று அவனுடைய நாடி நரம்புகளில் சூடேற்றிய மது யாவும் சேர்ந்து அவனைக் கிறங்க வைத்தன. ஆனாலும் அவன் அவளிடம் பயந்தான். தேனிலவு பாலைவனச் சூரியனாக மாறிப்போய்த் தன்னைச் சுட்டுப் பொசுக்கிவிடுமோ என்ற கிலி அவனை ஆட்டிப் படைத்தது.

"தயவுசெய்து நான் சொல்றதைக் கொஞ்சம் கேள். ராதா!"

"என்னத்தை இனிமே புதுசாக் கேக்கிறது? கல்யாணத்துக்கு முந்தியே நீங்க சொன்னதையெல்லாம் நம்பித்தான் நான் சீரழிஞ்சு போயிட்டேனே! — இப்ப, நான் சொல்றதை நீங்க கேளுங்க; என்னைத் தொடாதிங்க!" பெண் புலியாய்ச் சீறினாள் ராதா.

குளிர்சாதனப் பெட்டிக்குள் வரிசை வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த பாட்டில்கள் அவனைத் தங்களிடம் அழைத்தன. அப்போதைக்கு அவற்றிடம் தஞ்சம் புகுவதைத் தவிர அவனுக்கு வேறு வழி புலப்படவில்லை. கண்ணாடிக் குப்பியில் ஊற்றி ஊற்றி உறிஞ்சலானான். முகம் வேர்த்தது. கண்கள் சிவந்தன. எழுந்து வந்தான். நடை தள்ளாடியது. அப்படியே வந்து அங்கே கிடந்த திணிப் படுக்கையில் குப்புறச் சாய்ந்தான்.

(தொடரும்)



ஏமாற்ற முடியாது!

நடிகர் சிவகுமார்

“தமிழ்ப்படங்களில் புதுமை இல்லை என்று ரசிகர்கள் குறைபட்டுக் கொள்கிறார்கள். அவர்கள் படத்திற்குப் படம் புதுமையை எதிர்பார்க்கிறார்கள். ரசிகர்களின் கருத்தை நானும் ஒப்புக்கொள்கிறேன். ஆமாம். இன்றைய தமிழ்ப் படங்களில் நிச்சயமாகப் புதுமையில்லை.

“பேசும்பட ஆரம்ப காலத்தில் பாட்டுக்களுக்காகவே தமிழ்ப் படங்கள் வெற்றியடைந்துள்ளன. பிறகு வசனங்களுக்காகவே பிரமாத வெற்றியடைந்ததும் உண்டு. “பராசக்தி”, “வேலைக்காரி”, “மந்திரி குமாரி” போன்ற படங்களை நாம் மறந்துவிட முடியாது

“ஆனால் இப்போதெல்லாம் பாடல்களுக்காகவோ, வசனங்களுக்காகவோ படம் வெற்றியடைவதில்லை. நல்ல கதை அம்சம் கொண்ட படங்களாக இருக்கின்றனவா? அவை வெற்றியடையும். ஆனால் இன்றைய கதாசிரியர்கள் எழுதுவதையெல்லாம் எழுதிவிட்டார்கள். எப்படி எப்படி எழுசலாமோ அப்படியெல்லாம் எழுதிவிட்டார்கள். இனி எழுதுவதற்கு அவர்களிடம் புதுமை ஒன்றுமில்லை. இப்பொழுதும் எதை எதையோ வைத்து எப்படி எப்படியோ எழுதுகிறார்கள். ஆனால் அவற்றில் புதுமையில்லை என்பதை மட்டும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இனி புதுமையாக எழுதுவதற்கு அவர்களிடம் ஒன்றுமில்லை என்பதற்கு அண்மையில் வெளிவந்த சில தமிழ்ப்படங்களே போதிய உதாரணங்களாகும்.

“தமிழ்ப்பட ரசிகர்கள் இப்போதெல்லாம் புதுமையை மிகவும் விரும்புகிறார்கள். ஒரு படத்தில் நடிகர் இன்ன வசனம் பேசப்போகிறார் என்பதைப் படம் பார்க்கும் ரசிகன் முன்கூட்டியே கூறிவிடுகின்றான். உதாரணமாக ஒருகாட்சியில் ஒரு நோயாளியைப் பரிசோதித்த டாக்டர், என்ன வசனம் பேசப் போகிறார் என்பதைப் படம் பார்ப்பவர் முன்கூட்டியே கூறிவிடுவார். “ஒன்றும் பயப்படத் தேவையில்லை. நான் கொடுத்த மாத்திரைகளைக் கொடுத்து வாருங்கள்” என்பார். படம் பார்க்கும் ரசிகர் இதைக் கூறி முடிப்பதற்குள் டாக்டர் அந்த ரசிகர் கூறிய அதே வசனங்களைத்தான் கூறுவார்! அல்லது பரிசோதித்த பிறகு நொயாளியின் அருகில் இருப்பவரைச் சற்றுத் தள்ளி அழைத்துச் சென்றால், “என்னால் முடிந்தவரையில் முயற்சி செய்துவிட்டேன். கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்!” என்று சொல்லுவார்! நம் தமிழ்ப் படங்களில் இன்ன காட்சியில் இன்ன இன்ன வசனங்கள்தான் வரும் என்று ரசிகர்கள் முன்கூட்டியே சொல்லி விடுகின்றார்கள். அதனால் அவர்களுக்குத் தமிழ்ப்படங்கள் என்றாலே ஒரு சலிப்பு! எனவே படத்தைப் பார்த்துக்கொண்டிருக்கும் ரசிகன் அவன் சற்றும் எதிர்பாராத வகையில் புதுமையான வசனங்களைப் புகுத்தவேண்டும் என்பது தான் என் ஆசை!

“படம் பார்க்கும் ரசிகர்களை இப்பொழுது சுலபமாக ஏமாற்றிவிட முடியாது. படத்தில் ஒரு நடிகருக்கு, ஏன் எனக்கே மீசை சரியாக வெட்டப்படாமல் இருந்தால் அந்தத் தவற்றை இந்தக்காலத்து ரசிகன் வெகு எளிதில் கண்டுபிடித்துக் கூறிவிடுவான். இயற்கையான முடிதானா, அல்லது ‘விக்’ வைக்கப்பட்டிருக்கிறதா என்பதை எளிதில் கண்டுபிடித்துவிடுவான். அதுவும் ‘விக்’ பொருத்தபாக இல்லாவிட்டால் அதைச் சுலபமாகக் கண்டுபிடித்துவிடும் திறமைசாலிகள் இந்தக் காலத்து ரசிகர்கள். நாம் நம் பதினான்காவது வயதில் எங்காவது ஒரு கிராமத்துப் பள்ளியில் கல்வி பயின்று இருப்போம். ஆனால் அதே பதினான்கு வயதுள்ள நம்முடைய புதல்வர்கள் இப்பொழுது கான்வெண்டில் படித்து நம்மைவிடப் புத்திசாலியாக விளங்குகின்றார்கள். எனவே அவர்கள் தமிழ்ப்படங்களில் புதுமையை எதிர்பார்ப்பதில் தவறில்லையல்லவா”



லதாவுக்கு பயம்!

சிறுவயதிலிருந்தே சாதாரணமாக நடிகை லதா எதற்கும் பயப்பட மாட்டார். பேய்க் கதைகளையோ, பயங்கரமான காட்சிகள் கொண்ட திரைப்படங்களையோ கூட படிப்பதற்கும் பார்ப்பதற்கும் அவர் பயப்படமாட்டார். ஆனால் ஒரு விஷயத்தில் மட்டும் அன்றும் சரி, இன்றும் சரி லதாவுக்கு ஒரே பயம்!

அதைக்கண்டுவிட்டாலோ பயத்தால் அலறி அடித்துக்கொண்டு ஓடுவார். அது என்ன தெரியுமா?

கரப்பான் பூச்சி!



“தேவனே என்னைப் பாருங்கள்—என் பாவங்கள் தன்னை வாங்கி கொள்ளுங்கள்” என்று மனமுருக வேண்டி நிற்கிறாரோ இவர்.

“பாவத்தின் சம்பளம்” திரையில் முத்துராமன்.

தெளிவு பிறக்குமோ?

'பாவை'

அன்று கோவிலில், திருக் கல்யாணம்...

சுடர் விளக்குகளில், முத்தொளியில் முருகப்பெருமானும் வள்ளியம்மையும், வைரச் சிதறல்களாக ஜொலித்துக் கொண்டிருக்கிறார்கள்... சிவப்பும் நீலமுமாய் அந்த மென்மையான பட்டுக்குள், அம்மை எத்தனை அழகாய், அமர்ந்திருக்கிறாள்...! அருகே, வேலும் கையுமாய் வினை தீர்க்கும் வேலவன் வெற்றிப் புன்னகை புரிகிறான்...

அம்மையும் ப்பனும், மணக்கோலத்தில் மகிழ்ந்திருக்கும், திருக்காட்சிகண்டு பக்தர்கூட்டம் பரவசமுடன் கரம் கூப்பி நிற்கிறது...

ரோஜாவும் மல்லிகையும் குப்பென மொட்டவிழ்ந்து கொண்டது பே ல் இனிமையான அந்தச் சூழ்நிலையில் கையிரண்டும் கூப்பி மனமும் மெய்யும் ஒ ங்கி, மனமுருகி சன்னிதானத்தில் நிற்கிறார் அவர்.

"எல்லாப்பிணியும் எந்தனைக் கண்டால், நில்லா தோட நீ யெனக் கருள்வாய்"

இதழ்கள் முணுமுணுக்க அந்த வரிகளையே திரும்பத் திரும்பச் சொல்லியவர் மூடியிருந்த இமைகளை வில் கவும், அர்ச்சகர் தீபத்தட்டுடன் அவரை நெருங்கவும் சரியாக இருக்கிறது.

பட்டுத்தூளாக விரல்களை உறுத்துத் திருநீற்றை நெற்றியில் இட்டுக் கொள்ளும்போதும் குங்குமச் சிவப்பைத் திலகமாகத் தீட்டிக் கொண்ட போதும் இதமான மணம் சிந்தும் சந்தனத்தைக் கையிலும் கழுத்திலும், பூசிக்கொண்ட போதும் அந்தப்பாடல் வரிகளே மனதில் பூத்துச் சரிகின்றன.

வண்ண வண்ணத் தோரணங்கள், காற்றில் அசைந்தாடிப் பறப்பதுபோல் கோயில் பிரகாரத்தில் பெண்கள் கூட்டம் அலைமோதுகிறது.

அந்த வண்ணக் கும்பலிலிருந்து ஒதுங்கி நிற்பதுபோல் வெறிச்சிட்ட நெற்றியுடன், ஒற்றை மலராய் தனித்து நிற்கும் மீனாட்சி, அவர் பார்வையில் படுகிறாள். மனதில் சட்டென ஈரம் கசிகிறது. போன மாதம்வரை மஞ்சளும் குங்குமமுமாய் அவளே ஒரு மலர்ப் பந்தலாய் மணத்து நின்றாள்.

இப்போது...?

ம்... அவளையும், மீறி வரும் பெருமூச்சுக்குப் பதில் சொல்ல முடியாமல் கால்கள் ஆலய வாசலை நோக்கித் திரும்புகின்றன...

மீனாட்சியின் கணவர் சபேசனும்- அவரும் நெருங்கிய நண்பர்கள். நாற்பது வயதைக் கடந்தாலும் கட்டுக்குலையாத தேகம் சபேசனுக்கு...!

சாதாரணக் காய்ச்சல்- தலைவலி என்றுகூட படுக்கையில் படுத்திராத, அவருக்கு அப்படியொரு பயங்கர வியாதி வந்ததே ஆச்சரியம் தான்...

மனித வர்க்கத்தையே கதி கலங்க வைத்துக் கொண்டு வரும் புற்றுநோய்— சபேசன் காலில் ஒரு கட்டியாக வெடித்ததும்—அவர் கால்களை அறுவைச் சிகிச்சையால் அகற்றியதும்— மூச்சு மட்டும் நாலிழையாக தொக்கிக் கொணடு நிற்க, அவர் மரணப்படுக்கையில் விழுந்ததும்.. ஓ... எத்தனை, துன்பமயமான நினைவுகள் அவை...!

இத்தனைக்கும் அவர் மனைவி மீனாட்சி எப்படியெல்லாம், பாதுகாத்தாள் அவரை...!

உண்பதற்கும்—உடுப்பதற்கும், மற்ற எல்லாவற்றுக்குமே மற்றவரின் உதவியை நாடி நின்ற சபேசனுக்கு, அவள் தாயாக நின்று தூக்கிச் சுமந்தாள்...! சிறகுக்குள் குஞ்சைப் பாதுகாக்கும் தாய்ப் பறவையை ஏமாற்றிவிட்டு, பறப்பதற்குக் கூட குஞ்சுகளுக்கு மனம் வருமோ...?

சபேசனின் உடல், கூட்டை விட்டுப் பிரிந்த அன்று மீனாட்சி, எப்படியெல்லாம் துவண்டு தோய்ந்து போனாளோ அதைவிட பன்மடங்கு ஆர்ப்பரிக்கும் கடலென அலைமோதுகிறது அவரின் மனம்.

தன்னைவிட இளையவரான சபேசனின் மரணமும் அவருக்கு வந்த வியாதியும், அதை நினைக்கும்போதே பற்றியெரியும் நெருப்பாக ஒரு தகிப்பு! இயற்கையாகவே பயந்த சுபாவம் கொண்ட அவருக்கு சபேசனின் மரணம் ஒரு அதிர்ச்சியாகவே போய்விடுகிறது. அப்படியொரு வியாதி தனக்கும் வந்து விட்டால்? அதற்குமேல், தோன்றும் கற்பனைகளில் அவர் அப்படியே அமிழ்ந்து போவார்.

சபேசனுக்காவது. மீனாட்சி தாயாக நின்று பணிவிடை புரிந்தாள்.

அந்தப் பாக்கியம்கூட அவருக்குக் கிடையாதோ...? அவருக்கு, மனைவியாக வந்தவள் பூவும் பொட்டுமாக போய்ச் சேர்ந்துவிட்டாள். இப்போது, மகன் வீட்டில் அவரே ஒரு சுமையாகிப்போனார்...!

இப்படியொரு வியாதி தனக்கும் வந்துப் படுத்தபடுக்கையாகிப் போனால்- சுமையாக ஒதுங்கிப் போனவரை, மகனோ, மருமகளோ வைத்துக் கவனித்துப் பார்ப்பார்களோ! ஆறுதலுக்குக்கூட அருகில் ஆளிருக்காதோ...?

இந்த நினைவுகளில் நெஞ்சம் கலங்கிப்போகும். நெஞ்சில் முட்கள் நெருடலில் அவர் வாழைக் குருத்தாக துவண்டு போவார்..

தலைவலி-தலைவலி என்று வருந்திக் கொண்டிருந்தவனுக்கு தலையிலே புற்றுநோய் வந்து இறந்து போனானும். கையிலே கட்டி வந்தவனுக்கு, புற்றுநோய் என்று கையையே வெட்டிவிட்டார்களாம். அவனுக்கு வயிற்றிலே புற்றுநோய். இவனுக்கு கன்னத்திலே புற்றுநோய்.

இப்படியெல்லாம் செய்திகள் காற்றுவாக்கில் காதில் விழும்போது பயப்பிராந்தியால் அவர் அப்படியே சமைந்து போவார்... நெஞ்சை அழுத்தும் கனம் குறைய சில நாட்களாவது செல்லும். வானத்தை மூடும் மேகங்கள்போல் பயமும், குழப்பமும், சுயப்பிரக்ஞைகளை மூடும் பொழுது, வெறும் மனப் பிரமைகளில் நாட்கள் கழியும்.

ஒரு செடியை வளைத்து நட்டால் கூட அதன் கிளைகள் நேராக வளர்ந்து விடுகின்றன. ஆனால், மனதின் கோணலான நினைவுகள் மட்டும் நேராகும் சாத்தியமே கிடையாதோ...

உடம்பின் எந்தப்பாகத்தில் சிறுவேதனை ஏற்பட்டால்கூட, நினைவில் சபேசன் ஊஞ்சலாடுவார். வேர்விட்டு வளரும் அதிர்வுகளை அவரால் அறுத்தெறியவே முடியாதோ...?

"என்ன தாத்தா! இன்னைக்குக் கோயிலுக்கு போயிட்டு வந்ததிலிருந்து அப்படியே படுத்திட்டீங்க...?"

பேரன் சிவாவின் குரல் கேட்டு அவர் விழித்துக்கொள்கிறார். அந்த வீட்டில், அவருக்கு ஆதரவாக இருப்பவன் அவன் ஒருவன்தான்...சாய்வு நாற்காலியின் முதுகுப்புறம் குலுங்க அவர் எழுந்து அமர்ந்துகொள்கிறார்.

"ஒண்ணுமில்லே சிவா, காலையிலேயிருந்து தலையெல்லாம் கனத்துக்கிட்டு, காய்ச்சல் வர்ர மாதிரி இருக்கு அதாம்பா அப்படியே படுத்துட்டேன்"

அவர் பேசிக்கொண்டே சிவாவின் இரு கரங்களையும் பாசமுடன் பற்றிக்கொள்ளும்போது, அந்தக்



கரங்களின் நெருப்புத் தகிப்பால் திகைத்துப் போகிறார்.

"எனக்கும் காலையிலேயிருந்து காய்ச்சல்தான் தாத்தா.. இன்னை-க்கு ஸ்கூலுக்குகூட போகலே தாத்தா... ம்.. உங்களுக்கு தலை வலின்னா, இந்த "பேனடாலை" போட்டுக்குங்க தாத்தா..."

அவர் கையில் இரண்டு மாத்திரைகளைத் தந்தவனாய் அவன் உள்ளே போகிறான்.

உள்ளங்கையில் மின்னும் அந்த இரண்டு வெள்ளை மாத்திரைகளையே இமை கொட்டாது பார்க்கிறார் அவர்.

வேதனைகளை இனம் கண்டுக் கொள்ள முடியாத-விபரங்கள் புரியாத அந்த சிறுவன்கூட அவருக்கு ஒரு வடிகாலாக நிற்க துடித்தானோ...?

சின்னஞ்சிறு துளியாகச் சிதறி விழும் இந்தப் பிரிவினை அவர் பெற்று வளர்த்த மகனோ- அல்லது மருமகளோ காட்டியிருந்தால் படையாகத் திரண்டுவரும் "திகில்" உணர்வுகள் இல்லாமலேயே போயிருக்குமோ...?

நெற்றிப்பொட்டுகளை இலேசாகப் பிடித்து விட்டுக்கொள்கிறார். உடம்பில் அனல் வீசுவதுபோல் ஓர் உணர்வு... கைகால்களின் மூட்டுக்கள் எல்லாம் கழன்று வீழ்வதுபோல் உளைச்சல்.

அடுப்பின் வெதுவெதுப்பில், சுகங்காணும் விழையும் பூனைக்குட்டியாக அவர் சுருண்டு போகிறார்.

மறுநாள் பொழுது பொலபொலவென்று விடிந்தபோது. நீல நிறக் கம்பளிச் சட்டையும் தானுமாக அவர் அறைக்கு வந்து எட்டிப்பார்க்கிறான் சிவா.

"எப்படியிருக்கீங்க தாத்தா..." மூச்சுத்திணறலாய் ஒலிக்கும் வார்த்தைகளின் அவஸ்தை கண்டு, அவர் தவித்துப்போகிறார்.

"சிவா! உனக்கு என்னப்பா செய்யிது, ஏன் இப்படி சோர்ந்து போயிருக்கே...?

அவரின் தவிப்பைக்கண்டு சிவா மெல்ல புன்னகைக்கிறான்...

"வெறும் காய்ச்சல்தான்.. டாக்டர் கொடுத்த மருந்தை சாப்பிட்டுக்கிட்டுத்தான் இருக்கேன். நாளைக்கு எல்லாம் சரியாப்போயிடும் அது கெடக்கட்டும், உங்களுக்கு எப்படியிருக்கு...? தலைவலிக் காய்ச்சல் எல்லாம் சரியாயிட்டுதா தாத்தா...!"

வார்த்தைகளின், சிதறுதலி-லேயே அவனுடைய பலவீன நிலை குன்றத்துத் தீபமாகப் பளிச்சிடுகிறது.

"எனக்கு எல்லாம் சரியாயிட்டுதப்பா... நீ போய்ப் படுத்துக்கோ... உடம்புக்கு முடியாத சமயத்திலே ஏம்பா எழுந்திருச்சி நடந்துகிட்டு இருக்கே..." தாத்தாவின் வாஞ்சை மொழிகள் பேரனின் இதயத்தை வருடி விடுகின்றனவோ...?

"உடம்பு என்ன தாத்தா உடம்பு. நமக்கெல்லாம் நம்பிக்கை தானே உயிர்நாடி!" சிவா, தன் கல்வியறிவை மட்டுமல்ல, அவரின் மன பலவீனத்திற்கு ஒரு முற்றுப் புள்ளி வைப்பதற்காகவும் அந்த வார்த்தைகளை உதிர்த்தானோ!

"அப்படியெல்லாம் சொல்லாதேப்பா, நீ இன்னும் எவ்வளவோ படிக்க வேண்டும்! எப்படி எப்படியெல்லாமோ வாழ வேண்டும்"

அவர் பேச்சை முடிக்கவில்லை சிவா, அவர் நெற்றியில் அழுந்த முத்தமிடுகிறான்.

"எனக்கு மருந்து குடிக்க நேரமாயிடுச்சி தாத்தா. அம்மா திட்டுவாங்க. நீங்க படுத்துக்குங்க" அவன், அங்கிருந்து மெல்ல நடக்கிறான்.

பேச்சின் இடையில் அவன் அவ்வாறு கத்தரித்துக் கொண்டு செல்வது அவருக்கு என்னவோ போலாகிறது. பாட்டின் நடுவில் ராகம் இழை பிரிந்தாற்போல், இலேசான ஒரு அபஸ்வரம், தட்டுகிறது மனதில்.

தலையணையில் நன்றாக சாய்ந்துக் கொண்டு, போர்வையைக் கழுத்து வரை இழுத்து விட்டுக்கொள்கிறார்.

தலை, "விண்" என்று தெறித்துப் போவது போலவும், உடல் இரும்பாக கனத்துக் கொண்டது போலவும், மீண்டும் அந்தப் பாழாய்ப் போன உணர்ச்சி தலை தூக்கி விடுகிறதோ?

"கடவுளே! திடீரென எனக்கு உடம்புக்கு அதிகமாகி விடுமோ? இந்தப் படுக்கையே எனக்கு இறுதிப் படுக்கையாகி விடுமோ."

அவர் கண்களில் மின்னும்

அந்தப் பீதி முகத்தை விகாரமாக்கிக் காட்டுகிறது.

நெஞ்சின் மையத்தில் சபேசன் ஊஞ்சலாக ஓங்கி—ஓங்கி ஆடுகிறார்.

கண்களை இறுக்கிக் கொண்டவராய்— மன அந்தகாரத்தில் ஒளி தேடி அலைகிறார் அவர்.

கைகளுல் வலுவில்லாமல் ஊன்றுகோலைப் பற்றினால் கூட உதறிவிடப்படும்போது மனதில் வலுவில்லாதவர்களுக்கு...?

பொழுது இருட்டிக்கொண்டே செல்லும்போது அந்த வீடு, அல்லோலகல்லோலப்பட்டுப் போகிறது. டாக்டர் வந்து, மருந்து கொடுத்து விட்டுப்போன பிறகு மெல்ல அழுகையொலிகளும்— விம்மல்களுமாக, பொழுது மௌனத்தில் கரைகிறது.

நடுச்சாமம் கடந்திருக்கும்.

திடீரென உச்சஸ்தாயில் ஒரு சோகக்குரல்— எரிமலையாக வெடித்துச் சிதறுகிறது.

"ஐயோ மகனே, எங்களையெல்லாம் விட்டுட்டுப் போயிட்டியா! என் செல்வமே. இரண்டே நாள் காய்ச்சலிலே. இப்படி "பட்"டுனுப் போக உனக்கு எப்படியப்பா மனசு வந்தது.சிவா,என் கண்ணே!" உள்ளிருந்து ஒலிக்கும் அந்த அழுகையொலி வானத்து மழைத் துளிகளாக விழுந்து சிதறுகிறது.

உடலும்—மனமும், அதிர்ந்து போனவராக அவர், ஸ்தம்பித்துப் போகிறார்.

நேற்றெல்லாம் அவருக்கு நம்பிக்கையும் ஆறுதலும் கூறிய, அந்தப் புது மலரா—? இத்தனைக் கடுமையான வியாதியை வைத்துக் கொண்டும் அதைப் பற்றிக் கலங்காத அந்தப் பச்சைக் குருத்தா?

தன்னைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் —அவரின் நலம் கேட்ட அந்த நந்தா விளக்கா?

ஓ...ஓ கடை விழிக் கண்ணீர் கன்னங்களில் கோலமிடுகிறது.

"ஐயோ சிவா— என் அன்பு மகனே"

"வாழ்க்கை என்னன்னு புரியாத ஆறு வயசிலே நீ இறந்திருந்தாலும், நான் சமாதானமடைஞ்சிருப்பேனப்பா. எல்லாத்தையும் அனுபவிச்சு அறுபது வயசிலே செத்திருந்தாலும், என் மனசு கலங்கி இருக்காதேப்பா. இப்படி வாழ வேண்டிய, வயசிலே—பதினாறு வயசிலேயே போயிட்டியேப்பா"

அலையில் சுழன்று வரும் சிறு படகென தாயுள்ளத்தின், துன்பமும் வேதனையும்— அலை மோதுகின்றன.

சோகமாய் எதிரொலிக்கும். அந்த வார்த்தைகள் மலைப்பாம்புகளாக மாறி, அவரை வளைத்துக் கொண்டனவோ?

உணர்வுகள் அற்ற ஜடமாய் மரத்துப்போன அந்த மனதில் இனி யாவது தெளிவு பிறக்குமோ?

எங்கள் நாடு

எங்கள் நாடு வாழ்க என்று பாடுவோம் — நம்
எண்ணமெல்லாம் உயர ஒன்று கூடுவோம்
பொங்கு வளம் பெருகிடவே வாழுவோம் — உலகம்
புகழ்ந்துரைக்க அன்னை நாட்டை ஆளுவோம்.

பல்லினங்கள் வாழுகின்ற நாடுதான் — இது
பன்மொழிகள் பேசுவோரின் வீடுதான்
இல்லை இங்கே சிறிதுகூட வேற்றுமை — என்றும்
இன்பம் சேர்க்கும் நிலவுகின்ற ஒற்றுமை

பசுமை எங்கும் சிந்துகின்ற மண்ணிதாம் — வாழ்வின்
பயனையெல்லாம் காண உதவும் கண்ணிதாம்
பசியில் லாத வாழ்வளிக்கும் தங்கமே — நாம்
பாடிப் புகழைப் பரவச்செய்வோம் எங்குமே

—முரசு நெடுமாறன்



[22-10-77-இல் அம்பார்த்திறுங் தோட்டத் தமிழ்ப்பள்ளியில் பெற்றோர் தின விழாவில் இடம்பெற்ற கோலாட்டப் பாடல். படத்தில் அப்பள்ளியின் 5-6ஆம் வகுப்பு மாணவிகள் கோலாட்டம் ஆடுகின்றனர்.]

அவியல்

இதுவரை சமூக நலனபிவிருத்தி லாட்டரி குலுக்கில் முதல் பரிசாக நான்கு லட்சம் வெள்ளி வழங்கப்பட்டு வந்தது. எதிர்வரும் புத்தாண்டிலிருந்து முதல் பரிசின் தொகை ஐந்து லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

நியூ ஜெர்ஸியிலுள்ள மருத்துவர்கள் மூன்று மணி நேர அறுவைச் சிகிச்சையொன்றில் பத்து வயதுடைய பாகிஸ்தானியச் சிறுமிக்கு மாற்று இருதய இணைப்புக் குழாய் (VALVE) ஒன்றைப் பொருத்தியுள்ளனர். அந்த இணைப்புக் குழாய் ஒரு பன்றியின் உடலிலிருந்து எடுக்கப்பட்டதாகும்.

ஆசிய காற்பந்து சம்மேளனத்தின் தலைவரான துங்கு அப்துல் ரஹ்மான் அந்தப் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டார். சீனாவின் உள்விவகாரங்களில் தலையிடுகிறார் என்றும், "இரண்டு" சீன நாடுகளை உருவாக்குகிறார் என்றும் குற்றம் சாட்டப்பட்டதைத் தொடர்ந்து அவர் தமது பதவியை ராஜினாமா செய்தார். 1958-ஆம் வருடத்திலிருந்து அவர் அச் சம்மேளனத்தின் தலைவராக இருந்து வந்தார்.

முன்னாள் சிலாங்கூர் மந்திரி புசார் டத்தோ ஹருண் சம்பந்தப்பட்ட பேங் ரயாத் வழக்கின் தீர்ப்பு டிசம்பர் 6-ஆம் நாள் பெடரல் நீதிமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. நீதிபதி தமது தீர்ப்பில் டத்தோ ஹருணுக்கான தண்டனையை ஆறுமாதத்திலிருந்து நான்கு வருடமாகவும் பேங் ரயாத்தின் முன்னாள் நிர்வாக இயக்குநர் டத்தோ அபு மன்சோரின் தண்டனையை இரண்டு வருடத்திலிருந்து மூன்று வருடமாகவும் உயர்த்தினார். இருவரும் பிரிவி கவுன்சிலுக்கு அப்பீல் செய்துள்ளனர்.


மலேசியாவிலுள்ள பள்ளிகளில் போதிய மாணவர்கள் இருப்பின் தமிழ், சீன மொழிகள் அவசியம் கற்றுத் தரப்படும் என்றும் அப்படி கற்றுத் தராத பள்ளிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நாடாளுமன்றத்தில் துணைப் பிரதமர் டாக்டர் மகாதிர் கூறியுள்ளார்.

எகிப்திய அதிபர் அன்வர் சாடாட் மத்திய கிழக்கில் அமைதியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் சென்ற நவம்பரில் இஸ்ரேலுக்கு வருகை புரிந்தார். இவ்வருகைக்கு ஏனைய அரேபிய நாடுகள் காட்டிய எதிர்ப்பால் லிபியா, சிரியா, ஈராக், அல்ஜீரியா தென் யேமன் ஆகிய நாடுகளுடன் எகிப்து தனது தூதரக உறவுகளை முறித்துக் கொண்டது. மற்றும் எகிப்திலுள்ள சோவியத் நாடுகளின் கலாசார நிலையங்களையும் பேராளரகங்களையும் மூடும்படியும் எகிப்திய அரசாங்கம் உத்தரவிட்டது.

இம்மாதம் 4-ஆம் நாள் ஜோகூரில் மாஸ் "போயிங் 737" ரக விமான ஒன்று விழுந்து நொறுங்கியது. பினாங்கிலிருந்து கோலாலம்பூருக்கு செல்லும் வழியில் அடையாளம் தெரியாத நபர்களால் கடத்தப்பட்டதாகக் கருதப்படும் அவ்விமானத்திலிருந்த நூறு பேரும் மாண்டனர். மாண்டவர்களின் சிதைந்த உடற்பகுதிகள் ஏழு சவப் பெட்டிகளில் வைக்கப்பட்டு ஜோகூர் பாரு, கெபுன் தேயில், ஒரு பொதுவான புதைகுழியில் பல்வேறு மதச் சடங்குகளுக்கேற்ப புதைக்கப்பட்டன. அந்த இடத்தில், இறந்த நூறு பேர்களின் பெயர்களும் பொறிக்கப்பட்ட நினைவுச் சின்னமொன்று எழுப்பப்படும்.

உறவுப் பயணம்-3

ராமதாஸ் மனோகரன்




டேவன் தோட்டத்தில் நடைபெற்ற உறவுப் பயணக் கூட்டத்தில் ஆசிரியர் முருகு பேசுகிறார். அமர்ந்திருப்போர் இடமிருந்து: திருவாளர்கள். பொன். குரு. குப்புசாமி, மலாக்கா மாநில மணிமன்றப் பேரவையின் பொருளாளர் திரு. மா. ஆறுமுகம், டேவான் மணிமன்றத் தலைவர் திரு. கே. முருகையா, அசகான் மணிமன்றத் தலைவர் திரு. அ. வீராசாமி, மெர்லிமாவ் ம. இ. கா. தலைவர் திரு. ஜி. ஐயப்பன் பி. ஜே. கே.

இம்மாதம் நான்காம் தேதி ஞாயிற்றுக்கிழமை. மலாக்காவில் உள்ள புக்கிட் அசகான் தோட்டத்திலும் டேவான் தோட்டத்திலும் புதிய சமுதாயத்தின் உறவுப் பயணத்திற்கான சந்திப்புக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததால் அன்று காலை 10 மணி அளவில் தலைநகரிலிருந்து எங்கள் ஆசிரியர் முருகு அவர்களுடன் ஆசிரியர் பகுதியைச் சேர்ந்த நண்பர் இரா. முத்தரசனும், நானும் மலாக்காவை நோக்கிப் பயணமானோம். வழக்கம் போல் ஓட்டுநர் திரு. இராமசாமி காரை ஓட்டி வந்தார்.

போகும் வழியில் செமினி, பாஜம், மந்தின், சிரம்பான் போன்ற ஊர்களில் இடையிடையே நின்று விற்பனை ஏஜண்டுகளைச் சந்தித்து விற்பனை நிலவரங்களை அறிந்து கொள்வதில் ஆசிரியர் கண்ணும் கருத்துமாக இருந்தார். சிரம்பானை விட்டதும் எங்கள் கார் "போயிங் 747" வேகத்தில் மலாக்காவை நோக்கி விரைந்து சென்று கொண்டிருந்தது. பிற்பகல் மணி ஒன்றாவதற்கு இன்னும் 3 நிமிடங்களே இருந்தன.

இப்பொழுது எங்கு பார்த்தாலும் விமானக் கடத்தல்களும், அகோர விமான விபத்துக்களும் நடப்பது போல நாங்கள் பயணம் செய்த காரிலும் ஒரு அகோரம் எதிர்பாராமல் நடந்துவிட்டது.



டேவான் மணி மன்றச் செயலாளர் திரு. சி. குமரன்.

எங்களுக்கு முன்னால் சென்றுகொண்டிருந்த ஒரு லோரியை "ஓவர்டேக்" செய்தார் எங்கள் டிரைவர். அதே நேரம் சற்றுத் தொலைவில் எதிர்ப்புறமிருந்து மற்றொரு லோரி எமனைப் போல எங்களை நோக்கி விரைந்து வந்து கொண்டிருந்தது. எக்ஸிலேட்டரை அழுத்தினார் எங்கள் டிரைவர்.

படார்.. ! பட் ..!

மறுவினாடி "படார்... பட்... பட்..." என்ற பயங்கர ஒலி கேட்டது. அடுத்து எங்கள் காரின் இன்ஜின் பகுதியிலிருந்து புகை மண்டலம் கிளம்பியது... காரிலிருந்த எங்கள் நால்வருக்கும் ஒன்றுமே புரியவில்லை.

எப்படியோ சாமர்த்தியமாக டிரைவர் காரை சாலையோரத்திற்கு கொண்டுவந்து நிறுத்திவிட்டார். எதிரே வந்த லோரியும் தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போனது போல மின்னல் வேகத்தில் எங்களைக் கடந்து சென்றது. எல்லோரும் பரபரப்பாகக் கீழே இறங்கிப்போய்ப் பார்த்தோம். காரின் பேனட் பகுதியைத் திறந்து "செக்" பண்ணுவதில் முனைந்தார் டிரைவர். சில நிமிடங்களில் "இன்ஜின் பழுது பட்டுவிட்டது; இனி ஒன்றும் செய்ய முடியாது" என்று சொன்னார் அவர். அதைக் கேட்டதும் ஹைட்ரோஜன் குண்டைத் தூக்கிப் போட்டதுபோல எனக்குத் தோன்றியது.

எங்களால் ஜாசின் நோக்கியும் போக முடியவில்லை- தலைநகருக்குத் திரும்பிவிடவும் முடியவில்லை! எந்த வகையிலும் போக்குவரத்து வசதி கிடைக்கவில்லை. டிரைவர், வரும் லோரிகளையெல்லாம் நிறுத்த முயன்று கொண்டிருந்தார். பயனில்லை.

நண்பர் முத்தரசன் முகத்தை உம்மென்று வைத்துக்கொண்டிருந்தார். டிரைவரோ நாடித் துடிப்பே நின்றுவிட்டதைப்போல அதிர்ந்து போய் நின்றுகொண்டிருந்தார். ஆசிரியர் பலமான சிந்தனையோடு இருந்தார். இவர்களுக்கு மத்தியில் ஒன்றுமே புரியாமல் நான் நின்று கொண்டிருந்தேன்.

பக்கத்திலிருந்த அறிவிப்புப் பலகையைப் பார்த்தேன். அந்த ஊரின் பெயர் பெரிய எழுத்தில் பளிச்சிட்டது!

ஆயர் பானஸ் பிடாஸ்!" அடுத்து எங்கள் டிரைவரின் திருமுகத்தைப் பார்த்தேன். அதுவும் "பிடாஸா"கத்தான் இருந்தது! இந்த ஆயர் பானஸ் பிடாஸ் எனும் ஊர் சுடுநீர் குளத்திற்குப் பெயர்போன இடம். நாள்தோறும் 300க்கும் மேற்பட்ட சுற்றுப்பயணிகள் நாடெங்குமிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் இங்கு வந்து குளித்துவிட்டு ஓய்வெடுத்துச் செல்லும் புகழ்பெற்ற இடமாகும். எங்கள் காரும் நல்ல இடம் பார்த்துத்தான் படுத்துக்கொண்டு விட்டது.

"இடுக்கண் வருங்கால் நகுக" என்ற வள்ளுவனின் வாய்மொழியைப் படித்திருக்கிறேன். ஆனாலும் இடுக்கண் வந்துவிட்டால் சிரிக்கத்தான் மிகவும் சிரமமாக இருக்கிறது! எங்கள் ஆசிரியர் அந்த நேரத்திலும் அவருக்கே உரிய "டிரேட் மார்க்" சிரிப்பை உதிர்க்கத் தவறவில்லை!

"இந்த உறவுப்பயணம் பெரிய 'எட்வென்ஜரா'கி விட்டதே... அதற்குமேல் இனி ஆகவேண்டியதைக் கவனிக்க வேண்டியதுதானே" என்றார் எங்கள் ஆசிரியர்.

எங்கள் துரதிர்ஷ்டத்திலும் ஓர் அதிர்ஷ்டம் எங்களுக்கு அந்த இடத்திலேயே சில கெஜ தூரத்தில் காத்துக்கொண்டு நின்றது. பாலைவனத்தில் பயணம் செய்யும்போது தண்ணீர் குளத்தைக் கண்டுவிட்டதைப்போல நாங்கள் நால்வரும் அதனை நோக்கிப் படை எடுத்துச் சென்றோம். அது ஒரு பொதுத் தொலைபேசி! உடனே ஒரு சந்தேகம். இந்தப் பொதுத் தொலைபேசி உருப்படியாக இருக்குமா என்னும் சந்தேகம்தான் அது. ஏனெனில் "கிறுக்குப் பிடித்துப் போன" பொதுத் தொலைபேசிகளைப் பல இடங்களில் என் அனுபவத்தில் கண்டிருக்கிறேன். "மகமாயி இது உருப்படியாக இருக்க வேண்டும்" என என் குலதெய்வத்தை ஆத்மபூர்வமாகப் பிரார்த்தித்துக் கொண்டேன். நல்லவேளையாக அது ஒழுங்காகவே இருந்தது.

அதன் மூலம் முதலில் அசகான் திரு. குரு. குப்புசாமி அவர்களின் வீட்டிற்குப் போன் பண்ணி எங்களின் பரிதாப நிலைமையை எடுத்துக் கூறினேன். அங்கு அவரது துணைவியார் பேசினார். எப்படியும் ஏற்பாட்டாளர்களிடம் விவரம் சொல்லிக் காரை அனுப்புவதாகக் கூறி எங்களுக்குக் கொஞ்சம் துணிவை ஏற்படுத்தினார் அந்த அம்மையார்.


ஆசிரியர் கூறிய ஆலோசனைப் படி மறுபடியும் கோலாலம்பூருக்கு போன் செய்து எங்கள் காரை இழுத்துக்கொண்டு போவதற்கான வழியைப் பேசி முடித்தார் திரு. இராமசாமி. சுமார் ஒன்றரை மணி நேரத்தில் அசகான் மணிமன்றத் தலைவர் திரு. வீராச்சாமி அவர்கள் தமது மோரிஸ் மைனரில் "தசிக்ஸ் மில்லியன் டாலர் மேனை"ப் போல ஆயர் பனஸ் பிடாஸுக்குப் பறந்து வந்து சேர்ந்தார். காரை பழுது பார்க்கத் தலை நகருக்குக் கொண்டு செல்லுமாறு தேவையான ஆலோசனைகளை ஓட்டுநர் இராமசாமியிடம் ஆசிரியர் எடுத்துக்கூறிய பின்னர் நாங்கள் திரு. வீராச்சாமி அவர்களின் காரில் ஜாசின் நோக்கிப் புறப்பட்டோம். ஜாசின் நகரை அடைவதற்கு முன்னால் சாலை ஓரத்தில் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பசுமை கொஞ்சும் நெல் வயல்கள் இனிமையாகக் காட்சியளித்தன.

ஜாசினில்...!

நாங்கள் ஜாசின் நகரம் போய்ச் சேரும்போது மாலை மணி 4.25. அங்கு முன்பே குறிப்பிடப்பட்ட இடத்தில் அசகான் தமிழ்ப்பள்ளித் தலைமையாசிரியர் திரு. குரு. குப்புசாமி அவர்களும், டேவான் தமிழ் இளைஞர் மணிமன்றச் செயலாளர் திரு. சி. குமரனும், கலை ஆர்வமிகுந்த இளைஞர் கருப்பண்ணனும் காத்திருந்து எங்களை வரவேற்றனர்.

"முதலில் சாப்பாடு, பிறகு பேச்சு" என்பதனை ஏற்பாட்டாளர்கள் மெய்ப்பித்துக் காட்டினர்.

சாப்பாடு முடிந்ததும் நேராக டேவான் தோட்டத்திற்குப் புறப்பட்டோம். "அங்குக் கூட்டம் 4 மணிக்கு ஏற்பாடு செய்துள்ளார்கள். இப்போது மணி ஐந்தாகப் போகிறது. கூட்டம் இருக்கிறதோ என்னவோ?" என்று நண்பர் வீராச்சாமி கடிகாரத்தைப் பார்த்துவிட்டுக் கவலையுடன் சொன்னார். எங்களுக்கும் அதற்குமேல் கவலைதான். என்ன செய்வது? எதிர்பாராது நேர்ந்துவிட்ட கார் "பிரேக் டவுன்" தான் எல்லாவற்றுக்கும் காரணமாகிவிட்டது!



திருவாளர்கள் குப்புசாமியும் வீராச்சாமியும் அவரவர் கார்களில் எங்கள் எல்லாரையும் டேவான் தோட்டத்திற்கு அழைத்துச் சென்றனர். அதற்கு முன்பே செயலாளர் திரு. குமரன் கூட்டத்தைக் கவனிக்கும் பொருட்டுத் தமது வாகனத்தில் காற்றாய்ப் பறந்து சென்றுவிட்டார். டேவான் தோட்டத் தமிழ் இளைஞர் மணி மன்றத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அந்தச் சந்திப்புக்கு மாலை மணி 5.30 அளவில் போய்ச் சேர்ந்தோம். அங்கு டேவான் மணிமன்றத் தலைவர் திரு கே. முருகையன் புன்முறுவலுடன் எங்களை வரவேற்று அழைத்துச் சென்றார். கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மண்டபத்தினுள் சென்றதும் எங்களுக்கெல்லாம் மகிழ்ச்சியும் வியப்பும் ஏற்படக்கூடிய ஒரு காட்சியைக் கண்டோம். ஒரு மணிநேரம் கடந்துவிட்டிருந்தும் கூட்டம் கலைந்து செல்லவில்லை. இளைஞர்களும் மணிமன்றச் சகோதரிகளும் ஆர்வத்தோடு அமர்ந்திருந்தனர். அதோடு ஜாசின் லாலாங், மெர்லிமாவ் அதன் சுற்று வட்டாரத்திலிருந்தும் ஆண்களும் பெண்களும் நிறைய பேர் வந்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

திரு. குமரன் டேவான் மணிமன்றச் சார்பில் வரவேற்புரை ஆற்றினார். திரு. கே. முருகையன் அவர்களின் தலைமையுரைக்குப் பின்னர் மலாக்கா மாநில ம. இ. கா. துணைத்தலைவரும், மெர்லிமாவ் ம. இ. கா. தலைவருமான திரு. ஜி. ஐயப்பன் பி. ஜே. கே. புதிய சமுதாயத்தின் சிறப்புக்களைப் பற்றி எடுத்துரைத்தார். தொடர்ந்து பேசுகையில் வீட்டில் அவரது துணைவியாரும் இவ்விதழை மிகவும் விரும்பிப் படித்து வருவதாகவும், இன்றைய நிலைமையில் ஒவ்வொரு குடும்பத்திலும் புதிய சமுதாயம் இருக்கவேண்டியதின் அவசியத்தையும் அழகாக எடுத்துக்கூறினார் திரு. ஐயப்பன்.

பதிலைப் படித்து...

அவரை அடுத்து மலாக்கா மாநில மணிமன்றப் பொருளாளர் திரு. ஆறுமுகம் சிறப்புரை ஆற்றுகையில், தான் தமிழ்ப்பள்ளிக்கே சென்றதில்லை என்றும் சில ஆண்டுகளுக்கு முன்பு "முருகுவைக் கேளுங்கள்" பகுதியில் தான் கேட்ட ஒரு கேள்விக்கு ஆசிரியர் முருகு அவர்கள் நம் தாய்மொழியான தமிழின் அவசியம் குறித்து அளித்திருந்த பதிலைப் படித்துப் பார்த்து அதிலிருந்த ஆழமான கருத்தை உணர்ந்துகொண்டு அதன் பின்னர்தான் முயற்சி செய்து தமிழைப் படிக்க முயன்றதாகவும், இன்று தமிழை நன்றாக எழுதவும் படிக்கவும் முடிந்திருப்பதற்கு அந்தப் பதிலே காரணம் என்றும் பூரிப்புடன் நினைவு கூர்ந்து பேசினார்.

அவரைத் தொடர்ந்து அசகான் தமிழ்ப்பள்ளித் தலைமையாசிரியர் திரு. குரு. குப்புசாமி பேசினார். அவர்தம் உரை சிரிப்புக்கும் சிந்த

னைக்கும் நல்ல விருந்தாக அமைந்தது. திரு. குரு. குப்புசாமி அவர்கள்தான் மலேசியாவிலேயே முதன் முதலில் தமிழ்ப்பள்ளி மாணவர்களை "மாஸ்" விமானம் மூலம் மலாக்காவிலிருந்து தலைநகருக்கு அழைத்து வந்து பள்ளிச் சுற்றுலாவில் ஒரு புரட்சி செய்தவர் என்பதும் இங்கு நினைவு கூரத்தக்கதாகும்.


அதன் பின்னர் நண்பர் முத்தரசனும் நானும் பேசினோம். இறுதியாக எல்லோரும் ஆவலோடு எதிர்பார்த்திருந்த இடத்திலிருந்து குரல் வந்தது. ஆமாம். எங்கள் அன்புக்குரிய ஆசிரியர் முருகு அவர்கள்தான் பேசினார்கள். அவர் தம் உரையில் டேவான் தோட்ட மணிமன்றத்தினரின் துணிவையும் அவர்கள் வெற்றிகரமாக நடத்திவரும் மாட்டுப் பண்ணையின் சிறப்புகளையும் பாராட்டிப் பேசியதோடு "காரிய நோக்குள்ள திட்டங்களைக் கடமையுணர்வோடு செயல்படுத்தும் செயல் வீரர்கள்-வல்லவர்கள்" என்றும் அந்த மணிமன்ற உறுப்பினர்களுக்குப் புகழ்மாலை சூட்டினார்:

அண்மையில் மலாக்காவில் மாநில அரசாங்கம் நடத்திய செயல் திட்டப்போட்டியில் 165 இளைஞர் இயக்கங்கள் போட்டியிட்டன. அதில் டேவான் தமிழ் இளைஞர் மணிமன்றம் இரண்டாவதாக வந்து வெற்றி வாகை சூடியிருப்பதை அறிந்ததும் நாங்களும் அவர்களது வெற்றிக் களிப்பில் பங்குகொள்ளத் தவறவில்லை. அவர்கள் நடத்தும் மாட்டுப் பண்ணையின் மூலம் ஆண்டுதோறும் 3000 வெள்ளிக்கு மேல் வருமானம் கிடைப்பதை அறிந்து வியப்பால் எங்கள் விழிகள் விரிந்தன. அவர்கள் வளர்த்து வரும் பசுக்கள் அவர்களுக்குப் பாலை மட்டுமல்ல, பணத்தையும் சுரக்கின்றன. "கோமாதா எங்கள் குலமாதா" என்று அவர்களது நெஞ்சங்கள் இன்பத்தில் திளைக்கின்றன. அதுகண்டு "வாழ்க கோமாதா-வளர்க மணிமன்றத் திட்டம்" என நமது நெஞ்சங்களும் வாழ்த்துகின்றன!



மலாக்கா மாநிலத் தேசியத் தோட்டத் தொழிற்சங்கத் தலைவர் திரு. எஸ். எஸ். மணியம்.

ஆசிரியரின் உரைக்குப் பின்னர் கலந்துரையாடல் நடந்தது.



விவசாயப் பண்ணையில் டேவான் மணிமன்றத்தினர்.

திருவாளர்கள்: ராமன் குட்டி. முனியாண்டி. மெர்லிமாவ் என். காளிமுத்து போன்றோர் நல்ல கருத்துக்களை வழங்கினர். திரு. காளிமுத்து அவர்கள், தாம் கொசு மருந்து வாங்கப் போய் ஏமாந்த கதை ஒன்றினையும் கூறி எல்லோரையும் சிரிக்க வைத்துவிட்டார்! கலந்துரையாடலுக்கு மேலும் சுவை சேர்க்க மணிமன்றச் சகோதரிகள் குளிர்பானங்களை இன்முகத்துடன் வழங்கினார்கள்.

திரு. குமரனின் நன்றியுரையுடன் உறவுப் பயணத்தின் முதல் கட்டம் முடிந்தது. கடிகாரத்தைப் பார்த்தேன். மாலை மணி 6.40. வெளியிலும் இருள் சூழ்ந்து விட்டிருந்த நேரம் அது. அப்படியிருந்தும் டேவான் தோட்டச் செயல்வீரர்களின் முயற்சியில் செயல்பட்டு வரும் மாட்டுப் பண்ணையைப் பார்த்துவிட்டே அடுத்த கூட்டத்திற்குப் போக வேண்டும் என்று தீர்மானித்து விட்ட எங்கள் ஆசிரியர் கோமாதாவைச் சந்திக்க அந்த இருளிலும் நடக்க ஆரம்பித்து விட்டார். அவரை மணி மணியான இளைஞர்கள் அணி அணியாக பின் தொடர்ந்து சென்றனர். அந்நேரம் பார்த்து நானும் நேரத்தை வீணாக்காமல் "பாவையர் பக்கத்திற்காக, தனது உழைப்பால் குடும்பத்தை உயர்த்திவரும் குமாரி மு. புஷ்பத்தைப் பேட்டி எடுத்துக் கொள்வதில் முனைந்தேன்.

பொதிகை மலைத் தென்றல்

எங்கள் அடுத்த உறவுப்பயண நிகழ்ச்சி மலாக்கா புக்கிட் அசகான் தோட்டத்தில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. அதனை அசகான் தமிழ் இளைஞர் மணிமன்றத்தினர் ஏற்பாடு செய்திருந்தார்கள். இரவு சுமார் 8மணியளவில் அங்குப் போய்ச் சேர்ந்தோம்.

அசகான் மணிமன்றத்துச் செயலாளர் திரு. நாகராஜன் ஆசிரியர் முருகு அவர்களை வரவேற்று அழைத்துச் சென்று மணிமன்றத்தினரை அறிமுகப்படுத்தி வைத்தார்.

அந்தச் சமூக மண்டபத்தினுள் அமர்ந்திருந்தபோது நீர் வீழ்ச்சிக்குப் பக்கத்தில்தான் அமர்ந்திருக்கிறோமோ என்ற "குளு குளு" உணர்வு எனக்கு மட்டுமல்ல அங்கிருந்த அனைவருக்குமே ஏற்பட்டிருக்கும். காரணம் அவ்வளவு குளிர்ச்சி. அந்தத் தோட்டத்திற்கு அருகில்தான் மலாக்காவின் "ஓபிர்"மலை இருப்பதாக அங்குள்ள நண்பர்கள் விளக்கம் தந்தார்கள். அதன் பின்னர்தான் அந்தக் குளு குளு காற்றுக்கான காரணம் எங்களுக்கும் புரிந்தது.

இந்த இடத்தில் அந்த ஓபிர் மலையைப் பற்றிச் சிறிது சொல்ல வேண்டும். இந்திய வீரர் நேதாஜி எப்படி மறைந்தார் என்பது இது வரையில் யாருக்குமே புரியாத ஒரு புதிராக இருக்கிறது அல்லவா? அது போலவே மலாக்காவின் மாவீரனாக விளங்கிய ஹங் துவா எப்படி இறந்தான் என்பதும் யாருக்கும் புரியாத ஒரு புதிர்தான்! அவனது இறுதிகாலத்தின்போது இந்த மலையில்தான் அவன் மறைந்து விட்டதாகச் சொல்கிறார்கள். இப்படிச் சரித்திரப் புகழ் பெற்றுள்ள இந்த மலையை நம் ஆராய்ச்சியாளர்கள் கொஞ்சம் ஆராய்ச்சி செய்து பார்த்தால் இன்னும் பல சுவையான கதைகளெல்லாம் நமக்குக் கிடைக்குமல்லவா என்று என் மனம் ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்து விட்டது.

"முத்தமிழில் பாடவந்தேன்" என்று குமாரி கே. ராதா இன் குரலில் பாடிய தமிழ் வாழ்த்துப் பண்ணுடன் புக்கிட் அசகான் தோட்டத்தில் உறவுப் பயண நிகழ்ச்சி இனிதே ஆரம்பமானது. அசகான் மணி மன்றச் செயலாளர் திரு. நாகராஜனின் வரவேற்புபுரைக்குப் பின்னர் மணி மன்றத் தலைவர் திரு. வீராச்சாமி தலைமையுரை ஆற்றினார்.



அசகான் மணிமன்றம் அண்மையில் நடத்திய தலைமைத்துவப் பயிற்சியில் ஆர்வமுடன் கலந்துகொண்ட மன்றமணிகள்.

ஜோகூரில் நடந்த உறவுப்பயண நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள இயலாமல் போன குறையைத் தீர்த்துக் கொள்ளும் வண்ணம் மலேசியாவின் "வெள்ளி விழா" எழுத்தாளரும் (ஜோகூர்) தங்காக் ம. இ. கா. செயலாளருமான திரு. மா. இராமையா இந்தச் சந்திப்புக் கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினர்.

"மலேசியாவில் இப்படி எல்லா அம்சங்களையும் உள்ளடக்கிய ஒரு தரமான குடும்பப் பத்திரிகையைக் கொண்டுவர முடியும் என்று நான் நினைக்கவே இல்லை. தமிழ் நாட்டுப் பத்திரிகையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது "புதிய சமுதாயம்" உண்மையிலேயே மிகத்தரமான பத்திரிகை என்று நெஞ்சாரச் சொல்கிறேன்" என்றும் குறிப்பிட்டார் திரு. மா. இராமையா.

மலாக்கா தே. தோ. தொ. சங்கத் தலைவர்

அவரைத் தொடர்ந்து மலாக்கா தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. எஸ். எஸ். மணியம் புதிய சமுதாயத்தின் சிறப்புக்களை எடுத்துரைத்தார். "தோட்டப்புற இளைஞர்களும் செல்விகளும் எழுத்துத்துறையிலும் ஆர்வத்தோடு ஈடுபடவேண்டும். அவர்களிடம் நல்ல சிந்தனைகள் இருக்கின்றன அவற்றைக் கதைகளாகவோ, கட்டுரைகளாகவோ படைக்க முன்வரவேண்டும்" என்றும் ஆலோசனை கூறினர் திரு. எஸ். எஸ். மணியம்.

அடுத்து அசகான் ம.இ.கா துணைத் தலைவர் திரு. நோக்கால் தங்சா ம. இ. கா. தலைவரும் ஆங்கிலப்பள்ளி ஆசிரியருமான திரு. முத்து பி.ஐ.எஸ். ஆகியோர் பேசினர். அவர்களைத் தொடர்ந்து புதிய சமுதாயத்தின் நோக்கத்தைப் பற்றி நானும் பேசினேன். அடுத்து எங்கள் ஆசிரியர் முருகு சிறப்புரை ஆற்றனர். அவர் தம் உரையில் "இளைஞர்கள் வீணே பொழுதைப் போக்காமல் பயனுள்ள திட்டங்களில் ஈடுபட்டுச் சம்பாதிக்க வேண்டும். சேமிக்க வேண்டும். சேமித்த பணத்தைத் தக்க முறையில் முதலீடு செய்யவேண்டும். அப்போதுதான் நம் சமுதாயம் பலம் பொருந்திய சமுதாயமாக, ஆக்ககரமான சமுதாயமாக வளரமுடியும்" என்று கூறினர்.

அதன்பின்னர் கலந்துரையாடல் நடந்து. அவ்வமயம் ஆயர்பானஸ் தமிழாசிரியர் திரு. பொன்னம்பலம் ஜாசின் லாலாங் தமிழாசிரியர் திரு. திரு. கே. ரெத்தினசாமி மற்றும் திருவாளர்கள் ஏ. சேகரன். மா. கிருஷ்ணன், மாரியப்பன் ஆகியோர் மணிமணியான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் எடுத்துக்கூறினர். அவற்றுக்கெல்லாம் ஆசிரியர் தகுந்த பதில்களைக் கூறினர். அந்த வட்டாரத்திற்குப் "புதிய சமுதாயம் விற்பனைப் பொறுப்பை திரு. நாகராஜன் ஆர்வமுடன் முன்வந்து ஏற்றுக்கொண்டார்.

இரவு 10மணியளவில் கூட்டம் இனிதே முடிவுற்றது.


அதன் பின்னர் மகளிர்ப் பகுதியினர் சுவையாகவும், சூடாகவும் சாப்பாடு பரிமாறினர்கள். கூட்டம் முடிந்தது. சாப்பாடும் முடிந்தது! இனி கோலாலம்பூருக்குத் திரும்பவேண்டுமே...எப்படி? அந்த நள்ளிரவில் எங்கு போய் டாக்சி பிடிப்பது என்பதை நினைத்தபோது கபீரென்றது!

"யாமிருக்க பயமேன்" என்பது போலத் திருவாளர்கள் குரு. குப்புசாமி அவர்களும் வீராச்சாமி அவர்களும் நாங்கள் மலாக்காவிலிருந்து கோலாலம்பூர் திரும்புவதற்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டதாக வந்து சொன்னதைக் கேட்டதும் எங்கள் மூவருக்கும் வயிற்றில் பால் வார்த்ததுபோல் இருந்தது!

அந்த நல்ல உள்ளங்களுக்கும் மற்றும் சந்திப்புக் கூட்டங்கள் வெற்றிகரமாக நடைபெறத் துணை புரிந்த அனைவருக்கும் எங்களின் நன்றிதலைத் தெரிவித்துக்கொண்டு விடைபெற்றோம்.

நாங்கள் தலைநகருக்கு நலமே வந்து சேர்ந்தபோது பின்னிரவு மணி 2.30.

கோகிலா மாணிக்கம்



கவிமணி கிருஷ்ணதாசன்

கந்தைப் பழஞ்சீலை கொண்டுசெந் தாமரைக்
கண்களை மறைத்து மூடிக்
கன்னத்தி லேயடித் துத்திரு முகத்திலே
காறியுமிழ்ந் ருமிழ்ந்து
நிந்தித்த சங்கதம் செய்துதலை மொய்த்தமுள்
நீள்முடி பறித்து, மீள
நின்னைப் புடைத்ததா ரென்னவெம் பாவத்து
நிட்டூர மெளி தாகுமோ!
சிந்தைக் கனந்த ஆனந்தம் பரக்கவுடல்
"சில்"லெனப் புளக மேறச்
செவ்வாய் திறந்து மழலைச்சொல் சொலுந்தொறும்
செவிகொடுத் தினிது கேட்கும்
கொந்தைத் தருங்குழல் கன்னிமா மரிகைக்
குழந்தையே அருள் கூரவே!
குருவே! குபேரனே! குணவள்ள லே! யெமது
கோதிலா மா ணிக்கமே!

(இயேசுபிரான் அவதரித்த டிசம்பர் '24-ஆம் தேதி நள்ளிரவு மணி 12க்கு 1916-ஆம் ஆண்டில் பிறந்தவர் கவிமணி கிருஷ்ணதாசன். இயேசு பிரானைப்பற்றி அவர் எழுதிய கவிதை இது.)

டிசம்பர் 26 முதல்
ஜனவரி 10 வரை

15 நாள் பலன்

கும்பம் (ஜன. 20 — பிப். 18)

தன்னம்பிக்கை, தைரியம் உங்களுக்கு அதிகம். அதனால் வெற்றி தோல்வி பாராமல் அசாத்திய துணிச்சலோடு எதையும் செய்வீர்கள். பலன் நூற்றுக்கு எழுபது சதவிகிதமாவது கிடைக்கும். உடல்நிலை கொஞ்சம் விவகாரமாக இருக்கும். மோட்டார் சைக்கிள் ஓட்டுவீர்களா? அப்படியானல் கொஞ்சம் எச்சரிக்கையாக ஓட்டுங்கள்.

நல்ல நாட்கள்: 28, 1, 4
எச்சரிக்கை நாட்கள்: 27, 3

மீனம் (பிப். 9- மார்ச்சு 20)

"ஆற்றில் வருகுது, மணலில் சொருகுது" என்பதுபோல பல வழிகளிலும் வரும் பணம் பல வழிகளிலும் போய்விடும். என்ன செய்வது. உங்கள் கிரக பலன் அப்படி. உங்களுக்குச் சுற்று வட்டாரத்தில் செல்வாக்குப் பெருகும். நண்பர்கள் உறவினர்கள் உங்கள் வீட்டிற்கு அடிக்கடி வந்த வண்ணம் இருப்பார்கள். உடலாரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள். வெள்ளம் வருமுன் அணை போடுவது நல்லதல்லவா?

நல்ல நாட்கள்: 29, 31, 5
எச்சரிக்கை நாட்கள்: 1, 6

மேஷம் (மார்ச்சு 21 - எப். 20)

எல்லோருக்கும் நல்ல பிள்ளையாக இருக்க முயலவீர்கள். பிரச்சனைகள் எதிலும் சம்பந்தப்பட விரும்பாத சுபாவம் உங்களுக்கு. இதனுல் தல்வலி வராது. நிம்மதி கிடைக்கும் கூட்டுத் தொழிலில் நன்மை உண்டு. வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை. தொலை தூரப் பயணங்கள் போக நேரலாம். செய் தொழிலில் மாற்றம் ஏற்படும் சாத்தியம் உண்டு.

நல்ல நாட்கள்: 26, 9
எச்சரிக்கை நாட்கள்: 27, 28

ரிஷபம் (ஏப். 21 - மே. 20)

ஓய்வு ஒழிச்சலில்லாத வேலை உங்களுக்கு. கடன்காரர்களிடமிருந்து "பிக்கல் பிடுங்கல்" குறையும் சாத்தியம் உண்டு. மேலதிகாரிகளின் தயவு கிட்டும். சக தொழிலாளர்கள் உங்கள்மீது பொறுமைப்படுவார்கள். அதனுலென்ன, கவலையை விடுங்கள். உங்களுக்கு நல்ல எதிர்காலம் அமைவதற்குரிய வாய்ப்பு உருவாகிக் கொண்டிருக்கிறது.

நல்ல நாட்கள்: 30, 7
எச்சரிக்கை நாட்கள்: 4, 8

மிதுனம் (மே 21 - ஜூன் 20)

நண்பர்களிடம் மனவருத்தம் கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்கள் வரும். எதிலும் சந்தேகம், எதிலும் அச்சம் கொண்டு காரியங்களைக் கெடுத்துக்கொள்ளாதீர்கள். கடிதத்தின் மூலம் நல்ல சேதி வரும். திருமண முயற்சிகள் வெற்றியளிக்கும். உல்லாசப் பயணம் போகும் வாய்ப்புண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

நல்ல நாட்கள்: 28, 30
எச்சரிக்கை நாட்கள்: 27, 5

கடகம் (ஜூன்21- ஜூலை 20)

சிறு பிள்ளை மாதிரி கையும் காலும் உங்களுக்குச் சும்மா இருக்காது, எதையாவது செய்வீர்கள்; எங்காவது போவீர்கள். காரியக்காரராக நீங்கள் இருப்பதனுல் எல்லாமே நல்ல பலனைத்தான் கொடுக்கும். செலவுகள் அதிகம் ஏற்பட வழி உண்டு. கூட்டுத் தொழில் நன்மை அளிக்காது. "எலி வளையானுலும் தனிவளை நல்லது" என்பதைப்போல சுயேச்சையாகச் செயல்படுங்கள்.

நல்ல நாட்கள்: 26, 31
எச்சரிக்கை நாட்கள்: 27, 5

சிம்மம் (ஜூலை 21 - ஆக. 21)

எதிலும் இரண்டில் ஒன்று பார்த்துவிடும் சுபாவமுடைய நீங்கள் இப்போது கொஞ்சம் நிதானமுடனும் பொறுமையுடனும் பிரச்சனைகளைக் கவனித்தால் நல்லது. எதிலும் கையெழுத்திடுவதில் அவசரப்படாதீர்கள். மேலதிகாரிகளிடம் வாக்குவாதம் உண்டாகும். பணப்புழக்கத்திற்குப் பஞ்சமில்லை. அதனுல் எளிதில் பல காரியங்கள் சித்திக்கும்.

நல்ல நாட்கள்: 27, 4
எச்சரிக்கை நாட்கள்: 31, 1

கன்னி (ஆக. 22 - செப். 22)

"ஏழைச் சொல் அம்பலம் ஏறுது" என்பதுபோல உங்கள் பேச்சு வீட்டில்கூட அவ்வளவாக எடுபடாது. அதனுல் "அவனைத் தொடுவானேன் கவலைப்படுவானேன்" என "கம்" மென்றிருங்கள். செய் தொழிலில் உயர்வு கிடைக்கலாம். சக ஊழியர்களின் உதவி உண்டு. வீடு நிலம் போன்ற சொத்துக்கள் சேரும் சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. சிக்கனமாக இருந்தால் மேன்மேலும் வளமாக வாழ்வீர்கள்.

நல்ல நாட்கள்: 31, 7, 9
எச்சரிக்கை நாட்கள்: 29, 2

துலாம் (செப். 23-அக். 22)

எதிர்பாராத செலவுகள் ஏற்படும். குடும்பத்தில் மகிழ்ச்சிகரத்தக்க சம்பவங்கள் நிகழும். சில விஷயங்கள் எதிர்பார்த்ததைப் போலவே வெற்றிகரமாக முடியலாம். எல்லோரையும் அரவணைத்துச் செல்லும் பழக்கமுடைய உங்களுக்கு. எதிரிகள் இருக்க வாய்ப்பில்லை. அப்படியே இருந்தாலும் அவர்கள் இப்போது நண்பர்களாக மாறலாம்.

நல்ல நாட்கள்: 28, 3
எச்சரிக்கை நாட்கள்: 4, 9

விருச்சிகம் (அக். 23-நவ. 22)

பொருளாதாரம் நல்லபடி இருக்கும். கல்யாண முயற்சிகள் சித்திக்கும். உறவினர்கள், நண்பர்களின் ஒத்துழைப்பு நல்லபடி கிடைக்கும். திடீர்ச் செலவுகள் வரவாய்ப்புண்டு. உங்கள் வாக்குச் சாதுரியத்தால் பல காரியங்களைச் சாதித்து முடிப்பீர்கள். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை. கடிதப் போக்குவரத்தினுல் நன்மை உண்டு.

நல்ல நாட்கள்: 26, 8
எச்சரிக்கை நாட்கள்: 29, 5

தனுசு (நவ. 23 - டிச. 20)

கூடவே இருந்து குழி தோண்டும் நண்பர்களிடமிருந்து ஒதுங்குங்கள். எதற்கெடுத்தாலும் கோபமும் ஆத்திரமும் கொள்ளாதீர்கள். கூட்டுத் தொழில் நன்மை கிட்டாது. உத்தியோக உயர்வுக்கு வழிபிறக்கும். மேலதிகாரிகளின் ஆதரவும் பெரியோர்களின் ஆலோசனையும் உங்களுக்கு அதிகம் கிடைக்கும்.

நல்ல நாட்கள்: 30, 9
எச்சரிக்கை நாட்கள்: 27, 4

மகரம் (டிச. 21- ஜன. 19)

உங்களுக்கு இப்போது நல்ல முகராசி, கைராசிகூட. ஆகவே தொழில் முயற்சிகளில் முழுமூச்சாக ஈடுபடுங்கள். புதிய நண்பர்களின் சேர்க்கை ஏற்படும். மூளை சுறுசுறுப்பாக வேலை செய்யும். எந்த விஷயத்திலும் உங்களுக்கு நன்மை கிட்டும்படியாக யோசனைகள் பளிச்சென்த் தோன்றும். பிறகு என்ன, உங்களுக்குக் கவலை?

—தஞ்சை நகுலன்

(15 நாள் பலன், பிறந்த தேதியைக் கொண்டு கணிக்கப்படுகிறது. ஆகவே, அவரவர் பிறந்த தேதிக்குள் அடங்கிய ராசியில் கண்டுள்ள பலனைத் தெரிந்து கொள்ள வேண்டுகிறோம். எடுத்துக்காட்டாக, ஜனவரி 20ஆம் தேதி முதல் பிப்ரவரி 18ஆம் தேதிக்குள் பிறந்தவர்களுக்குக் கும்பம் (ஜன. 20-பிப். 18) என்பதன் கீழுள்ள பலன் பொருந்தும்.)

கிழக்கும் மேற்கும்

பயணம் செய்வது ஒரு கலை யென்றால், பயணத்தில் அனுபவித்தவற்றைச் சுவைபடச் சொல்லி, மற்றவரையும் அனுபவிக்க வைப்பது மற்றொரு கலை. இன்றிருப்பதைப்போல் இனிய பயண வசதிகள் இல்லாத பழங்காலத்திலேயே பயணத்தை ஒரு கலையாகக் கருதி மேற்கொண்ட அறிஞர் பலர். ஹுயூன் சுவாங், பாஹியான் முதலியோர் பல துன்பங்களுக்கிடையே மேற்கொண்ட பயணங்கள், இன்று வரலாற்றுப் புதையல்களாகவே கருதப்படுகின்றன. பயணம் இன்று எளிதாகவும், வேகமாகவும் மேற்கொள்ளப்படும் ஒன்றாகிவிட்டது. பல்வேறு நோக்கங்கள், வேகம் நிறைந்த வாழ்க்கை அமைப்பு முதலியவை இன்று பயணத்தை ஒரு கலையின் நிலையிலிருந்து சாதன நிலைக்கு இறக்கிவிட்டன. எனினும், ஒரு சிலருக்கு இன்றும் பயணம் ஒரு கலை என்ற நிலையிலிருந்தே மகிழ்ச்சியையும் அனுபவங்களையும் தருகிறது. அத்தகைய சிலரில் இ. ஜெ. ஜோன்சன் குறிப்பிடத்தக்க ஒருவர். தம் அனுபவங்களைத் தமிழ் நெஞ்சங்களுடன் பகிர்ந்து கொள்ள மொழி ஒரு தடையாக இருந்தாலும், அத்தடையைத் திருமதி உஷா நாயர் மூலம் தகர்த்து, வெற்றி கண்டுள்ளார் இ. ஜெ. ஜோன்சன். அதற்காக அவர் முதலில் பாராட்டப்பட வேண்டியவர்.

"கிழக்கும் மேற்கும்" என்ற பயண நூலின் முதற்பகுதியான இந்நூலில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், குவைத், எகிப்து, எதியோப்பியா, சவூதி அரேபியா, பஹ்ரின், டுபாய், அபுடாபி, சிங்கப்பூர், புருணை, தாய்லாந்து, வங்காள தேசம் ஆகிய நாடுகளில் அவர் அடைந்த பல்வேறு அனுபவங்கள் சுவையாக விளக்கப் பெற்றுள்ளன. இவற்றுடன் சபா, சரவாக் ஆகிய இடங்களில் அவர் பெற்ற அனுபவங்களும் இடம் பெற்றுள்ளன. பயணம் மேற்கொள்ளும் முன் செய்ய வேண்டுவன முதல், பயணம் செய்யும்போது கவனிக்க வேண்டுவன வரை ஒன்றுவிடாமல் அனைத்தையும் ஜோன்சன் விளக்கியுள்ளார். அவர் கண்ணோட்டத்தில் "விசா" வாங்குவதுகூட, ஒரு சுவையான அனுபவமாகவே அமைந்து விடுகிறது. ஒவ்வொரு நாட்டைப் பற்றியும் விவரிக்கும்போது, இன்றுள்ள நிலையை மட்டும் விவரிக்காமல், அந்நாட்டின் சுருங்கிய வரலாறு, கலைச் செல்வங்கள், நினைவுச் சின்னங்கள், வாழ்க்கை அமைப்பு ஆகியவற்றையும் முறைப்படி விளக்கியுள்ளார். பொருளாதார நிலையில் வசதியாக உள்ளவர்களை மட்டும் அன்றி, தாழ்ந்த நிலையில் உள்ளவர்களையும் அவர்களுடைய துன்பங்களையும் கூட அவர் விவரித்துள்ளார். இவற்றைப் படிக்கும்போது அவருடன் நாமும் பயணம் செய்யும் உணர்வே ஏற்படுகிறது. அவ்வாறு பயணம் செய்யும்போது பலவித மக்களைச் சந்திக்கிறோம்; அவ்வந் நாட்டுப் பத்திரிகைகளைப் பார்க்கிறோம்; அங்கங்கு திரைப்படங்களைப் பார்க்கிறோம்; அவருடைய உறவினர்களையும் பிறரையும் சந்தித்து அளவளாவவும் செய்கிறோம். சிலர் அன்பையே பொழிகிறார்கள்; சிலர் ஏமாற்றுவதையே வாழ்க்கை முறையாக்கிக் கொள்கிறார்கள்; சிலர் அதிகாரம் செய்தே தங்கள் காரியங்களைச் சாதித்துக் கொள்கின்றனர். அரசியல் எல்லைகள் ஒவ்வொரு இடத்திற்கும் வேறு வேறு பெயர்களைச் சூட்டினாலும், மனிதன் ஒருவன் தான் என்பதையே இவ்வனுபவங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

இலங்கையைப் பற்றி அவர் கூறும்போது, எதற்கும் அமெரிக்க டாலரையே பெற்று, உள்நாட்டு நாணயத்தை அவமதிக்கும் போக்கைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இது சிந்தனையைத் தூண்டும் ஒன்று. இந்தியாவில் அவர் பெற்ற அனுபவங்கள் பல்வேறு வகையானவை. அந்த நாடு பரந்திருப்பதுபோல் அனுபவங்களும் பரந்துள்ளன. குவைத் பற்றி விளக்கும்போது, பல புதிய அனுபவங்கள் நமக்கு ஏற்படுகின்றன. இந்நாட்டில் புகை வண்டி கிடையாது; மூன்று நான்கு பஸ்களே உள்ளன; சில வாடகை வண்டிகளும் உண்டு. ஆனால் பெரிய பெரிய கார்கள் மிக அதிகமாக உள்ளன. பகலில் விளக்கைப் போட்டபடியே கார்கள் ஓடுகின்றன. விபத்துக்களைத் தவிர்க்கவே இந்த ஏற்பாடாம். பழுதுற்ற கார்களைச் சாலை ஓரமாக ஒதுக்கிவிட்டு வேறு கார்களை வாங்குவது இங்கு எளிது. இந்நாட்டிற்குப் பழங்கள் லெபனானிலிருந்தும், காய்கறிகள் இந்தியாவிலிருந்தும் வருகின்றன. வேண்டிய காய்கறிகளைக் கூடையில் போட்டுக் கொடுத்தால், அதை நிறுத்துக் கடைக்காரன் சொல்வதே விலை. ஒவ்வொரு காய்கறிக்கு ஒவ்வொரு விலை இங்கு இல்லை. இங்குள்ள மக்களுக்குக் கறுப்பு-வெள்ளை தொலைக்காட்சிப் பெட்டி தெரியாது. ஏனெனில் எடுத்த எடுப்பிலேயே வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இங்கு வந்து விட்டது. இங்குள்ள பெரும் பணக்காரர்கள் மூன்று நான்கு மாதம் வெளிநாடுகளில் தங்கும்போதும், பூட்டியிருக்கும் வீடுகளில் குளிர்சாதன இயந்திரங்கள் இயங்கிக் கொண்டே இருக்கும். வீட்டில் உள்ள பொருள்கள் கெட்டுவிடக் கூடாது என்பதே காரணமாம். இத்தகைய பல புதிய செய்திகளை ஒவ்வொரு நாட்டைப் பற்றியும் விளக்கும்போது கூறி, நம்மையும் அந்த அனுபவங்களில் பங்கு கொள்ள வைக்கிறார் நூல் ஆசிரியர். உரிய இடங்களில் தம் நாட்டையும் மொழியையும் அவர் மறந்துவிடவில்லை; ஒப்பிடவும் தயங்கவில்லை

தம் பயண நூலைப் பற்றிக் கூறும்போது, இதனை ஓர் அவியலுக்கு ஒப்பிடுகிறார் ஜோன்சன். மலையாளக் கறிவகைகளுள் ஒன்றான இதில் கிழங்குகளும் காய்கறிகளும் இலைகளும் தண்டுகளும் பூக்களும் ஒன்றாகச் சேர்த்துத்தான் சமைக்கப்படுகின்றது. இந்நூலிலும் வரலாறு, புதிய வளர்ச்சி, பல்வேறு வாழ்க்கை நிலைகள், கலைகள் பற்றிய குறிப்புகள் இருப்பதாலேயே அவர் இவ்வாறு குறிப்பிடுகிறார். மலையாள அவியலைப் போல் இப்பயண அவியலும் சுவையாகவே அமைந்துள்ளது.

இவ்வளவு சுவையான அனுபவங்களைத் தரும் இந்நூலில் அச்சுப் பிழைகளைத் தவிர்த்திருக்கலாம். சில இடங்களில் வாக்கியங்கள் துண்டாக நிற்கின்றன.

ஒன்றிரண்டு இடங்களில் மிகையான சொற்கள் விழுந்திருப்பதும் கவனிக்கத்தக்கது. இந்தியப் பாராளுமன்றத்தில் சில உறுப்பினர்கள் தத்தம் மொழியில் பேச எழுந்ததைக் குறிப்பிட்டுவிட்டு, "நாய்கள் பல ஒன்றோடொன்று சண்டையிடுவது போல ஒரு தோற்றம்" என்று அதைக் குறிப்பிடுகிறார் ஜோன்சன். ஒரு நாட்டின் மதிப்புமிக்க பாராளுமன்ற உறுப்பினர்களை இவ்வாறு குறிப்பிடுவது, அவர்களைப் புண்படுத்துவதாகாதா எனச் சிந்திக்க வேண்டும்.

தமிழில் பயண நூல்களுக்கு எப்போதுமே ஒரு தனிச் சலுகை கிடைத்துவிடும். நல்ல அமைப்பு, வண்ணங்கள், சில அரிய புகைப்படங்கள், நல்ல தாள், எடுப்பான அச்சு ஆகியவற்றால் உருவான அச்சலுகை இந்நூலுக்கும் கிடைத்துள்ளது. ஏற்கெனவே பயணம் செய்தவர்களுக்கும், இனி செய்யப் போகிறவர்களுக்கும், உட்கார்ந்த இடத்திலிருந்தே அனுபவங்களைப் பெற விழைபவர்களுக்கும் இப்பயண நூல் ஒரு நல்ல துணை.

"குன்றன்"

புதிய சமுதாயத்தில் இடம்பெறும் கதை, கட்டுரை, கவிதைகளில் வரும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே.

புதிய தளபதி

சோலை முனியன்

நாட்டைக் காக்கவும் நாட்டு மக்களின் நலனைக் காக்கவும் செயல்படும் நல்ல இதயங்களில், கொசுவின் ரீங்காரத்தைத் தேனிசையாகவும், கட்டாந்தரையைக் கனகப் பஞ்சணையாகவும், கல்லைத் தலையணையாகவும் எண்ணிக்கொண்டு கடமையாற்ற ஓர் இதயம் நடமாடுகிற தென்றால் அது இராணுவ வீரனின் இதயமாகத்தானிருக்கும். அத்தகைய இதயங்களுக்கெல்லாம் பேரிதயமாக, புதிய இதயமாக விளங்குபவர் மலேசிய இராணுவத்தின் முப்படைத் தளபதி ஜெனரல் டான்ஸ்ரீ டத்தோ ஹாஜி முகமது சானி பின் ஹாஜி அப்துல் காபார்.

கடந்த நவம்பர் 30-ஆம் தேதி முப்படைகளையும் சேர்ந்த முந்நூற்றுக்கும் அதிகமான அதிகாரிகள் மற்றும் வீரர்கள் கூடி நிற்க, தற்காப்பு அமைச்சில் கண்ணீரின் கதகதப்போடு நமது முன்னாள் முப்படைத் தளபதி ஜெனரல் டான்ஸ்ரீ இப்ராஹிம் பின் இஸ்மாயில் விடைபெற முடியாமல் கையசைத்து விடைபெற்ற போது கண்களைக் கசக்கிய அன்பு இதயங்களில் இவரின் இதயமும் ஒன்று.

அன்று மறுநாள் டிசம்பர் முதல் தேதி மூன்று படைகளின் தளபதிகளின் முன்னால் அதே இடத்தில் அதே இதயங்கள் சூழ்ந்து நின்று ஆனந்தக் கண்ணீர் விட, பதவியுரை நிகழ்த்தினார் நமது வீரமகனான முப்படைத் தளபதி.

ஜெனரல் டான்ஸ்ரீ டத்தோ ஹாஜி முகமது சானி பின் ஹாஜி அப்துல் காபார் அவர்களின் படை வாழ்க்கை 1949இல் பயிற்சி அதிகாரியாகத் (கேடட் ஆபீசர்) தொடங்கியது.

தலைநகர் கம்போங் செலயாங்கில் 1926இல் பிறந்த இவர் விக்டோரியா பள்ளியின் முன்னாள் மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது. கல்வித் தகுதியைப் பொறுத்தவரையில் ஆங்கிலம் ஓ.எஸ்.சி.யும், தேசிய மொழியில் ஐந்தாவது வகுப்பு வரையிலும்தான் பயின்றுள்ளார். ஜப்பானிய, இந்தோனேசிய மொழிகளை நன்கு பேசவும் எழுதவும் கூடியவர் என்பதைப் பலர் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

இராணுவ வாழ்க்கையில் காலடி எடுத்து வைத்து சுமார் பத்து மாதகால உள்நாட்டுப் பயிற்சிக்குப் பிறகு பலமுறை வெளிநாடுகளுக்குப் பயிற்சி பெறச் சென்று வந்துள்ளார்.

1952இல் இராணுவ அதிகாரிக்கான அதிகாரச் சான்றிதழைப் பெற்றபோது நமது மலேசியா இன்னும் சுதந்திரம் பெற்றிருக்கவில்லை. அப்போது 2-வது மலாய்ப் பட்டாளத்தில் 2-வது லெப்டினன்டாக சேர்ந்தார். அங்கு மூன்றாண்டு சேவை புரிந்துவிட்டு இரண்டாண்டுகள் இலண்டன் மாநகருக்குப் படிக்கச் சென்றார். 1957-இல் கல்வியில் தேர்ச்சி பெற்றுத் திரும்பியதும், தற்காப்பு அமைச்சில் பயிற்சித் துறைக்கு இணை அதிகாரியாகப் பொறுப்பேற்றார். அவ்வேளையில் அவருக்கு காப்டனாகவும் பின் மேஜராகவும் பதவி உயர்ந்தது.



[தளபதி பொறுப்பேற்ற பிறகு புதிய முப்படைத் தளபதி உரையாற்றுகிறார். பின்புறத்தில் இடமிருந்து: தரைப்படைத் துணைத் தளபதி லெப். ஜெனரல் டத்தோ ரசாலி பின் டத்தோ முகமது சே. கடற்படைத் தளபதி டத்தோ முகமது ஜைன் பின் சாலே, விமானப் படைத் தளபதி டத்தோ முகமது பின் தாயிப்.

அப்பொறுப்பேற்றுச் சரியாக மூன்று மாதங்களில் நமது மலேசியா சுதந்திரம் கண்டது. அதைத் தொடர்ந்து 1959இல் 2-வது மலாய்ப் பட்டாளத்திற்குத் துணைப் பொறுப்பதிகாரியாகப் பொறுப்பேற்றுத் தனது திறமையான இரண்டாண்டுகாலச் சேவையில் அதே பட்டாளத்தின் பொறுப்பதிகாரியானார். லெப்டினன்ட் கர்னலாக பதவியும் உயர்ந்தது.

மீண்டும் தற்காப்பு அமைச்சிற்கு மாற்றலாகித் தரைப்படை தலைமையகத்தில் ஓர் உயர் அதிகாரியானார். கெடா மாநிலத்தின் உயர் விருதுகளில் ஒன்றான "ஸ்ரீ மக்கோத்தா கெடா" விருதும் பெற்றார். உழைப்பு அவரைக் கர்னலாக உயர்த்தியது.

1965 ஜனவரி தொடங்கி 1966 ஏப்ரல் மாதத்திற்கிடையில் முறையே 8-வது மலாய்ப் பட்டாளம், முதலாவது பிரிகேட். 5-வது பிரிகேட் தளங்களுக்குப் பொறுப்பதிகாரியாகப் பணியாற்றி விட்டு மீண்டும் தற்காப்பு அமைச்சிற்குத் திரும்பினார்.

ஏழு மாதங்கள் அங்கு சேவையை முடித்தபோது 2-வது பிரிகேட் தளத்தின் பொறுப்பதிகாரியாகப் பொறுப்பேற்றதோடு, பெர்லிஸ், கெடா, பேரா, பகாங், கிளந்தான் மாநிலங்களில் அப்போது ஏற்படுத்தப்பட்டிருந்த பயங்கரவாதிகள் ஒழிப்பு நடவடிக்கையின் இயக்குநராகவும் சேவையாற்றினார்

இவர் ஐந்து நாடுகள் சேர்ந்து நடத்திய கூட்டு இராணுவப் பயிற்சி நடவடிக்கையின் முதல்வராகவும் இருந்தார். அப்பயிற்சியில் யுனைடட் கிங்டம், சிங்கப்பூர், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளோடு நமது நாடும் கலந்திருந்தது.

சேவை காலம் நீடிக்க நீடிக்க பதவியும் பிரிகேடியர் ஜெனரல், மேஜர் ஜெனரல் என்றும் உயர்ந்த போது, ஜே.எம். என்., டி.பி. எம். கே., பி. எம். பி. ஆகிய விருதுகளும் தாய்லாந்தின் உயர் விருதையும் பெற்றார். 1971இல் மலேசியத் தரைப்படையின் துணைத் தளபதியானார்.

இலண்டன், இந்தோனேசியா, தாய்லாந்து, சவூதி அரேபியா, கொரியா, ஹாலந்து போன்ற நாடுகளுக்கு விஜயமளித்துள்ள இவர் 1972-இல் ஐரோப்பிய நாடுகளில் மலேசியாவிற்கான இராணுவ ஆலோசகராகவும் கடமையாற்றி விட்டு 1975ல் தாயகம் திரும்பியதும் நமது தரைப்படையின் தளபதியாக பதவியேற்றதோடு பல விருதுகளையும் பெற்றார். அதில் நமது நட்பு நாடுகளான கொரியா, இந்தோனேசியா ஆகிய நாடுகளின் விருதுகளும் அடங்கும்.

நமது புதிய முப்படைத் தளபதியின் உறுதியும் நுணுக்கமும் நிறைந்த சேவையில் நாடு மேன் மேலும் உறுதிமிக்க நிலையான பாதுகாப்பைப் பெறும் என்பதில் சந்தேகமே இல்லை.

மருகுவைக் கேளுங்கள்

ச. சுப்பிரமணிய , ஷா ஆலம், சிலாங்கூர்

கே: இசை நாடகத் திலகம் உடையப்பா அவர்களின் நாடகங்களுள் சிறந்தது எது?

ப: "ஹரிச்சந்திரா" மிக உருக்கமான நாடகம்.

கே: தேசிய ஒற்றுமை வாரியத்தின் தலைவர், துன் வீ. தி. சம்பந்தன் அவர்கள் ஆற்றிய பணிகளில் உங்களைக் கவர்ந்தது எது?

ப: பத்துப் பத்து வெள்ளியாகச் சேர்த்து அவர் சமூகத்திற்கு உடைமையாக்கி இருக்கும் பலகோடி வெள்ளி மதிப்புள்ள தோட்டங்கள் மாண்புமிகு துன் சம்பந்தன் அவர்களின் பணிகளுக்கெல்லாம் சிகரமாகக் காட்சியளிக்கின்றன.

குமாரி எம். நாகம்மா, சுங்கை போக்கா தோட்டம், பேரா

கே: தன் பிள்ளைகள் தவறான வழிகளில் செல்கின்றார்கள் என்பதை அறிந்தும், அறியாதவர்கள்போல் நடந்து கொள்ளும் பெற்றோர்களுக்கு என்ன கூற விரும்புகின்றீர்கள்?

ப: செடிகளை வேலியிட்டு வளர்ப்பது போல் பிள்ளைகளையும் தீய சேர்க்கைகள் அவர்களை அண்டாமல் கண்காணிப்பது பெற்றோர்களின் தலையாய பொறுப்பு. அதனை உணராத பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் பாழாகுவதற்குத் தாங்களும் துணை நிற்பதாகவே கருதவேண்டும்.

ஏ. எஸ். சிவநேசன், பாமோல், குளுவாங்

கே: தாங்கள் இதுவரை எத்தனை அறிமுகக் கூட்டங்களுக்குச் சென்றுள்ளீர்கள்?

ப: நெகிரி செம்பிலானில் இரண்டு தோட்டங்களுக்கும், ஜொகூரில் நான்கு தோட்டங்களுக்கும், மலாக்காவில் இரண்டு தோட்டங்களுக்கும் இதுவரை உறவுப்பபணம் சென்றுவந்திருக்கிறோம்.

மு. சுப்பிரமணியம், பினாங்கு


கே: நம் பெண்கள் அசிங்கமாக சேலை உடுத்துவதைவிட முழுக்கால் சிலுவாரையும் சட்டையும் போட்டுக் கொண்டால் எவ்வளவோ தேவலாம். என் கருத்தை ஏற்றுக் கொள்கிறீர்களா?



ப: தங்கள் கருத்தை ஏற்க முடியாது. சேலைகளைப் பண்போடு நமது பெண்கள் அணிவதையே நான் ஆதரிக்கிறேன்.

ஆர். லோகநாதன், கம்போங் லாவோட், ஸ்கூடாய்

கே: கத்தி முனை, பெண்ணின் கண் வீச்சு இவ்விரண்டில் எதற்கு வலிமை அதிகம்?



ப: கத்தி பிடித்த வீரனையும் வீழ்த்தக் கூடியது பெண்களின் கண்வீச்சு.

"ஆர்வி" ஜெயா, சுங்கை

கே: தோல்வியையே சந்திக்க நேரிடுகிறது என்பதற்காக உயர்ந்த நோக்கங்களைத் தியனவாகக் கருதலாமா...?

ப: தோல்வி கண்டு உயர்ந்த இலட்சியங்களைக் கைவிடுவது கோழைத்தனம். மீண்டும் மீண்டும் முயன்றால் எந்த இலட்சியத்தையும் எட்டிப் பிடித்து விடலாம்.

ஜி. மதுரராமன், சுங்கை பாக்காப், செப்ராங் பிறை

கே: பூவையர்கள் பூவை அணிகிறார்கள். ஆடவர்கள் ஏன் அணிவதில்லை?

ப: ஆடவர்களும் பூமாலை அணிகிறார்களே!

ப. பத்மாவதி பானு, கோலாலம்பூர்

கே: அன்புள்ள அண்ணா, நான் 16-4-1946-இல் பிறந்தேன். எனக்கு எப்போது திருமணம் நடக்கும் என்று சொல்வீர்களா?

ப: உங்கள் பெற்றோர்கள் முயற்சி எடுத்தால் அடுத்த ஆண்டில் உங்களுக்கு நிச்சயமாகத் திருமணம் நடைபெற்றுவிடும்.

குமாரி சுப்புலெட்சுமி, ஜின் செங் தோட்டம், பாகன்செராய்

கே: புதிய சமுதாயம், பாவையர் பகுதிக்குச் சமையல், வீட்டுக் குறிப்புகள், கட்டுரைகள் அனுப்பினால் பிரசுரிப்பீர்களா?

ப: நிறைய அனுப்புங்கள். புதுமையாகவும் பொலிவாகவும் இருந்தால் பிரசுரிப்போம்.

ரா. மணியம், ரிவர்சைடு தோட்டம், கோலசிலாங்கூர்

கே: அண்ணா, படித்தவர்களில் சிலர் தவறான பாதையில் செல்வதைப் பற்றி நீங்கள் ஆட்சேபம் தெரிவிப்பீர்களா?

ப: படித்தவர்களாக இருந்தாலும் படிக்காதவர்களாக இருந்தாலும் வழி தவறிச் செல்பவர்கள் கண்டிக்கப்பட வேண்டியவர்களே!

எம். ஞானம், புண்டுட் தோட்டம், பேராக்

கே: நான் பெல்டா நிலக்குடியேற்றத்திற்கு இரண்டு முறை மனு போட்டேன். நிலக்குடியேற்றம் திறக்கும் போது பாரம் அனுப்புவதாகப் பதில் வருகிறது. இதற்கு நான் என்ன செய்யவேண்டும்?

ப: தங்கள் ஊரிலுள்ள ம. இ. கா. கிளையின் மூலம் நீங்கள் பெல்டா மனுவைப் பெறுவது எளிதாக இருக்கும்.

அந்தோசின், ச்சா"ஆ ஜோகூர்

கே: புதிய சமுதாயம், அரசாங்க இதழா அல்லது உங்களின் சொந்த முயற்சியால் வெளி வரும் இதழா?

ப: 'புதிய சமுதாயம்' அரசாங்கம் வெளியிடும் இதழல்ல. எங்கள் சொந்த முயற்சியில் வர்த்தக ரீதியில் நடைபெறுகிற மாதம் இருமுறை இதழ். அரசாங்கம் வெளியிடுகின்ற தமிழ் மாத இதழ், "உதயம்" என்பது தங்களுக்குத் தெரிந்திருக்கும்.

கொ. வனிதநாதன், சுங்கை சுமுன்

கே: திரு. முருகு சுப்பிரமணியம் அவர்களே, தங்கள் குடும்பத்தில் எல்லோரும் தமிழ் மொழி படித்தவர்களா?

ப: ஆமாம்.

எம். சேகரன் கமலம், உலுயாம் தோட்டம், ரவாங்

கே: மனிதனால் சாதிக்க முடிந்தது எது? சாதிக்க முடியாதது எது?


ப: சாதிக்க முடிந்தது சந்திரமண்டலப் பயணம், சாதிக்க முடியாதது கடத்தப்பட்ட விமானத்திலிருந்து தப்பிப் பிழைப்பது.

கே: எனக்கு வாழ்க்கையில் அடிக்கடி வெறுப்பு உண்டாவது ஏன்?

ப: வாழ்க்கையில் வருகின்ற ஏமாற்றங்களால் யாருக்கும் வெறுப்பு ஏற்படுவது இயல்பு. ஆனால் அத்தகைய சந்தர்ப்பங்களில் தம் வாழ்க்கையில் கண்டிருக்கும் இன்பங்களை நினைவு கூருவதற்குப் பழகிக் கொண்டால் தன்னையே வெறுக்கும் சங்கடத்திலிருந்து மீள முடியும்.

இரா. பொன்னரசு, சாகில், ஜோகூர்


கே: முருகு அண்ணா அவர்களே! எங்கள் தங்கா வட்டாரத்தில் புதிய சமுதாயம் வாசகர் மன்றம் ஒன்றினை அமைக்கவுள்ளோம். அதற்குத் தாங்கள் கூறும் அறிவுரைகள் யாதோ?



ப: தங்கள் அன்புக்கும் அக்கறைக்கும் நன்றி. முதலில் தங்கள் பகுதியில் அறிமுகக்கூட்டம் நடத்திய பிறகு இப்படியொரு சங்கத்தை நீங்கள் அமைக்கலாம் என்பது என் எண்ணம்.

எம். குணசேகரன் மகேஸ்வரி, பாரிட் புந்தார்

கே: நம் தமிழர்கள் ஏன் குடிப்பதிலும், படம் பார்ப்பதிலும் அதிகம் செலவழிக்கிறார்கள்?



ப: பணத்தின் அருமை பெருமை தெரியாததுதான் காரணம்.

எம். கே. வேலாயுதம், சலிமார் தோட்டம், புக்கிட் ரோத்தான்

கே: புதிய சமுதாயத்தில் வாசகர்கள் தங்கள் கருத்துக் களைத் தெரிவிக்கிறார்கள். இந்தப் பகுதிக்கு, "வேப்பெண்ணெய்", "குழப்ப மில்லாத" என்றெல்லாம் தலைப்புத் தருகிறீர்கள். இதற்கு நிலையான தலைப்பு கிடையாதா? "வாசகர் சங்கம்" எனும் தலைப்பே பொருத்தமானது என்று நான் நினைக்கிறேன். தங்களின் கருத்து என்னவோ?

ப: நிலையான தலைப்பைக் காட்டிலும் ஒவ்வொரு முறையும் புதிய புதிய தலைப்பைப் போடுவது படிக்கின்ற வாசகர்களுக்குச் சலிப்பு ஏற்படாமல் இருப்பதற்காகத்தான். ஒரே தலைப்பு அலுப்பை உண்டாக்கும்.

நா, விஜய் மனோகரன், ஸ்ரீதேவி அம்மு, சிரம்பான்

கே: திருமணம் செய்ய நிச்சயம் செய்த பிறகு அந்த ஆணும் பெண்ணும் பேசிக்கொள்வதும், குடும்பத் தாருடன் சினிமா பார்க்கப் போவதும் தவறு?

ப: தவறில்லை. இந்தப் பழக்கம் மணமக்கள் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்வதற்கும் அன்புப் பிணைப்பு வலுவடைவதற்கும் துணைபுரியும்.

எஸ். ராமையா, உலுபெர்ணம் தோட்டம், தெலுக்கான்சன்

கே: எனக்கு ஒரு மாதமாக மனம் சரியில்லை. அதனால் சாப்பாடு கூடச் சாப்பிட முடியவில்லை. என் உடம்பு இளைத்துப் போய்விட்டது. நான் மீண்டும் பழைய நிலையை அடைய ஒருவழி சொல்லுங்கள்.

ப: கவலைகளை மறந்து வயிறு நிறையச் சாப்பிடுங்கள். நண்பர்களோடு சேர்ந்து படம் பார்க்கச் செல்லுங்கள். கோவிலுக்குக் காலையிலோ மாலையிலோ சென்று ஆண்டவனைப் பிரார்த்தியுங்கள். இதுதான் இளைத்த உங்கள் உடம்பு தேறுவதற்கு வழி.


மா. ஆறுமுகம், காஜாங் தோட்டம், காஜாங்

கே: மொழிப்பற்று, இனப்பற்று, கலைப்பற்று, தொழிற் பற்று ஆகிய எந்தப் பற்றும் இன்றி தூங்கும் நம் சமுதாயத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: நீங்கள் சொல்வது போல் நிலைமை அத்துணை மோசமாக இல்லை. தூக்கம் கலைந்து விழிப்பு ஆங்காங்கு தலை தூக்குவதைக் காண முடிகிறது விரைவில் விழிப்புற்ற பொறுப்புள்ள சமுதாயமாக நமது சமூகம் நடைபோடுவதை நாம் காண முடியும்.

சு. தனபால், ஜெண்ட்ராட்டா தோட்டம், தெலுக்கான்சன்

கே: சார்! "புதிய சமுதாயம்" இதழில் ஏன் அதிகமாக விளம்பரங்களை வெளியிடுகிறீர்கள்? அதனால் வாசகர்களுக்கு ஏற்படும் நன்மை என்ன? அவ்விளம்பரங்களுக்குப் பதிலாகக் கதை, கட்டுரை அம்சங்களை அதிகரிக்கலாமே!



ப: விளம்பரம், எந்தப் பத்திரிகைக்கும் உயிர்நாடி ஆகும். ஒரு தரமான பத்திரிகையை மலிவான விலைக்குக் கொடுக்க வேண்டுமானால் விளம்பரங்களைச் சேர்ப்பது இன்றியமையாதது. உலகெங்கும் வெளியாகும் பத்திரிகைகளை எல்லாம் புரட்டிப் பார்ப்பீர்களேயானால் இந்த உண்மை உங்களுக்குப் புரியும். சிறந்த பத்திரிகைகள் அனைத்தும் தங்கள் வெளியிடும் பக்கங்களில் நூற்றுக்கு முப்பது முதல் ஐம்பது விழுக்காடு வரை விளம்பரங்களை வெளியிடுவதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த விளம்பரங்கள் வர்த்தக வளர்ச்சிக்கு மட்டுமின்றி வாசகர்கள் தரமான பண்டங்களைத் தேர்ந்தெடுத்து வாங்க உதவுகின்றன. ஆகவே விளம்பரங்களை வெறுக்கும் மனப்பான்மையை விடுத்து விளம்பரப் பக்கங்களையும் ஆர்வத்தோடு கண்ணோட்டமிட்டுப் பயனடையும்படி உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

எம். ஜி. ராஜு, கோல தெர்லா, கேமரன் மலை

கே: என் நண்பர் இந்தியாவில் பிறந்தவர். அவரை இரண்டு வயதிலேயே மலேசியாவிற்கு அழைத்து வந்துவிட்டனர். தற்பொழுது அவருக்குச் சிவப்பு அடையாளக்கார்டு. நீல அடையாளக் கார்டுக்கு விண்ணப்பித்து அவருக்குச் சலித்துப் போய்விட்டது. அவருக்கு, பதிலாக (tolak) "நிராகரிக்கப் பட்டுவிட்டது" என்று வந்துவிடுகிறது. குடியுரிமை அவருக்குக் கிடைக்க யாரிடம் முறையிடுவது?

ப: உள்துறை அமைச்சருக்குத் தக்க காரணங்களை விளக்கி முறையீடு செய்ய வேண்டும். ம. இ. கா. உதவியை நீங்கள் இதற்கு நாடலாம்.

கே: நம் "புதிய சமுதாயத்தின்" மூலம் நம் சமுதாயத்திற்குக் நன்மை என்ன?

ப: புதிய சிந்தனையும், புதிய தெம்பும்!

பெ. சண்முகம், மோரிப், பந்திங்

கே. மனிதன் கட்டுப்பாட்டை மீறுவதற்கு முக்கிய காரணம் என்ன?

ப: அவனுள்ளே உறைந்து கிடக்கும் சுதந்திர உணர்ச்சியே இதற்குக் காரணம்.

ஜி. குணசேகரன், கம்போங் துன் ரசாக், பூச்சோங்

கே: மறைந்த தமிழ்வாணன் தங்களின் மாணவராமே?
ப: தமிழ்வாணன் என்னுடைய மாணவர் என்பது தவறு. அவர் என்னுடைய நெடுங்கால பத்திரிகைத் துறை நண்பர்.

கே: நான் ஒரு மாணவன். படித்துக் கொண்டே சிறு வியாபாரம் செய்கிறேன். இம்மாதிரியான தொழிலை ஒரு மாணவன் செய்யலாமா?

ப: தாராளமாகச் செய்யலாம். படிப்புக்குக் குந்தகம் இல்லாமல் மட்டும் பார்த்துக்கொள்ளுங்கள்.

எம். எஸ். ராஜா, கோலாலம்பூர்

கே: கல்யாணம் ஆன பிறகு குடும்பத்தில் பல பிரச்சனைகள் ஏற்படலாம். அவற்றையெல்லாம் பெண்கள் மற்றவர்களிடம் சொல்லலாமா?

ப: கூடவே கூடாது. சொந்தக் குடும்பப் பிரச்சனைகளை வெளியில் பேசும் பெண்களைப் பொறுப்பான இல்லத்தரசிகளாகக் கருத முடியாது.

எம். மீனாட்சி, சிரோ தோட்டம், ரவுப்

கே: "எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே. அவர் நல்லவர் ஆவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பதிலே" என்பது பாடல். 16 வயது ஆனவுடன் அன்னை சொல்லும் நற்பண்புகளை மறந்து அவர்கள் இஷ்டம்போல் அலையும் பிள்ளைகளை எப்படித் திருத்துவது?

ப: நல்ல வார்த்தைக்குக் கட்டுப்படாத பிள்ளைகளைப் பிரம்பால் அடித்துத் திருத்த வேண்டியது பெற்ற அன்னையின் பொறுப்பு.

பி. ஏ. கௌரி மணியம், கிடாங்சா, தஞ்சோங் மாலிம்

கே: அண்ணா, நான் சித்திரம் வரைந்து அனுப்ப விருப்பங் கொண்டுள்ளேன். ஆனால் எந்தக் காகிதத்தில் எந்தப் பென்சிலால் தீட்ட வேண்டுமென்று எனக்குத் தெரியாது. அதனை விளக்கிக் கூறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ப: டிராயிங் பேப்பரில் இந்தியன் இங் எனப்படும் கறுப்பு மையைக் கொண்டு சித்திரங்கள் தீட்ட வேண்டும்.

செல்வராஜு குமரன், புக்கிட் ராஜா, கிள்ளான்

கே: மனிதன் என்பவன் எப்போது தெய்வமாகிறான்?

ப: கருணைக் கடலாகத் திகழும் போது.


எஸ். எஸ். சிங்கம், மெரோட்டாய் தோட்டம், தாவாவ், சபா

கே: மூட நம்பிக்கையால் பணத்தை வீணாக்குபவர்களைப் பற்றித் தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: மூடர்கள்.

வினோதினி, தெலுக்பாரு தோட்டம், சுங்கை சுமுன்

கே: ஆண்களிடம் மரியாதையின்றிப் பேசும் வாயாடிப் பெண்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?



ப: பெண்கள் ஆண்களிடமும் சரி, தங்கள் சகோதரிகளிடமும் சரி, மரியாதையோடு பேசுவதே முறையாகும். வாயாடிப் பெண்கள் வீண் வம்புகளையே வாங்கிக் கட்டிக் கொள்வார்கள்.